Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර්

ஆக.12-18, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 420

# தடுமாறும் தமிழ்க் கட்சிகள்

# தலைநகரில் காத்திருக்கும் அபாயம்



## போலி அரசியல்வாதிகளைத் தோலுரிக்கிறார் கமல்

## கேட்கக் கூடாத கேள்விகளைக் கேட்கிறார்கள்

## ஆன்மீகம்

### மனம் தான் முதல் எதிரி



கடுந்தவம் புரிந்தான் பக்தன். அது கண்டு மகிழ்ந்து அவன் முன்தோன்றிய கடவுள். "பக்தா! உன் தவத்திற்கு மெச்சினேன். நீ வேண்டும் வரம் கேள்!" என்றார். "இந்த உலகில் எனக்கு விரோதிகளே இருக்கக்கூடாது. என் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள என் எதிரிகளை எல்லாம் அழிக்க வேண்டும்" என்று வரம் கேட்டான். "அப்படியே ஆகட்டும்" என்று புன்முறுவல் பூத்தபடி மறைந்தார் கடவுள்.

அடுத்த வினாடி. ஒரு மயில் பறந்து வந்து பக்தனின் மார்பின் மீது கொத்தியது. பக்தன் நிலை குலைந்து கீழே விழுந்தான். அடுத்த தாக்குதலுக்குள் மீண்டும் கடவுளை அழைத்தான். "இறைவா, நான் எதிரிகளை அல்லவா அழிக்கச்சொன்னேன். மயில் என்னை அல்லவா தாக்குகிறது. தங்கள் குறி தவறிவிட்டதா?" என்று அலறினான்.

"உன் நல்வாழ்விற்குத் தடையாக உள்ள உன் எதிரிகளை அழிக்கும்படி நீதானே கேட்டாய்? பிறரைத் தாக்க வேண்டும் என்று நினைக்கும் உன் மனம்தான் உன் முதல் எதிரி, அதுதான் உன் முன்னேற்றத்திற்குத் தடை, அதனால்தான் மயில் மனம் இருக்கும் மார்பைக் கொத்தியது." இதைக் கேட்ட பக்தனுக்கு அப்போதுதான் ஞானம் பிறந்தது.

ரீ. குணவர்த்தன, களுவாஞ்சிக்குடி.

### மனைவியின் கடமைகள்

மனைவி தன் கணவனுக்குப் பணிந்து நடக்கவேண்டுமென்றும், தனக்குரிய உரிமைகளை அவரிடத்தே பெற வேண்டாமென்றும், பரிசுத்த இஸ்லாம் பெண்கள் மீது விதித்துள்ளது.

"பெண்களுள் சிறந்தோர் யார்?" என நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டபோது, அதற்கு அவர்கள், "சிறந்த பெண், கணவன் தன் முகத்தைப் பார்க்கும் சமயம் அவரை ஆனந்தத்தில் ஆழ்த்துவாள். கணவரின் கட்டளைக்கு அடிபணிவாள். தன்னை விட்டும் கணவர் வெளியே சென்றதும் தம் உடமைகளையும், குழந்தைகளையும், தன் கற்பையும் பாதுகாப்பாள். மேலும், தொழிலுக்குச் சென்ற கணவர் பகல் முழுவதும் பாடுபட்டு களைப்புடன் வீடு வந்து, தன் முகத்தை நோக்கும்போது, அவரின் கவலையெல்லாம் பறந்தோடும் முறையில் சிரித்த முகத்துடன் காட்சியளிக்க வேண்டும். கணவன் வந்த உடனேயே பகல் முழுவதும் தனக்கேற்பட்ட துன்பங்கள், உறவினர்களால் வீசப்பட்ட வசைச் சொற்கள் போன்றவற்றை எடுத்துக்கூறி முறையிடலாகாது என நபியவர்கள் பதில் கூறினார்கள்.

(ஆதாரம்: திர்மிதி)

வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

### நித்திய ஜீவன்

"என் ஆடுகள் என் சத்தத்திற்கு செவி கொடுக்கிறது. நான் அவைகளை அறிந்திருக்கிறேன். அவைகள் எனக்குப் பின் செல்கிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்."

யோவான் 10: 27,28

"மனிதனுடைய வாழ்க்கை பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதன் மேன்மையாது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய் கடந்து போகிறது. நாங்களும் பறந்துபோகிறோம்" என்று சங்கீதக்காரன் 90:10ல் கூறுவதைப் பார்க்கிறோம். மனுஷனுடைய ஆயுசு நாட்கள் முடிந்து தமக்கு மரணம் நேரிடுமானால் எல்லாம் முடிந்து விட்டது என்று எண்ணுகிறார்கள். ஆனால் மரண நாளானது நித்திய வாழ்வுக்கு ஆரம்ப நாளாகும்.

இந்த நித்திய வாழ்க்கையில் மனிதன் என்றும் மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய மோட்ச வாழ்வை அல்லது என்றும் வேதனைப்படுகிற நரக வாழ்வை அடைகிறான். இயேசுவைப் பின்பற்றுகிறவர்களுக்கு நித்திய மோட்ச வாழ்க்கையை வாக்குப் பண்ணியிருக்கிறார்.

ஆகவே நம்முடைய செய்கைக்குத் தக்கதாக நித்திய மோட்ச வாழ்வையோ அல்லது நரக வாழ்வையோ பெறுவோம்.

தி. தேவபாலன், மட்டுநகர்.

## கவிதைப் போட்டி இல.420



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.08.2001

கவிதைப் போட்டி இல.420
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.417

### பரிசுக்குரிய கவிதை

#### மன்னித்துவிடு!

நாணய விலையேற்றம்
நாக பாம்பாய்
படமெடுக்க,
நாளைய கஞ்சிக்கு
நாமே அல்லாடும்
போது, உன்னை
நினைக்க எமக்கு
நேரம் ஏது?

எஸ். ஆனந்தசேகரன்-இரத்தினபுரி.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



#### ஓடிவிடு!

உண்ண உணவின்றி
உழன்றுக் கொண்டிருக்கின்றனர்,
உள்ள உணவையாவது
உவகையுடன் உண்டு விட்டு
உற்சாகத்துடன் ஓடிவிடு!
இல்லையெனில்,
உன்னையும் சந்தேகத்தின் பேரில்
உள்ளே தள்ளி விடுவார்கள்!

செல்வி. அ. கவிதா-பசறை.

#### கேட்டுப்பார்!

மலருக்கு மலர்
தாவுதல் பற்றி
வண்டிடம் கேட்டுப்பார்!
மரத்துக்கு மரம்
தாவுதல் பற்றி
குரங்கிடம் கேட்டுப்பார்!
கட்சிக்கு கட்சி
தாவுதல் பற்றி
அரசியல்வாதியிடம் கேட்டுப்பார்!!

யாழினி-மட்டக்களப்பு.

#### புகட்டுவார் யாரோ..?

மக்களைக் காப்பது பாராளுமன்றா
பாராளுமன்றைக் காப்பது மக்களா?
யாமறியோம் பராபரமே!
உன்னைக் காப்பது தொடரும் நாயா இல்லை
நாயைக் காப்பது நீயா ந(டை)ட ராசா
விடை தெரிந்தும் தெரியாதோர் பலர்

சத்தி பிரபாகரன்-ஈவினை.

#### இயலாமை

பாய்ச்சல் போடும் எங்களுக்கு
இன்றைய உலகில் எதிர் நீச்சல்
போடத் தெரியவில்லை;
நாங்களும் மூழ்கிவிட்டோம் மதுவுக்குள்
மானிடனைப் போல!

எஸ். ஆர். அஸ்மரா-புத்தளம்.

#### அழிவுப் பாதையிலே

அழிவின் பாதையிலே
மனமிங்கு மாறுதடா!
மானிடமே மரணிக்குது
ஆசனத்தின் அமர்வினிலே
அழைப்பு உனக்குமா...?

தெ. லோஜனா-கொழும்பு-06.

#### நிச்சயம்!

உன்னில் இருந்து
பிறந்தவன் மனிதன் என்பதாலா,
குடி கெடுக்கும் குடியை நீ
குவளையிலே குடிக்கின்றாய்;
நாகரீகம் எல்லை மீறி
நீ நாணிக் கோணிக் குடித்தாலும்,
நாளை நாறிப் போன உடம்பு
நடு வீதியிலே தான் கிடக்கும்!

ஹப்புத்தளையூர் மனோ கோபாலன்.

#### ஆட்சி புரிவாயா?

குரங்காரே!
உன்னில் இருந்து
பிறந்த மனிதன்
யுத்தத்தினால் அழிந்து
விட்டால்;
மனிதனின் இடத்தில்
நீதான் இருந்து
ஆட்சி புரிவாயா?

ஜெ. லக்கி-பெரியகல்லாறு.

#### ம(ா)து!

உயிரே...
உனையன்றி
துணையுமில்லை...
இனி உனக்கு ஏதும்
இணையுமில்லை...!

ஐ. கோடீஸ்வரன்-கொழும்பு-11.

#### விண்ணப்பம்!

மனித உடை
அணிவித்து
வழிபாட்டுக்குரிய
என்னையும்
இழிநிலைக்கு
இழுத்துச்
செல்லாதீர்...!

அ. சந்தியாகோ-கண்டி.

#### கவிதை

பாலும் பழமும்
தந்தென்ன?
சுதந்திரமாய்
வாழ விடவில்லையே
என்ற
வருத்தத்தில் வாடுதோ
குரங்கு!

சு. புருஷோத்மன்-அக்கரைப்பற்று.

#### மந்தியின் வாழ்க்கை

மாண்பு மிக்க மனிதம்
தாழ்ந்து நிற்பதாலே
மந்தி வாழும் வாழ்க்கை
மனிதனைவிட மேன்மை.

ஏ.ஜே.எம். ப்ரிந்தா-சத்துருக்கொண்டான்.

#### உப்புக் கஞ்சி

மேலை நாட்டில் குரங்குக்கும்
மேசையில் சிக்கன் சூப்
இங்கோ எங்களுக்கு
முகாமில் உப்புக்கஞ்சி!

வி. சிவா-திருகோணமலை.

## உங்கள் பக்கம்

### சித்திரவதை ஒரு சர்வதேச குற்றம்

சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச அபிப்பிராயம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது. சித்திரவதை என்பது ஒரு சர்வதேச குற்றமாக கணிக்கப்படுகின்றது. அதைச் செய்தவர் எங்கு சென்றாலும் எத்தனை வருடம் கழிந்திருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டுமென சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த சாசனத்தில் கைச்சாத்திட்டுள்ள பல நாடுகள் இச்சட்டத்தின் பிரகாரம் வேறு நாடுகளில் குற்றம் புரிந்த பலரை தண்டித்துமுள்ளன. பிறிதொரு நாட்டில் குற்றமிழைத்தவருக்கு எப்படிப் போனாலும் இலங்கையில் இத்தகைய செயல்களை புரிந்தவர்கள் கூட இங்கு தண்டிக்கப்பட்டது கிடையாது.

இலங்கையில் சித்திரவதை என்பது அநியாயமான ஒரு செயலாகவே கருதப்படுவதில்லை. அந்த அளவுக்கு இங்கு அடிப்படை உரிமைகளுக்கான கௌரவம் பேணப்படுவதில்லை.

ஏதேனும் ஒரு குற்றத்திற்காக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர் தகவல் பெறுதல், பழிதீர்த்தல் அல்லது இனரீதியிலான வக்கிர உணர்வு என்ற 3 காரணங்களின் கீழ் அன்றேல் இவற்றில் ஏதேனும் ஒன்றின்கீழ் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.

அவ்வாறு செய்யக்கூடாதென சட்டம் உத்தரவிடுகிறது. ஆனால் அதை அமுல் செய்பவர்கள் அதனை மதிப்பதில்லை. சட்டத்தை மீறி சித்திரவதையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் எண்ணற்ற தடங்கல்கள். இது வேறு பிரச்சனை; இத்தகைய சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் உள ரீதியில் வழங்கப்படும் நிவாரண உதவிகளும் எமது நாட்டில் மிகக் குறைவாகவே கிடைக்கின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருளாதார ஈழப்பீடுகளை வழங்கி அவர்களுக்கு புனர்வாழ்வளிக்க ஏராளமான அரசாங்க, அரச சார்பற்ற அமைப்புக்கள் செயற்படுகின்ற போதும் பாதிக்கப்பட்டவர்களின் மிக அத்தியாவசிய தேவையான உளவியல் ரீதியிலான சிகிச்சைகளை பெற்றுக்கொடுக்கும் அமைப்புகள் மிகவும் குறைந்த அளவிலேயே செயற்படுகின்றன.

சித்திரவதைக்கு உள்ளானவர்கள் அல்லது போரினால் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் மோசமான உளவியல் தாக்கத்துக்கு உட்பட்டவர்களாகவே இருப்பர். இத்தகையவர்கள் உளவியல் ரீதியில் முறையாக நிலை நிறுத்தப்படாதவிடத்து பொருளாதார உதவிகள் முழு அளவிலான பலனைத்தரும் என எதிர்பார்க்க முடியாது.

யுத்தத்தோடு சம்பந்தப்பட்ட காரணங்களுக்காக சித்திரவதை செய்யப்பட்ட பலர் பல வருடங்கள் கடந்தும் கூட அதன் பாதிப்பில் இருந்து விடுபட முடியாமல் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

பயம், சமூகத்தோடு ஒன்றாக வாழ முடியாமை, மனவிரக்தி, தாழ்வு மனப்பான்மை என்று ஏராளமான பிரச்சனைகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர். இவற்றை நீக்கி அவர்களது மன நிலையை சீர்செய்யும் வரையில் பொருளாதார உதவிகளை பெற்றபோதும் அவற்றை முறையாகப் பயன்படுத்தி தமது வாழ்வை சுமுக நிலைக்கு கொண்டு வருவதில் சித்திரவதைக்கு உள்ளானோர் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் வழங்கும் அமைப்புக்களில் குடும்ப புனர்வாழ்வு நிலையம் (FRC) என்ற அமைப்பே இதுவிடயத்தில் கூடுதல் ஆர்வம் காட்டி சிறப்பான சேவையை வழங்கி வருகின்றது.

இந்த செயற்பாட்டில் அண்மைக்காலங்களாக வேறுசில அமைப்புக்களும் இணைந்துள்ளன.

சித்திரவதைகள் ஒழிக்கப்பட வேண்டும். அது சாத்தியமாகும்வரையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான சிகிச்சைகளேனும் முறையாக வழங்கப்பட வேண்டும்.

எஸ். அருண்-மட்டக்களப்பு

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

## வாசக[ர்] சாலை

### உன்சேவையின் தேவை!

அன்பின் தினமுரசே!

நீ தினந்தோறும் எம்மை வந்தடையா விட்டாலும் வாரத்தில் ஒருமுறைவந்து எம்மை மகிழ்விக்கின்றாய். எவ்வாறு என்றால் ஒரு தாய் தனது குழந்தையை பெற்றெடுத்தவுடன் எவ்வாறு மகிழ் கின்றாளோ அதையும் தாண்டி புனிதமாக எம்மை மகிழ்விக்கின்றாய். உன் சேவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து இயங்க என் வாழ்த்துக்கள்.

என்.எம். இம்தியாஸ், மருதமுனை.

இன்றைய அரசியல், யுத்த நிலைமைகளை யதார்த்தமாக எடுத்துக் கூறுவதென்றால் அது நிச்சயம் தினமுரசுதான். மற்றும் அண்டை மண்டலத்தின் மூலம் அவ்வப்போது இந்திய அரசியல் நிலைமைகளை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இதுபோல் என்றும் தொடர்க முரசின் பணி!

ஏ.எல். முஹம்மட் றஸ்மி, அட்டாளைச்சேனை-02.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

29.07.2001 முரசில் இரா. பத்மநாதன் அவர்கள் எழுதிய 'சிவாஜியின் கட்டளையை மீறியமைக்கான தண்டனை' கட்டுரை படித்தோம்.

நடிப்புலகின் சிகரமாகத் திகழ்ந்த சிவாஜி கணேசன் அவர்களின் கலைத்துறை வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்களை சுவைபட எடுத்து விளக்கிய இரா.பத்மநாதன் அவருக்கு எமது நன்றி. மேலும் கவிதாவின் 'துணை' சிறுகதை உள்ளத்தை உருக்கிய அருமையான படைப்பு. பாராட்டுக்கள்.

மங்களா வாமதேவன்-தங்களா வாமதேவன், மட்டக்களப்பு.



முரசே, இக்காலத்தில் வக்காலத்து வாங்கிக்கொண்டு வாழும் உலகில், உள்ளதை உள்ளபடியாக உண்மைகளை ஊரறிய வைத்து, வாசக நெஞ்சங்களில் நிலைத்திருக்கும் முரசே, உன் உண்மையான சேவைக்கு என் வாழ்த்துக்கள். தங்கு தடையின்றி தடைகளைத் தகர்த்து தரணியில் வந்து தவழ்ந்திரு. தமிழ் பேசும் நெஞ்சங்களுக்கு, தினம் வீர முரசறைந்திரு. உன் தமிழ் பணி தொடரட்டும்.

மணிவேல் ருத்ரா, செல்வகந்த.

தேனிலும் இனிய முரசே!

வாரத்தில் ஒரு முறை வந்து, வாசகர் மத்தியில் இடம்பிடித்த இனிய முரசே! உனது இனிய சேவையை என் போன்ற வாசகர்கள் பாராட்டாமல் எப்படி இருக்க முடியும்?

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். நாட்டு நிலைமைகளையும், பரபரப்புச் செய்திகளையும் தெட்டத் தெளிவாக வெளிக்காட்டி வருகின்றாய். உனது இனிய பணி தொடர எனது வாழ்த்துக்கள்.

எம்.ஏ. அன்வர், காங்கேயனோடை-13.

### சூப்பரோ சூப்பர்

முரசின் முன்னேற்றம் வாரா வாரம் மெருகேற்றம்! அறிவூட்டும் 'ஆன்மீகம்', தேன் அமுதூட்டும் 'இலக்கிய நயம்', பரபரப்பூட்டும் 'உங்கள் பக்கம்', படைப்புக்களை விமர்சிக்கும் 'வாசகர்சாலை', களம் படைக்கும் 'கவிதைப் போட்டி', உண்மையை இடித்துரைக்கும் ஆசிரியர். வணக்கம் கூறி வாசகர்களுக்காக எழுதும் 'முரசம்' தரும்-மடல். 'அண்டை மண்டல'த்தை அலசுவதில் அப்பப்பா... கானகன் சமர்த்தன். அரசியல் கட்டுரைகள் அனைத்தும் சொல்லி வேலையில்லை. சூப்பரோ சூப்பர்!

சுந்தரத் தமிழ் முரசில், சூடு-சுவை-சுவாரசியம் நிறைந்த உண்மைப் படைப்புக்கள். அதிரடிக்கு ஐயா... துரைதான்! அதிசயங்களை அறிந்து தரும் 'தகவல் பெட்டி', அற்புதப் படைப்பு 'தேன் கிண்ணம்', இன்னும் பலப்பல ஆக்கங்கள் இடம்பெறும் முரசை எல்லோரும் படிக்கலாம்!

கவிக்குயிலன்-சேனையூர்-06.

முரசே! இலங்கைத் தீவிலே, அறிவு எனும் கடலில் மூழ்கி எடுத்த உன்னை, ஒரே மூச்சாக ஒரே நாளில் வாசித்து விடுகிறேன். உன் ஊற்றிலிருந்து அடுத்த துளி வரும் வரை காத்துக் கொண்டிருக்கிறேன்.

நீ சுமந்து வரும் சுஜாதாவின் புதிய தொடரான 'அனிதாவின் காதல்கள்' ஆரம்பமே அமோகம். அடுத்த கட்டத்துக்காக காத்திருக்கிறேன். முரசே! உன்பணி மேலும் தொடர என்றும் என் வாழ்த்துக்கள்.

ந. சிதம்பரம், பதுளை.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# சர்வஜன வாக்கெடுப்பு அக்டோபர் 18ம் திகதிக்கு ஒத்திவைப்பு!

## எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும் என ஜனாதிபதி நம்பிக்கை

எதிர்வரும் 21ம் திகதி நடத்தப்பட விருந்த சர்வஜன வாக்கெடுப்பு அக்டோபர் 18ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள அரசியல் யாப்பில் அவசியமான திருத்தங்களைக் கொண்டு வர எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்க உறுதியளித்திருப்பதால் அதற்கு வாய்ப் பளிக்கும் வகையில் உத்தேச சர்வஜன வாக்கெடுப்பை ஒத்திவைக்க தீர்மானித்த தாக ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.

நாட்டின் நலன் கருதியும் நிருவாக ஜனநாயகம் கருதியும் புதிய அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டுமென சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களும் உடன்பாடு கண்டிருப் பது குறித்து ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு முடிவு செய்ததன்மூலம் மக்கள் மத்தியில் அரசியல் அமைப்பு மாற்றம் தொடர்பாக தேவை உணரப்பட்டிருப்பதாகவும் அதற் கான ஆதரவும் வழங்கப்பட்டிருப்பதாக வும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இடைப்பட்ட காலத்தில் எதிர்க்கட்சி களுடன் அரசியலமைப்பின் தொடர்பில் கருத்தொருமிப்புக்கு வர முடியும் என்று நம்பிக்கை தெரிவித்திருக்கும் திருமதி குமாரதுங்க அவ்வாறு நிகழாத பட்சத்தில் அக்டோபர் 18ம் திகதி நேரடியாக மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்கப் பின்நிற்கப் போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை சர்வஜன வாக்கெடுப் புக்கு மக்கள் எதிர்ப்பு கடுமையாக இருந்த தாலேயே அதை பின்போட அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததென ஐக்கிய தேசிய கட்சி கூறியுள்ளது.

பெருந்தொகைச் செலவில் இந்த வாக்கெடுப்பை நடத்துவது குறித்து இலங்கைக்கு உதவி வழங்கும் பல வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் அரசாங்கத்துக்கு தமது அதிருப்தியை தெரிவித்து வந்ததாக இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## தொப்பிகல காட்டுப் பகுதியில் விமான குண்டு வீச்சு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொப்பிகல காடுகளுக்கு மேலாக கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. விடுதலைப்புலிகளின் இலக்குகளை நோக்கி இக்குண்டு வீச்சு மேற்கொண்டதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

இக்குண்டு வீச்சுச் சம்பவம் செவ்வாய் கிழமை காலை 10.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரானுக்கு மேற்கேயுள்ள தொப்பிகல மற்றும் அதனோடு அண்டிய மீயான்கற் குளம், பெண்டுகள் சேனை போன்ற பகுதி களிலேயே இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

குண்டுகள் வெடித்து சிதறியதன் காரணமாக காடுகளின் சில பகுதிகள் தீப் பிடித்து எரிந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தாக்குதலில் புலிகளின் முகாம் கள் அழிக்கப்பட்டதா என்பது குறித்து விசேட ஊடக தகவல் நிலையத்தின் அறிக் கையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## எயிட்ஸ் நோயாளிகளில் 7 சதவீதமானோர் வடக்கு-கிழக்கில்!

இலங்கையில் எச்.ஐ.வி. நோய் பீடிக் கப்பட்டுள்ளவர்களாக இனங்காணப்பட்டி ருப்பவர்களில், 7% சதவீதமானோர் வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக் கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மற்றும் எல்லைப்பிர தேசங்களில் உள்ள மக்கள் யுத்தம் காரண மாக இடம் பெயர்ந்து முகாம்களிலும், நெருக்கடியான இடங்களிலும் வசிக்கின் றார்கள். இவர்கள் எச்.ஐ.வி. எயிட்ஸ் குறித்து எவ்வித அறிவையும் பெற்றவர்களாக இல்லை. இதன் விளைவாகவே இந்நோய் ஆபத்து அதிகத்திருக்கின்றது.

அத்தோடு இப்பிரதேச மக்கள் தென் னிந்தியாவுடனும் நெருங்கிய தொடர்பு களை கொண்டிருக்கின்றார்கள்.

இதனால் தவறான பாலியல் உறவுகள் காரணமாக இந்த பிரதேசங்களில் எயிட்ஸ் அபாயம் இருக்கிறதென கொழும்பில் நடை பெற்ற சுகாதார மாநாடொன்றில் தெரிவிக் கப்பட்டது. ■

## தேர்தல் ஆணையாளரிடம் ஆவணங்களை சமர்ப்பித்தவுடன் கட்சித் தலைவராகிவிட முடியாது என்கிறார் ரவூப் ஹகீம்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் தாமே என்று ரவூப் ஹக்கீம் அறிவித்துள்ளார். ஹிஸ்புல்லா தான் தலைவர் எனக் கூறி அறிக்கையை விட்டு ஆவணம் சமர்ப்பித்து தம்மை நீதிமன்றத் திற்கு இழுக்க முயற்சி செய்வதாக கூறிய ரவூப் ஹக்கீம் முஸ்லிம் காங்கிரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சி செய்து வருவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

கடந்த சனிக்கிழமை இரவு முன்னாள் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா விடுத்த அறிக்கையொன்றில் கட்சியின் உயர் பீடம் தன்னை முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக தெரிவு செய்துள்ளதென குறிப்பிடப்பட்டிருந்தது.

தன்னை தலைவராக தெரிவு செய் துள்ளமை தொடர்பான ஆவணங்களை தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பித்த ஹிஸ்புல்லா அவற்றை ஏற்றுக்கொள்ளு மாறு கோரும் மனுவொன்றையும் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கியிருந்தார்.

இந்நிலையில் செய்தியாளர் மாநா டொன்றில் கருத்துத் தெரிவித்த ரவூப் ஹக்கீம் கட்சித் தலைவர் என்றுகூறி தேர்தல் ஆணையாளரிடம் எவருக்கும் போய் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியும் அவர் அவற்றை ஏற்றுக்கொள்ளுவார். உடனடி யாக விசாரணைகள் நடத்தப்படுவதில்லை. இது தற்போதைய தேர்தல் சட்டத்திலுள்ள ஒரு விடயம். யார் எதைச் சொன்னாலும் தானே முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவ ரென ரவூப் ஹக்கீம் கூறினார்.

இதேவேளை ஹிஸ்புல்லா தலைவராக தெரிவுசெய்யப்பட்டார் என்ற செய்தி வெளியானதும் கிழக்கு மாகாணத்தில் சில இடங்களில் பட்டாசு கொழுத்தி மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. ■

## முகமூடி மனிதனைத்தேடும் கட்டுநாயக்க விசாரணையாளர்கள்

கட்டுநாயக்க விமானப்படை தளம் மீதும், விமான நிலையம் மீதும் புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்கு உதவிய மர்ம முகமூடி மனிதன் குறித்து விசாரணைகள் நடைபெறுகின்றன.

தாக்குதலுக்கு முன்னர் கரும் புலிகள் தங்கியிருந்த விளையாட்டுத் திடலுக்கு பக்கத்திலுள்ள மறைவிடமொன்றிலிருந்து முகமூடி அங்கிகள் சில சி.ஐ.டி. பொலிஸா ரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாக வைத்தே சி.ஐ.டி.யினர் இந்த சந்தேகத்துக்கு வந்துள்ளனர்.

கறுப்பு நிற முகமூடியை அணிந்து கொண்டு கரும்புலிகளுக்கு விமானப்படை தளத்துக்கான வழியை காட்டிவிட்டு இவர் தப்பியிருக்கலாம் என்ற சந்தேகமும் எழுப் பப்படுகிறது.

வழியை காட்டி விட்டு திரும்பிய இவர், தமது முகமூடியை கழற்றி மறைத்து வைத்திருக்க வேண்டுமெனவும் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

கரும்புலிகளுக்கு விமானப்படை தளத்தினூடாக வழிகாட்டிய முகமூடி விமான படைத்தளத்தில் கடமையாற்றுபவ ராக இருக்கலாம் அல்லது விமானப்படை தளத்தைப்பற்றிய விபரங்களை நன்கறிந்தவ ராக இருக்கலாம் என்று சி.ஐ.டி. பொலி ஸார் சந்தேகிக்கின்றனர்.

துணியாலான முகமூடி அணிந்து கரும்புலிகளுக்கு வழிகாட்டிய இந்நபர், மீண்டும் விமானப்படை தளத்தை விட்டு வெளியேறி தனது முகமூடியை கழற்றி விளையாட்டு திடலில் எறிந்துவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என்று சி.ஐ.டி பொலி ஸார் கருதுகின்றனர்.

இவர் கரும்புலிகளுடன் தொடர்பு கொள்வதற்காக பயன்படுத்திய ரேடியோ கருவியொன்றும் விளையாட்டு திடலில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. கரும்புலிகள் விட்டுச் சென்ற கிரனேட்டுகள், ஆர்.பி.ஜிகள். ஆகியனவற்றை பொதி செய்வதற்கு பயன் படுத்தும் பொருட்களும் எஞ்சிய உணவுப் பொருட்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க தாக்குதல் குறித்து பல கோணங்களில் விசாரணை நடைபெற்று வருகின்றது. ■

## புலிகளின் அழைப்புக் கடிதங்கள்

புலிகள் இயக்கத்தின் வருவாய்ப் பகுதி -நிதித்துறையினரால் முஸ்லிம் வர்த்த கர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப் பப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பகுதிகளின் வர்த்தகர்களுக்கே இவ்வாறான கடிதங்கள் அனுப்பப்படுகின் றன. நிதி வசூலுக்காகவே புலிகள் அழைப் புக் கடிதங்களை அனுப்பி வருகின்றனர் என்று தெரியவருகின்றது.

"குறித்த திகதிக்கு முன் எமது அழைப்பை ஏற்று எம்மைச் சந்திக்காது விட்டால் அது எமது இயக்கத்தை ஏமாற்ற நினைக்கும் செயலாகக் கருதப்படும். பின்னர் நாங்கள் அங்கு வந்து சந்திக்க வேண்டிவரும்" என்று அந்தக் கடிதங்களில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. ■

## ராஜீவ் காந்தி கொலையாளிகளுக்கு செப்டம்பர் 18ல் தூக்கு?

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறி வாளன் ஆகிய மூவருக்கும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 18ம் திகதி தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் எனத் தெரியவருகிறது.

1991ம் ஆண்டு மே மாதம் 21ம் திகதி ஸ்ரீ பெரும்புதூரில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்ட மேடையை நோக்கி வந்துகொண்டிருந்த ராஜீவ் காந்தி புலிகளின் தற்கொலை குண்டு தாரியினால் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையின் முடிவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இந்த மூவரும் தற்போது வேலூர் சிறையில் சிறைவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது மரண தண்டனையைக் குறைக்கும்படி கோரி இந்திய ஜனாதிபதிக்குக் கருணை மனு ஒன்றை அனுப்பினார்கள். அந்த மனு பரிசீலனையில் உள்ளது.

இதற்கிடையில், ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளிகளுக்கு மரணதண்ட னையை நிறைவேற்றும்படி காங்கிரஸ் கட்சி, தமிழக அ .தி.மு.க அரசை வற் புறுத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால், அடுத்த மாதம் (செப்டம்பர்) 18ம் திகதி முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் தூக்கிலிடப்பட அரசு முடிவு செய்துள்ளது என அகாலி தள தலைவர் சிம்ரஞ்சித்சிங் மான் சண்டிகாரில் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குற்றவாளிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்திரசேகரன் கருத்துத் தெரிவிக்கையில், "ஜனாதிபதியிடம் அளிக்கப்பட்டுள்ள கருணை மனு இன்னும் நிராகரிக்கப்படவில்லை. அது பரிசீலனை யில் இருக்கிறது. அதன் முடிவு தெரிந்த பிறகுதான் தண்டனை நிறைவேற்றப்படும் திகதி தெரியவரும்" என்றார். ■

## புலிகளின் புதுவிதமான மரண தண்டனை

மின் கம்பத்தில் கட்டிவைத்து துப் பாக்கியால் சுட்டு மரண தண்டனை நிறைவேற்றும் புலிகள் இம்முறை சற்று வித்தியாசமான விதத்தில் ஒருவருக்கு மரண தண்டனை வழங்கியுள்ளனர்.

புலிகள் இயக்க முன்னாள் உறுப்பின ரான கே.தவராஜா என்பவர் புலிகளின் முக்கிய உறுப்பினர்களைக் கொல்வதற்காக அதி சக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு களைக் கொண்டு வந்திருந்தார் என்பதற் காக புலிகளால் கைது செய்யப்பட்டிருந் தார்.

விசாரணை முடிவில் அதே கிளை மோர் குண்டை அவர் முன்னாலேயே பொருத்தி வெடிக்கச் செய்து அவரைச் சின்னாபின்னமாகக் கொன்றொழித்து மரண தண்டனை நிறைவேற்றினர்.

இந்த சம்பவம் கடந்தவாரம் மட்டக் களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிண்ணையடியில் இடம்பெற்றது. ■

## மின்கோபுரங்களை திருத்த அனுமதியில்லை

கிழக்கில் புலிகளால் சேதப்படுத்தப் பட்டுக் கிடக்கும் மின்கோபுரங்களையும், மின் கம்பங்களையும் திருத்தம் செய்வ தற்கோ, புதியவற்றை நடுவதற்கோ புலிகள் அனுமதி மறுத்துள்ளனர் என்று கூறப் பட்டுள்ளது. பெரிய போரதீவில் மூன்று மின் கோபுரங்களையும், மைலம்பாவெளி யில் மூன்று மின் கம்பங்களையும் கடந்த மாதம் புலிகள் சேதப்படுத்தினர். ■

## சமூர்த்தி உதவி 20 சதவீதத்தினால் குறைப்பு

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளுக்குமான சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய சமூர்த்திக் கொடுப்பனவு அட்டைகள் இம்மாதம் முதல் 20 வீதத்தால் குறைக்கப்பட்டே அனுப்பப்பட்டுள்ளன.

இதனால் இதுவரை சமூர்த்தி உதவி பெற்று வந்த குடும்பங்களில் யாருக்கு வழங்கக் கூடாது என்பதைத் தீர்மானிப் பதில் சமூர்த்தி அலுவலர்கள் பெரும் சிக்கலை எதிர்நோக்கியிருக்கிறார்கள்.

அதேவேளை சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களின் பட்டியலிலிருந்து தம்மில் எவரையும் நீக்கக்கூடாது என்று சமூர்த்தி உதவி பெறுவோர் விடாப்பிடியாக உள்ளார் கள்.

தற்சமயம் சமூர்த்தி உதவி பெற்று வருவோரில் 20 சதவீதமான குடும்பங்கள் சமூர்த்தி உதவி பெறத் தகுதியற்றோராக உள்ளனர் எனக் காரணம் காட்டி சமூர்த்தி உதவி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யைக் குறைக்குமாறு சமூர்த்தி அபிவிருத்தி அதிகார சபை அமைச்சைக் கேட்டிருந்தது.

எனினும் எக்காரணம் கொண்டும் உதவி பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை யைக் குறைக்கக்கூடாது என ஜனாதிபதி உத்தரவிட்டிருந்தார். அவ்வாறிருந்தும் ஆகஸ்ட் மாத சமூர்த்தி முத்திரை அட்டை கள் 20 சதவீதத்தால் குறைக்கப்பட்டே பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன. ■

## கோயில் உற்சவங்களில் புலிகளின் பிரசாரம்

வழமைபோன்று இம்முறையும் ஆடி மாதக் கோயில் திருவிழாக்கள் கிழக்கில் நடைபெறுகின்றன. அதிலும் வருடா வருடம் இடம் பெறுவதைப் போன்று ஆலய உற்சவங்களில் புலிகளின் பிரசாரப் பணியும் சூடுபிடித்திருக்கிறது.

கட்டுநாயக்க விமான நிலையத் தாக்கு தல் உட்பட பல வெற்றிகரத் தாக்குதல் நிகழ்வுகளை விளக்கும் பிரசாரமும் புலி களின் ஆளுகையின் கீழுள்ள பகுதிகளில் நடைபெறுகிறது.

இதேவேளை ஆலய உற்சவங்களுக்குச் செல்வோர் மீது கடுமையான சோதனை நடவடிக்கைகளையும் புலிகள் ஏற்படுத்தி யுள்ளனர். ■

## விமான நிலைய பாதுகாப்புக்கு பயிற்சிபெற்ற கூர்க்கா படைகள்!

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலை யத்தின் பாதுகாப்பை பிரிட்டனில் விஷேட பயிற்சி பெற்ற கூர்க்கா படையினரிடம் கையளிக்குமாறு விமானப்போக்குவரத்து மற்றும் உல்லாசப் பயணத்துறை பிரதிநிதி கள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க விடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கட்டுநாயக்க தளத்தில் அண்மையில் இடம்பெற்ற பாரிய தாக்குதலையடுத்து அங்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத் தல் தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி சந்திரிக்காவை மேற்படி விமானப் போக்கு வரத்து மற்றும் உல்லாசப் பயணத்துறை யைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் கட்டுநாயக்க விமான நிலையத்தின் எதிர்காலப் பாதுகாப்புகள் குறித்தும், விமானப் போக்குவரத்து மற்றும் ஹோட்டல் தொழில்துறை பாதிப்படை வதையும் தடுப்பதற்காக விசேட பாது காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் வலி யுறுத்தப்பட்டது.

இதன்போது விமான நிலையத்தின் பாதுகாப்பு தொடர்பாக வெளிநாட்டு நிபு ணர்களின் ஆலோசனை பெறப்படுவ துடன், பிரிட்டனில் விசேட பயிற்சி பெற்ற கூர்க்கா படையணியை விமான நிலையத் தின் பாதுகாப்பிற்கு அமர்த்த வேண்டு மெனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள் ளது.

இந்தச் சந்திப்பின் போது, கூர்க்கா படையணியைப் பாதுகாப்பிற்கு அமர்த்து வது குறித்தும் வெளிநாட்டு விசேட அணி யொன்று விமான நிலையத்தின் முகாமைத் துவத்தைக் கையாள்வது குறித்தும் முக்கிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள தாகவும், அது குறித்து பரிசீலிக்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது. ■

## கால்நடைகள் கடத்தல்

மூதூர்ப் பிரதேசத்தில் முஸ்லிம்களுக் குச் சொந்தமான சுமார் இரு நூறுக்கும் மேற்பட்ட கால்நடைகளை புலிகள் கடத்திச் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தக் கால்நடைகள் மேய்ச்சல் தரை யில் நின்ற சமயமே புலிகள் அவற்றை ஒதுக்கிச் சென்று தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்துள்ளனர்.

கப்பப் பணம் பெறுவதற்காகவே புலிகள் இந்தக் கால்நடைகளைக் கடத்திச் சென்றிருப்பதாக ஊர்வாசிகள் தெரிவிக் கிறார்கள். ■

## யாழ். சிறையிலிருந்து 4 கைதிகள் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம் சிறைச்சாலையி லிருந்து செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் குரு நகர் படைமுகாமிற்கு சமீபமாக உள்ள இந்த சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக் கும் கைதிகளில் பயங்கரவாதத் தடைச்சட்டத் தின் கீழ் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த மூவரும், மற்றொரு சாதாரண கைதியுமே தப்பிச் சென்றுள்ள தாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைக்கூட கதவு பூட்டப்பட்டிருக்கவில்லை யெனவும், இதனைப் பயன்படுத்தியே நால்வரும் தப்பிச் சென்றதாக ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. இது தொடர்பாக சிறைக்காவலர்கள் சிலர் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக வும் தெரியவருகிறது. ■

## டெலோவின் 'சன் ரீ.வி.' கோபுரம் படையினரால் கைப்பற்றப்பட்டது!

வவுனியா குருமன்காட்டில் இருந்து தமிழீழ விடுதலை இயக்கத் (டெலோ) தினால் நடத்தப்பட்டு வந்த 'சன்.ரீ.வி' ஒளிபரப்பு தடைசெய்யப்பட்டு உபகரணங் கள் படையினரால் எடுத்துச் செல்லப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஒளிபரப்பு சட்ட விரோதமான தென படைத்தரப்பு தெரிவித்துள்ளது. அதேவேளை இந்த 'சன்' ஒளிபரப்பின் இடை நடுவில் வேறு சில உள்ளூர் 'நிகழ்ச்சி'களும் ஒளிபரப்பு செய்யப்பட்ட தாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

கடந்த திங்களன்று இரவு டெலோவின் குருமன்காடு முகாமை சுற்றி வளைத்து உபகரணங்களை படையினர் கைப்பற்றிய தாக கூறப்படுகின்றது.

தமிழ்நாட்டில் இருந்து ஒளிபரப்பாகும் சன்.ரீ.வி. நிகழ்ச்சிகளை சட்டலைட் அன்ட னாக்கள் மூலம் பெற்று வவுனியாவிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் டெலோ இயக்கம் கேபிள்கள் மூலம் வீடுகளுக்கு வழங்கி வந்தது. இதற்கு மாதாந்த தவ ணைக் கட்டணமும் அறவிடப்பட்டது. இது தொடர்பாக இராணுவ புலனாய்வுப் பிரி வினருக்குக் கிடைத்த தகவல்களை அடுத்தே இந்த ஒளிபரப்பு தடை செய்யப் பட்டிருக்கிறது. ■

## முரசம்

### பொதுமக்கள் மீதான புதிய சுமைகள்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

இறக்குமதிப் பொருட்களின்
விலைகள் கடுமையாக
அதிகரிக்குமென அச்சம்
தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமானப்படைத்தளம்
மற்றும் விமான நிலையம் மீதான
புலிகளின் தாக்குதலினால்
அரசாங்கத்துக்கு ஏற்பட்ட
நட்டத்தை சமாளிக்க
பொருட்களின் விலை அதிகரிப்ப
எதிர்பார்க்கப்பட்டதுதான்.

ஆனால் விமான நிலையம்
மீதான தாக்குதல்
அரசாங்கம் வெளியில்
சொன்னதை விடவும் அதிகமான
தாக்கத்தை மக்கள் வாழ்வில்
செலுத்தத் தொடங்கியுள்ளது.

விமானக் கட்டணங்கள்
அதிகரிக்கப்பட்டுள்ளன.
இது சகலரையும் பாதிக்காதெனக்
கூறினாலும் மறுபுறத்தில்
இலங்கைக்கு வரும் கப்பல்களுக்கான
காப்பறுதிக் கட்டணங்கள்
பலமடங்கு அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

இந்த நிலமை அடுத்து வரும்
நாட்களில் இறக்குமதிப்
பொருட்களின் விலைகளை
பெருமளவ அதிகரிக்கச்செய்யும்.

இந்த நாட்டு மக்கள்
எதிர்நோக்கும் வாழ்க்கைச் செலவ
நெருக்கடி பற்றி பதிதாக
எதுவும் கூறத்தேவையில்லை.
கீழ் மட்ட மக்கள் மாத்திரமன்றி
நடுத்தர வர்க்கத்தினரால் கூட
சமாளிக்க முடியாத நிலைதான்
ஏற்கனவே இருக்கிறது.

இப்படியிருக்க
மேலும் ஒருபடி கூடிய
பொருளாதார அழுத்தத்தை
தாங்கும் நிலையில் மிகப்
பெரும்பாலான மக்கள் இல்லை.

இலங்கை தொண்ணூறு சதவீதம்
இறக்குமதியை நம்பியிருக்கும்
ஒரு நாடு.
இங்கு வரும் கப்பல் கட்டணங்களின்
அதிகரிப்பு நேரடியாக
ஒவ்வொருவர் வாழ்விலும்
எதிரொலிக்கும் என்பதில்
சந்தேகமில்லை.

இறக்குமதிக்கான போக்குவரத்து
செலவு அதிகரிப்ப என்பதும்
பதிய விமானங்களை வாங்க அர
சாங்கத்தின் விலை அதிகரிப்பும்
ஒன்றல்ல;
இது இரண்டும் இருவேறு விடயங்கள்.
ஆனால் இறுதி விளைவு
இரண்டு செலவுகளையும்
மக்கள்தான் சுமக்க வேண்டும்.

விலை அதிகரிப்பின் போது
வழமையாகவே சாதுர்யமான
நியாயங்கள் சொல்லப்படுவதுண்டு.
எப்படியிருந்தாலும் கடைசியில் அது
பொது மக்களின் கையை
கடிப்பதாகத்தான் இருக்கும்.

எத்தனை தர்க்கங்களை
முன்வைத்தாலும்
யுத்தத்துக்கு நிரந்தரத் தீர்வ
காணப்படும்வரை
இந்த நெருக்கடியை
தவிர்க்க முடியாது.

சுற்றுலாத் துறையை
விரைவில் மீளமைத்துவிடலாம்
என்று அரசாங்கம் கூறியிருக்கிறது.
அது சரியாக இருக்கலாம்.
ஆனால் மீண்டும் ஒரு பாரிய
தாக்குதல் இடம்பெற்றால்,
இதே நிலைக்கு சுற்றுலாத்துறை
மீண்டும் வீழ்ச்சியடையும்.

ஆதலால் அவ்வப்போது ஏற்படும்
பிரச்சனைகளை
'விரைவில் சமாளித்துவிடமுடியும்'
என்ற நியாயத்தை
திரும்பத் திரும்ப சொல்லிக்
கொண்டிருப்பதை விடுத்து
இத்தகைய பிரச்சனைகளின்
மூலவேரை இனிமேலாவது
அடையாளம் காண முன்வரவேண்டும்.

அரசியல் வாதிகளின்
சமாளிப்புக்கள் மீதும்
ஆறுதல் வார்த்தைகள் மீதும்
மக்களுக்கு நம்பிக்கையில்லை
நிரந்தரத் தீர்வே உடனடித்தேவை.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*
*என்றென்றும்*
*அன்புடன்,*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# அடுத்தது என்ன?

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத் தின் இரண்டாவது ஆட்சி காலத்தில் தொடர்ச்சியாகவே பிரச்சனைகளை எதிர் கொண்டு வந்த அது, இப்போது க்ளை மார்க்ஸ் கட்டத்தை நெருங்கியிருக்கிறது. இன்னொரு வகையில் கூறப்போனால் திருமதி குமாரதுங்க தனது 6 ஆண்டுகால ஜனாதிபதிப் பதவியில் சந்தித்த மிகப் பெரும் அரசியல் நெருக்கடியை இன்று எதிர்கொண்டுள்ளார்.

தன்னுடைய கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கிடையாதென தெளிவாக அறிந்துகொண்ட ஜனாதிபதி, அது தோற்றுவிடக்கூடாதென்று தற்காப்பு நடவடிக்கையாக பாராளுமன்றத்தை இரண்டு மாதகாலம் ஒத்தி வைத்து எவருமே எதிர்பார்க்காத சர்வஜன வாக்கெடுப்பொன்றை அறிவித்தார். தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புதிய அரசியல் யாப்பொன்று நாட்டுக்குத் தேவையா என்ற கேள்வி இந்த சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களிடம் கேட்கப்பட விருந்தது.

ஆனால் இப்படியானதொரு விடயத்தை அறிய சர்வஜன வாக்கெடுப்பு அவசியமில்லை என்ற குரல் வலுவாக ஒலித்தது. குறிப்பாக பௌத்த அமைப்புக்கள் இந்த சர்வஜன வாக்கெடுப்பை கடுமையாக எதிர்த்தன. இந்தத் தருணத்தில் அரசாங்கத்தினது எந்தவொரு செயலுக்கும் மக்கள் ஆதரவு கிடைக்க விடாமல் தடுப்பதில் எதிர்க்கட்சிகள் முழுமூச்சாக ஈடுபடும் என்பதை எதிர்பார்த்தே ஆகவேண்டும். ஏனெனில் இந்தத் தள்ளாட்ட நிலையில் இருந்த தன்னை உறுதிப்படுத்தும் வாய்ப்பை அரசுக்கு கொடுத்து விட்டால் அதனை வீழ்த்தும் பணியை மீண்டும் ஆரம்பத்தில் இருந்தே தொடங்க வேண்டியிருக்கும்.

சர்வஜன வாக்கெடுப்பை பின்போடுவதோ, இடைநிறுத்துவதோ கூட அரசாங்கத்தை பொறுத்த வரையில் கவலைக்குரிய விடயமல்ல. அதன் தேவை தற்போதைய நெருக்கடியில் இருந்து மீள ஒரு வழியைத் தேடுவதுதான். பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த காலத்தில் இருந்தே புதிய அரசியல் அமைப்பொன்று தேவை என்பதை கூறிவந்தது. அதற்கான சில முயற்சிகளையும் மேற்கொண்டது. ஆனால் அவை எதுவும் பயனளிக்காத நிலையில் இந்த அரசியலமைப்பு கதையை கிடப்பில் போட்டு வைத்திருந்தது. ஐ.தே.க. நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டு வந்து அரசாங்கத்தின் கதி முடியலாம் என்ற எதிர்பார்ப்பு தோன்றியதும் பழைய அரசியல் யாப்பு பிரச்சனையை களத்தில் இறக்கியது.

உண்மையாகவே ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு புதிய அரசியலமைப்பொன்றின் தேவை இருக்கலாம். அவ்வாறானதொரு அரசியல் யாப்பின் மூலம் நாட்டுக்கு நல்லதை செய்ய வேண்டும் என்று அவர் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அதற்கு ஜனாதிபதி தேர்ந்தெடுத்த தற்போதைய தருணம் அவரது அரசாங்கம் அதிகாரக்கவிழ்ப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருக்கும் நேரம். ஆதலால் இங்கே திருமதி குமாரதுங்க நாட்டின் தலைவி என்பதை விடவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவியாக நடந்து கொண்டு அரசியல் அமைப்பு சீர்திருத்தம் என்ற விடயத்தை பயன்படுத்தி தனது அரசாங்கத்தை காப்பாற்ற முயற்சி செய்கிறார் என்ற குற்றச்சாட்டே பிரதானமாக முன்வைக்கப்பட்டது.

எது எப்படியிருந்தாலும் சர்வஜன வாக்கெடுப்பை பின்போட்ட அரசாங்கம் அடுத்து என்ன செய்யப்போகிறது என்ற கேள்வியே இன்று அரசியல் அரங்கில் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் காய் நகர்த்தல்களை புரிந்துகொள்ள முடியாமல் எதிர்க்கட்சிகள் பரிதவிக்க, ஜனாதிபதியின் திடீர் முடிவுகளை விளங்கிக்கொள்ள முடியாமல் அமைச்சர்களே திண்டாடுகின்றனர். முன்னதாக சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான அறிவிப்பை அரசியலமைப்பு அமைச்சரான தன்னுடன்கூட கலந்தாலோசிக்கவில்லை என்று பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் கடும் அதிருப்தி தெரிவித்திருந்தார். இன்னும் பல அமைச்சர்களும் இது தொடர்பில் தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.

இப்போது அக்டோபர் 18ம் திகதி வரை சர்வஜன வாக்கெடுப்பு பிற்போடப்பட்டுள்ளது. செப்டம்பர் 7ம் திகதி மீண்டும் பாராளுமன்றம் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர் 10ம் திகதிக்கு பின்னர்தான் பாராளுமன்றத்தை கலைக்க முடியும். செப்டம்பர் 7ம் திகதிக்கும் அக்டோபர் 10ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 8 அல்லது அதற்கு குறைவான அளவு நாட்களே பாராளுமன்ற அமர்வு நடைபெறும். அதன்போது நம்பிக்கையில்லாப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்படுவதை ஏதேனும் ஒரு வழியில் தடுக்க முடியுமென்றால், ஒரு வருடகாலத்தை பூர்த்திசெய்த பின்னர் பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலொன்றை சந்திக்க அரசாங்கம் முன்வரக்கூடும். ஆனால் இந்த இடைப்பட்ட காலத்துக்குள் ஜே.வி.பி.யின் ஆதரவு அரச தரப்புக்கு கிடைக்கக்கூடும்.

அரசியலமைப்பு மாற்றத்தின் போது இத்தடவை தேர்தல் முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழவிருப்பதாக ஜனாதிபதி கூறியிருந்தார். ஆனால் அந்த மாற்றங்கள் எப்படியானவை என்பதை அறியாததால் மிகவும் குழப்பத்துக்குள்ளாகியிருப்பவர்கள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தான். தற்போதிருக்கும் விகிதாசாரத் தேர்தல் முறை மாற்றப்பட்டு பழைய தொகுதிவாரிமுறை மீண்டும் கொண்டுவரப்பட்டால் மலையக பிரதிநிதித்துவத்தில் சடுதியான வீழ்ச்சி ஏற்படலாம் என்ற பயம் அவர்களுக்குள் இருக்கிறது. அதனால் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் முடிவெடுப்பதை இழுத்தடித்து வந்த ஆறுமுகன் தொண்டமான் கடந்தவாரம் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இ.தொ.க.வின் விருப்பங்களுக்கு இந்த நேரத்தில் ரணில் சம்மதம் தெரிவிக்காமல் விடப்போவதில்லை. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இது மகிழ்ச்சிக்குரிய விடயமல்ல.

தேர்தல்முறை மாற்றம் குறித்த விடயத்தில் இ.தொ.க.வை போலவே கதிகலங்கிப்போயிருக்கும் மற்றொரு கட்சி ஜே.வி.பி. தற்போதைய தேர்தல் முறை மாற்றப்பட்டால் ஒருவர்கூட ஜே.வி.பி. சார்பாக பாராளுமன்றம் போக முடியாது. இந்த ஆபத்தை உணர்ந்த அந்தக் கட்சி ஏதாவது செய்து இந்த சர்வஜன வாக்கெடுப்பை நிறுத்தும் முயற்சியில் குதித்தது. குடத்தை ஆதரித்து கடும் பிரசாரம் செய்ய ஆரம்பித்த மக்கள் விடுதலை முன்னணி இன்னொரு வகையிலும் சிந்தித்தது. அதாவது, அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும் என்பதை விட தற்போதைய நெருக்கடியை சமாளிக்க வேண்டும் என்பதுதான் அரச தரப்பின் நோக்கம். அதன் விளைவாகத்தான் அத்தனை பிரச்சனைகளும். ஆதலால், அரசாங்கத்துக்கு கைகொடுத்து சர்வஜன வாக்கெடுப்பை இடைநிறுத்தும் முயற்சியில் ஜே.வி.பி. இறங்கியது.

அரசாங்கத்துக்கான ஒரு நன்னடத்தை காலத்தை கடந்தவாரம் ஜே.வி.பி அறிவித்தது. குறிப்பிட்ட காலத்துக்குள் 5 ஆணைக்குழுக்களையும் அமைத்து ஜன நாயகத்தை உறுதி செய்யும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்குமாயின் மக்களுக்காக வேண்டி சில தியாகங்களை செய்ய தமது கட்சி தயாராக இருக்கிறதென தெரிவித்தது.

உண்மையில் ஜே.வி.பி.யின் இந்த தீர்மானம் தற்போதைய அரசியல் குழறுபடி நிலைக்கான ஒரு தீர்வாக தென்பட்டாலும்கூட இது இந்த குழப்பத்தில் இருந்து பயன்பெறும் ஒரு நடவடிக்கை மட்டும் தான்.

ஐ.தே.க.வும் ஏனைய கட்சிகளும் சேர்ந்து அரசாங்கத்தின் கழுத்தை நெறிக்கும் வரை மௌனமாக இருந்த ஜே.வி.பி, அரசுக்கு மீளவழியில்லை என்ற பின்னணியில், இந்த நன்னடத்தைக் காலத்தை அறிவித்திருக்கிறது.

நாட்டு நலன் கருதி சில தியாகங்களை செய்யத் தயாராக இருப்பதாகக்கூடும் ஜே.வி.பி அது என்ன என்பதை சொல்லவில்லை. ஆனால் அரசாங்கம் செய்ய வேண்டியவைகளை மட்டும் திட்டவட்டமாக கூறியிருக்கிறது.

இந்நிலையில்தான் தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைக்கும் முயற்சிகள் நடக்கின்றன. இதற்கான தரகர் வேலையை சிஹல உருமய கட்சி செய்து வருகின்றது. இது விடயம் தொடர்பாக இரகசியமாகவும் பரகசியமாகவும் இருதரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். ஆனால் இந்த முயற்சி பயனற்றதென்பதை வரலாறு பலமுறை நிரூபித்திருக்கிறது.

அவ்வாறானதொரு அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்க ஜனாதிபதி சந்திரிக்கா உடன்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன. ரணில் பிரதமராகுவதற்கு உடன்பட்டாலும் தனது அதிகாரங்களை குறைத்துக்கொள்ள சந்திரிக்கா விரும்பமாட்டார். அதேவேளை ஜனாதிபதியின் தற்போதைய நிறைவேற்று அதிகாரங்களுக்குக்கீழே பிரதமர் பதவியை ஏற்பதில் எந்தப் பிரயோசனமுமில்லை என்பதே ரணிலின் அபிப்பிராயம். இது தீர்க்கப்படக்கூடிய ஒரு பிரச்சனையல்ல. அதனால் தேசிய நல்லிணக்க அரசு பற்றிய எதிர்பார்ப்புகள் வீணானவை.

அத்தோடு தேசிய அரசாங்கமொன்று அமையப் பெற்றால் அதன் முழுப்பலமும் ஐ.தே.க.வின் கையில் இருக்கவேண்டும் என அந்தக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. அதாவது பிரதமர் பதவி அமைச்சர்களை நியமிக்கும் பொறுப்பு ஜனாதிபதியின் கையிலிருக்கும் நிதி அமைச்சர் பதவியை ஐ.தே.க.வக்கு கைமாற்றுதல் என்பன உள்ளிட்ட அரச நிர்வாகத்தின் சகலதும் தமது கைக்குக் கிடைக்க வேண்டும் என ஐ.தே.க. திட்டவட்டமாக கூறியிருக்கின்றது. அவ்வாறானதொரு அரசாங்கத்தில் பாதுகாப்பு சபை கூட்டத்துக்கு தலைமைத்தாங்குவதோடு மாத்திரம் ஜனாதிபதியின் பணி மட்டுப்படுத்தப்பட வேண்டும் என அந்தக் கட்சி கூறியிருக்கிறது.

ஆனால் இந்த நெருக்கடி நிலைக்கு ஜனாதிபதியினால் எடுக்கக்கூடிய ஒரே தீர்வ பெரும்பான்மைப் பலமுள்ள கட்சிக்கு ஆட்சி அமைக்கும் சந்தர்ப்பத்தை வழங்குவதே என்று ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார். இத்தகையதொரு இறுக்கமான வலைக்குள் சிக்கி தனது அதிகாரங்களில் குறைப்பு செய்ய ஜனாதிபதி விரும்பப்போவதில்லை. அது ஐ.தே.க.வுக்கும் தெரியும். ஆனால் இவ்விரண்டு கட்சிகளும் வெளியில் தேசிய அரசாங்கம் சர்வகட்சி அரசாங்கம் என்றெல்லாம் கதைத்துக்கொண்டு, நமது தனிக்கட்சி அரசாங்கத்துக்கான செயற்திட்டங்களைத் தான் தொடர்ந்தும் முன்னெடுக்கின்றன.

சர்வஜன வாக்கெடுப்பை கைவிட்டதாக அரசாங்கம் கூறவில்லை. பிற்போட்டதாகவே அறிவித்திருக்கிறது. அதாவது செப்டம்பர் 7ம் திகதி பாராளுமன்றம் திறக்கப்பட்டால் அங்கு நிலைமையை அவதானிப்பது மேற்சொன்னது போல தேர்தல் முறை மாற்றத்துக்கு பயந்தோ அல்லது உடனடியாக தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதில் உள்ள பாதகம் கருதியோ ஜே.வி.பி. அரசுக்கு ஆதரவு வழங்க முன்வருமாயின் பிரச்சனையில்லை. ஆனால் ஐ.தே.க.வின் நம்பிக்கையில்லா பிரேரணை வெற்றியடையலாம் என்பது உறுதியாகத் தெரிந்தால் அரசாங்கத்துக்கு இப்போது பல மாற்று வழிகள் இருக்கின்றன. ஒன்று பழைய படியே பாராளுமன்ற கூட்டத்தொடரை மீண்டும் ஒருமுறை ஒத்திவைத்து திரும்பவும் சர்வஜன வாக்கெடுப்பு விடயத்தை முன்னிலைப்படுத்தி ஜே.வி.பி.யை பணிய வைக்கலாம். அதேநேரம் ஐ.தே.க ஆட்சியைக் கைப்பற்றும் என்ற எதிர்பார்ப்பு அந்த கட்சி உறுப்பினர்கள் மத்தியில் இருந்து கரையத்தொடங்கும் போது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மேலும் சாதகம் ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

ஐ.தே.கவை பொறுத்த வரையில் உடனடியாக தேர்தல் ஒன்று வருமானால் அவர்களுக்கு பல சாதகங்கள் உண்டு. வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பிரச்சனைகளால் அரசாங்கத்தின் மீது வெறுப்புக்கொண்டிருக்கும் மக்களின் வாக்குகளை ஐ.தே.க.வினால் கவர முடியும். அத்தோடு சிறிய கட்சிகளுடனான ஐ.தே.க.வின் கூட்டணி இம்முறை பலமாக இருக்கிறது. முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹகீம் தலைமையிலான அணி தேர்தலின் போது ரணிலுக்கே ஆதரவளிக்கும்.



**எம்.பி.எம். பர்ஸான்**

அரச தரப்பை பொறுத்த வரையில் பொதுத் தேர்தலுக்கு முகம் கொடுக்காமல் தவிர்ப்பதே அவர்களுக்கு இலாபகரமானது. அதற்கு பாராளுமன்றத்தில் ஆபத்தில்லாமல் இருக்க வேண்டும். தற்போதைய பாராளுமன்றத்தில் தொடர்ந்து அதிகாரம் செலுத்த இயலுமான சகல முயற்சிகளையும் மேற்கொண்டு பார்த்து எதுவுமே சாத்தியப்படவில்லை என்றால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைத்து விட்டு தேர்தலை அறிவிப்பார் என எதிர்பார்க்க முடியும்.

ஆனால் எல்லோரையும்விட பொதுஜன ஐக்கிய முன்னணிக்குத்தான் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு முகம் கொடுப்பதில் ஏராளமான பிரச்சனைகள் இருக்கின்றன. மீண்டும் ஒரு தடவை மக்கள் முன்னிலையில் போய் பழைய பல்லவியை பாட முடியாது. அத்தோடு இம்முறை அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான விடயங்களைத்தான் முன்னிலைப்படுத்த வேண்டும். ஆனால் புதிய அரசியல் யாப்பு விடயத்தில் ஜே.வி.பி.யிடம் இருந்து கடும் எதிர்ப்பை சமாளிக்கவேண்டிவரும். மறுபுறத்தில் ஐ.தே.க. வாழ்க்கைச்செலவு பிரச்சினை பற்றிப் பிரசாரத்தை தீவிரமாக முன்னெடுக்கும். இவை இரண்டுக்கும் முகம்கொடுக்க போதிய ஆயத்தங்களை செய்யாமல் பொதுஜன ஐக்கிய முன்னணியினால் தேர்தலை சந்திப்பது சிரமம். ●

# அண்டை மண்டலத்தில்....

காணகன்

தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்குமான இந்த மோதல் ஒட்டுமொத்த இந்திய மக்களும் ஒருவித பதட்டம் நிறைந்த சுவாரஸ்யத்துடன் பார்த்துக் கொண்டுள்ளனர்.

ஜூலை 28ந் தேதி மத்திய அரசு மூன்று தமிழக ஐ.பி.எஸ். அதிகாரிகளை மத்திய அரச பணிக்கு அனுப்பி வைக்கும்படி கடிதம் அனுப்பியது. சென்னை மாநகர காவல்துறை ஆணையர் முத்துக்கருப்பன் மத்திய சென்னை காவல்துறை இணை ஆணையர் எஸ்.ஜார்ஜ், திருவல்லிக்கேணி பகுதி காவல் துறை ஆணையர் கிறிஸ்டோபர் நெல்சன் ஆகியோரை உடனே மாநில அரசுப் பணிகளிலிருந்து விடுவித்து மத்திய அரசு பணிக்கு அனுப்பி வைக்கும்படி மத்திய அரசு தமிழக அரசுக்கு ஆணையிட்டது. தமிழகத்திலுள்ள எந்த ஒரு சாமானிய மனிதனுக்கும் மேற்கண்ட மூன்று அதிகாரிகளை திடுதிப்பென்று மத்திய அரசு கேட்டதன் உள்நோக்கம் புரியாமல் இருக்காது.

கருணாநிதி கைது, மத்திய அமைச்சர் இருவர் கைது போன்ற விவகாரங்களிலும் அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களிலும் மேற்கண்ட மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கு உள்ள தொடர்பு உலகப் பிரசித்தம் ஆகிவிட்ட நிலையில், இவர்கள் மத்திய அரச பணிகளுக்கு அழைக்கப்பட்டிருப்பது குறித்து பலதரப்பட்ட ஊகங்களும், விவாதங்களும் எழுந்தன.

முதல் எதிர்ப்புக் குரல் கம்யூனிஸ்ட் கட்சிகள் கொடுத்தன.

"தி.மு.க.வின் வற்புறுத்தலுக்காக மத்திய அரசு எடுத்திருக்கும் பழிவாங்கும் செயல்தான் இது. மத்திய அரசின் எதேச்சதிகார போக்கை எதிர்க்கிறோம்" என்றன.

ஐ.பி.எஸ். அதிகாரிகளை மாற்றுவதில் தன்னிச்சையாக மத்திய அரசு முடிவு எடுக்கும் நிலை இருந்தால், எந்தமாநில அரசும் தன் பொறுப்பிலுள்ள அதிகாரிகளை முறையாகக் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே மத்திய அரசு கேட்டுக் கொண்டபடி மூன்று ஐ.பி.எஸ். அதிகாரிகளை மாநில அரசு விடுவிக்க இயலாது" என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா போர் பிரகடனம் செய்தார்.

தனது எதிர்ப்பை மத்திய அரசுக்கு கடிதம் மூலம் தெரிவித்த ஜெயலலிதா, கூடவே மற்ற மாநிலங்களிலுள்ள அனைத்து முதலமைச்சர்களுக்கும் ஒரு விரிவான கடிதம் அனுப்பினார்.

"இது அனைத்து மாநில முதல்வர்களும் பரிசீலிக்க வேண்டிய விசயம். இப்பிரச்சனையில் இன்று தமிழகத்திற்கு ஏற்பட்ட நிலைமை, நாளை மற்ற மாநிலங்களுக்கும் ஏற்படலாம்..." என்று ஜெயலலிதா விளக்கினார்.

இந்தக் கடிதம் இப்போது அகில இந்திய அளவில் விவாதிக்கப்பட்டு வருகிறது. இதோடு கூடவே மாநிலத்தின் உள்துறைச் செயலாளர் நரேஷ்குப்தா மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு தமிழக அரசின் நிலைப்பாட்டை விளக்கி ஒரு கடிதம் அனுப்பி

## சபாஷ் சரியான மோதல் - இதுவரை நடந்திராத மோதல்



யுள்ளார். அதில, மத்திய அரசு அவவப்போது அனுப்பும் சிவில் சர்வீஸ் விதிமுறைகளுக்கு எதிராக இந்த உத்தரவு அமைந்துள்ளது. மேலும், ஏற்கனவே மத்திய அரசு பணிக்கு அழைக்கப்பட்ட முத்துக்கருப்பன் அதை நிராகரித்த வகையில் அடுத்த 5 வருடங்களுக்கு அவரை மத்திய அரசு பணிக்கு அழைக்க முடியாது என்ற விதியும் உள்ளது. ஜார்ஜ், கிறிஸ்டோபர்நெல்சன் ஆகியோர் இன்னும் மத்திய அரசு அழைக்கும் பணிக்கு செல்வதற்கான தகுதியை எட்டவில்லை" என்றும் எழுதியுள்ளார்.

மாநில அரசு வைக்கும் வாதங்களை மத்திய அரசு பொருட்படுத்துவதாயில்லை. அகில இந்திய பணி அதிகாரிகளை மாற்றுவதில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே மோதல் எழுமானால், மத்திய அரசின் உத்தரவே செல்லும் என்ற விதியை மாநில அரசு நினைவில் வைப்பது நல்லது" என்று மத்திய அமைச்சர்கள் அருண்ஜெட்லி, வெங்கையநாயுடு ஆகியோர் கறாராக பேசியுள்ளனர்.

"உண்மையில் இந்த மூன்று அதிகாரிகளுக்கான காலியிடங்களை இனிதான் மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும். ஆகவே, மாற்றத்துக்கான காரணத்தை மத்திய அரசு முதலில் கூறட்டும்" என்று ஜெயலலிதா பதிலடி தந்துள்ளார்.

தமிழக அரசுக்கும், மத்திய அரசுக்குமான இந்த மோதல் டெல்லியில் மக்களவையிலும் பிரதிபலித்து சபையை நிலைகுலைய வைத்தது. அ.தி.மு.க., தி.மு.க. உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கடும் வாக்குவாதத்தில் இறங்கினார்கள். தி.மு.க. வினருக்கு ஆதரவாக பா.ஜ.க. உறுப்பினர்கள் சி.பி ராதாகிருஷ்ணன், விஜயகுமார் மல்ஹோத்ரா போன்றோர் வாதாடினார்கள். அதேபோல அ.தி.மு.க உறுப்பினர்களுக்கு ஆதரவாக முன்னாள் பிரதமர் சந்திரசேகர், காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.ஜெயபால்ரெட்டி போன்றோர் வாதாடினார்கள்.

தன்னுடைய வாதத்தில் முன்னாள் பிரதமர் சந்திரசேகர், "சுதந்திர இந்தியாவில் ஐம்பது ஆண்டுகாலமாக எந்த மாநில அரசு அதிகாரியை மத்தியப் பணிக்கு அழைத்தாலும் சம்மந்தப்பட்ட மாநில அரசின் ஒப்புதலோடு தான் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மாறாக ஒருமுறை கூட நடந்ததில்லை" என்றார்.

காங்கிரஸ் உறுப்பினர் ஜெயபால் ரெட்டியோ, "சந்திரசேகர் குறிப்பிட்டதைப்போல, சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக இச் சம்பவம் நடந்துள்ளது. மத்திய அரசு தனது அதிகார வரம்பை மீறியுள்ளது. தனது கூட்டணி கட்சி ஒன்றின் நெருக்குதல் காரணமாகவே இவ்வாறு செய்கிறது" என்றார்.

இவ்வாறான களேபரங்களுக்கு இடையிலேயும் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி "மூன்று ஐ.பி.எஸ். அதிகாரிகளை மத்திய அரசு கேட்டிருப்பது என்பதை அவர்களுக்கு கிடைத்த பணி உயர்வாகத்தான் பார்க்க வேண்டும். இதில் தி.மு.க.விற்கு சம்பந்தமே இல்லை. மத்திய அரசோடு மோதி பார்க்க வேண்டும் என்று ஜெயலலிதா முடிவ செய்தால் அதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது. இவ்வளவு வாதம் வைக்கும் ஜெயலலிதா கேட்டபோது மத்திய அரசுப் பணியிலிருந்த சங்கர் ஐ.ஏ.எஸ்ஸையும், விஜயகுமார் ஐ.பி. எஸ்ஸையும் மத்திய அரசு உடனே விடுவித்து மாநில பணிக்கு அனுப்பவில்லையா? அதே போல் மிக உயர்ந்த பதவியிலிருந்த ராஜகோபாலன் ஐ.பி.எஸ்.ஸை முக்கியத்துவம் இல்லாத பதவிக்கு தூக்கியடித்தார் ஜெயலலிதா. அவருக்கு மத்திய அரசு தேசிய பாதுகாப்புப் படை டைரக்டர் ஜெனரல் என்ற கௌரவம் மிக்க பதவியை அளிக்க முன்வந்ததையும் மறுத்துள்ளார். இது எந்த வகையில் நியாயம்? என்று கேட்டார் கருணாநிதி.

இதற்கிடையில் ஆகஸ்ட் 31ந் தேதி சென்னையில் நடைபெற்ற ஐ.பி.எஸ். அதிகாரிகள் கூட்டத்திலும் காரசாரமான விவாதம் நடந்தது. மத்திய அரசுக்கு எதிராக சில அதிகாரிகளும் மாநில அரசுக்கு எதிராக சில அதிகாரிகளும் பேசியுள்ளனர். மாநில அரசு தன்னிச்சையாக 75க்கும் மேற்பட்ட ஐ.பி.எஸ். அதிகாரிகளை பந்தாடியது பற்றியும் சில உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர். ஆயினும் தற்போது "அரசியல் பழிவாங்கும் நோக்கத்தோடு எடுக்கப்பட்டுள்ள மத்திய அரசின் நடவடிக் கையை கண்டிக்க வேண்டும்" என்று ஐ.பி.எஸ். அதிகாரிகள் சங்கம் முடிவெடுத்துள்ளது.

முன்னாள் டி.ஜி.பி லஷ்மிநாராயணன் போன்றவர்கள் வெளிப்படையாக அரசை கண்டித்துள்ளனர். பிரபல பத்திரிகையாளர் 'சோ'வும் மத்திய அரசின் அணுகுமுறையை கடுமையாக விமர்ச்சித்துள்ளார். "மத்திய அரசின் தி.மு.க.வை திருப்தி படுத்துவதற்காக மேற்கொண்ட இந்த அணுகுமுறை இனி தமிழ்நாட்டில் தி.மு.க.வினர் எந்த குற்றம் செய்தாலும் நாம் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று பொலிஸாரை முடிவு எடுக்க தூண்டுவதாயுள்ளது" என்று அவர் கூறியுள்ளார்.

மூன்று ஐ.பி.எஸ். அதிகாரிகளை மத்திய அரசுப் பணிக்கு அழைத்து திணறடிப்பது மட்டுமல்லாமல், நாடாளுமன்ற உரிமை மீறல் கமிட்டியின் மூலமாகவும் சம்மந்தப்பட்ட அனைத்து பொலிஸ் அதிகாரிகளையும் மன்னிப்பு கேட்க வைக்கும் திட்டம் ஒன்றும் தீட்டப்பட்டுக் கொண்டுள்ளது.

பதினைந்து பேர் கொண்ட நாடாளுமன்ற உரிமை மீறல் கமிட்டியின் தலைவராக காங்கிரஸ் காரரான ஜெய்பால் ரெட்டி உள்ளார் என்பது கவனத்திற்குரியது. இந்த உரிமை மீறல் கமிட்டி பொலிசாருக்கு கண்டனம் தெரிவிப்பதோடு நிறுத்திக் கொள்ளும். மற்றபடி அவர்களை அவைக்கு அழைத்து மன்னிப்பு கேட்கும்படி அவமானப் படுத்தாது என்றும் காங்கிரஸ் தரப்பில் கூறப்படுகிறது.

இது ஒருபுறம் இருக்க, ஜெயலலிதா அனைத்து மாநில முதல்வர்களுக்கு எழுதியுள்ள கடிதத்திற்கு கணிசமான பலன் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் தெரிகின்றன. கம்யூனிஸ்டுகள் ஆட்சி செய்யும் மேற்கு வங்காளம், கேரளா, திரிபுரா மாநில முதல்வர்கள் ஜெயலலிதாவிற்கு ஆதரவு நிலை எடுப்பார்கள் என கம்யூனிஸ்ட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுதவிர பீகார் முதல்வர் ராப்ரிதேவியும் ஜெய்லலிதாவிற்கு பரிபூரண ஆதரவு தெரிவிக்கிறார் என்று தமிழக ராஸ்டிரிய ஜனதாதள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது காங்கிரஸ் 11 மாநிலங்களில் ஆட்சி பொறுப்பில் உள்ளது.

அம் மாநில முதல்வர்களின் கூட்டமும் வெகுவிரைவில் நடைபெற உள்ளது.

இவர்களும் ஜெயலலிதாவிற்கு ஆதரவு தரக்கூடும் என்றே காங்கிரஸார் தெரிவிக்கின்றனர்.

தமிழக மக்களைப் பொறுத்தவரை மூன்று ஐ.பி.எஸ்.அதிகாரிகளை மத்திய அரசு அழைத்துள்ளதில் அரசியல் உள்நோக்கம் இருப்பதாகவே பரவலாக நம்புகின்றனர். அதே சமயம் இந்த மோதல் போக்குகளை மேலும் வளராமல் ஒரு நல்ல கௌரவ பதவி கிடைக்கும் ராஜகோபாலன் விஷயத்திலாவது மாநில அரசு நிச்சயம் விட்டுக் கொடுக்கலாம். மாநிலப்பொலிஸ் துறையை தனது எதிரிகளை பழிவாங்குவதற்குரிய ஒரு அம்சமாக கருதி செயல்பட்டு வந்த ஜெயலலிதா மத்திய அரசின் இந்த ஆணையால் ஓரளவு நிதானத்திற்கு வந்திருக்கக்கூடும். அந்த அளவோடு எச்சரிக்கை தந்ததுடன் இந்த பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் நல்லதுதான்.

---

# தடுமாறும் தமிழ்க் கட்சிகள்

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்க்கிறீர்களா என்று தமிழ்க்கட்சி தலைவர்களில் பலரிடம் கேட்டால் ஆம் என்று ஒரே சொல்லில் பதில் கூறுவார்கள் ஏன் என்று கேட்டால் திரு திருவென்று முழிக்கிறார்கள்.

சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதற்கான காரணத்தை கூறுங்கள் என்றதும் இந்தத் தலைவர்கள் தாம் அரசாங்கத்தை எதிர்ப்பதற்கான காரணங்களை எடுத்து விடுகிறார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கடந்த 7 வருட காலமாக தமிழ் மக்களின் பிரச்சனைகளை தீர்க்கத் தவறிவிட்டது. வாழ்க்கைச்செலவு வானளாவ உயர்ந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவில்லை. யுத்தம் தீவிரமடைந்துள்ளது. இவ்வாறு ஏராளமான குற்றச்சாட்டுக்களை இந்த அரசாங்கத்தின் மீது சுமத்த முடியும். ஆனால் அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டுமா என்ற கேள்விக்கு அது மாற்றப்படக்கூடாது என பதிலளிக்கச் சொல்வது இந்த பிரச்சனைகள் அனைத்துக்குமான தீர்வல்ல.

இந்த சர்வஜன வாக்கெடுப்பு அறிவிக்கப்பட்ட காலப்பகுதி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து இக்கட்டானதொரு நிலைக்கு தள்ளப்பட்டிருந்த நேரம் என்பதில் சந்தேகமில்லை. தனது அரசாங்கம் நம்பிக்கையில்லா பிரேரணையில் தோல்வியைத் தழுவும் என்ற சந்தேகத்தில் ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார் என்பதும் உண்மை. அந்த உரிமை அரசியல் அமைப்பின் மூலம் அவருக்கு வழங்கப்பட்டிருந்தாலும் அதை அவர் பயன்படுத்திய நேரம் குறித்த தார்மீகப் பிரச்சனை ஒரு புறம், அதேவேளை இத்தகைய சந்தர்ப்பங்களில் உபயோகிக்கத் தான் அந்த உரிமையை அரசியலமைப்பு ஜனாதிபதிக்கு வழங்கியிருக்கிறது என்று அரச தரப்பினரின் நியாயம் மறுபுறம், இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் அரசாங்கத்தை பழிவாங்க சர்வஜன வாக்கெடுப்பை தோற்கடித்தால் சரி என்று களத்தில் இறங்கியிருக்கின்றன தமிழ்க் கட்சிகள்.

தற்போதைய அரசியல் நெருக்கடியில் இந்த தமிழ்க்கட்சிகள் எந்தளவு குழம்பிப்போயிருக்கின்றன என்பதை உணர ஆழமான ஆராய்ச்சிகள் தேவையில்லை.

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது இப்போது அந்தப் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இது இரண்டு பிரதான கட்சிகளுக்கு இடையில் நடக்கும் அதிகாரத்தை கைப்பற்றும் நாடகத்தின் ஒரு கட்டம். இதன் ஆரம்பம் எந்த மேடையில் நிகழ்ந்ததோ, முடிவும் அங்கேயேதான் அமைய வேண்டும்.

பாராளுமன்றம் திறக்கப்பட்டால் தான் இனிமேல் நம்பிக்கையில்லா பிரேரணையைப்பற்றி பேசமுடியும். பாராளுமன்றத்துக்குள் அரசாங்கம் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறது. அதனால் அந்த ஆபத்து நீங்கும் வரை அதை திறந்து கழுத்தை நசுக்கிக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது. சர்வஜன வாக்கெடுப்பின் வெற்றியோ தோல்வியோ நம்பிக்கையில்லா பிரேரணையின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கப்போவதில்லை.

சர்வஜன வாக்கெடுப்பு இரத்துச் செய்யப்படலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. அதற்கான சாத்தியம் உண்டு. அவ்வாறு நடந்து விட்டதென வைத்துக் கொள்வோம். அதன் பின்னர் இந்த தமிழ்க் கட்சிகள் திரும்பவும் என்ன சொல்லப்போகின்றன. "அரசியலமைப்பு மாற்றப்படவேண்டும் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்" இதைத்தானே கூறியாக வேண்டும்.

ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பது என்ற பெயரில் ஐக்கிய தேசிக் கட்சிகள் நடத்தும் போராட்டங்களில் தமிழ்க்கட்சிகள் பங்கு கொள்வதையாவது ஓரளவு புரிந்துகொள்ள முடியும். ஆனால் சர்வஜன வாக்கெடுப்பை நிராகரிப்பதன் அடிப்படைதான் புரியாத புதிர்.

தற்போதைய அரசியலமைப்பு தொடர்ந்து நீடிப்பதை இந்த கட்சிகள் விரும்புகின்றனவா என்று மிகச் சரளமான கேள்வியை நாமும் எழுப்பவில்லை. ஏனெனில் சந்திரிக்கா தொடக்கம் பிரபாகரன் வரையிலும் விநாயகமூர்த்தி தொடக்கம் சிஹல உருமயவின் சம்பிக ரணவக வரையிலும் மிதவாத, கடும்போக்கு, இனவாத, அரசியல் பேதமின்றி அனைவருமே இந்த அரசியல் யாப்பு மாற்றப்படவேண்டும் என்பதையே கூறி வருகின்றார்கள்.

அப்படி எல்லோரும் விரும்புகிறார்களாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி இப்படியொரு கேள்வியை ஏன் மக்களிடம் கேட்கவேண்டும் என்ற பிரச்சனை இருக்கிறது. அதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன ஒன்று, மக்களின் அபிப்பிராயத்தை அறிவது இரண்டாவது, புதிய அரசியல் யாப்பொன்றை நிறைவேற்றுவதற்கான சட்டப் பின் புலத்தை மக்கள் ஆணை மூலம் பெறுவது.

அரசியலமைப்பு வரையறைகளை தாண்டாமல் எந்த ஒரு புதிய அரசியல் யாப்பையும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் இந்தப்பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாது. பொதுஜன ஐக்கிய முன்னணி தீர்வுத் திட்டம் ஒன்றை கொண்டுவந்தால் ஐ.தே.க. எதிர்க்கும். ஐ.தே.க. கொண்டுவரும் பட்சத்தில் பொ.ஐ.மு.யும் அதையேதான் செய்யும். அதனால் பிரதான அரசியல் சக்திகளின் ஒருமிப்புடன் தமிழ் மக்களுக்கு நியாயமானதொரு தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. ஆனால் பெரும்பான்மையினக் கட்சிகளின் அதிகாரப் போராட்டத்தின் விளைவாக இப்படியான ஒரு சந்தர்ப்பம் வாய்க்கும்போது அதை பயன்படுத்துவதைத் தவிர மாற்றுத்தீர்வு இல்லை. இங்கே ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து இதை விரும்புகிறீர்களா எனக் கேட்கப்படவில்லை. அப்படியிருக்குமாயின் அந்த தீர்வுத் திட்டத்தில் உள்ள குறை நிறைகளை சுட்டிக்காட்டி அது தொடர்பான முடிவை எடுக்கலாம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டு வரப்போகும் அரசியல் யாப்பில் தமிழ் மக்களுக்கு என்ன இருக்கிறது என்று தெரியாததால் சர்வஜன வாக்கெடுப்பை ஆதரிக்க முடியாதென்பதே தமிழ்க் கட்சிகள் முன்வைக்கும் பிரதான தர்க்கம். அரசாங்கத்தின் இந்த "சதி"யை முறியடிக்கவே தமிழ்க் கட்சிகள் ஐ.தே.க. வுடன் கைகோர்த்துள்ளன. ஆனால் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தில் என்ன இருக்கும் என்பதும் இவற்றுக்குத்தெரியாது. தமிழ் மக்களுக்கு சந்திரிக்காவை விட அதிகமாக ரணில் தருவார் என்று எந்த உறுதியையும் தமிழ்க் கட்சிகளால் வழங்க முடியாது. அதற்காக சந்திரிக்கா தருவதை மனமுவந்து ஏற்கவேண்டும் என்பதல்ல. அவர் என்ன தரப்போகிறார் என்பது இரண்டாவது பிரச்சனை. அதற்கு முன்னர் "வேண்டுமா? வேண்டாமா?" என்று கேட்கப்படுகிறது. அதில் "வேண்டாம்" என்று கூறிவிட்டால் பிறகு எதைப்பற்றியுமே பேச முடியாமல் போய்விடும்.

சர்வஜன வாக்கெடுப்பு கதைகளுக்கு மத்தியில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான செய்திகள் வெளியாகி வருகின்றன. இன்னும் ஓரிரு வருடங்களுக்கேனும் பாராளுமன்றத்தை தனது பிடியில் வைத்திருக்கக் கூடிய ஒரு உடன்பாட்டுக்கு ஏதேனும் ஒரு கட்சியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி வந்து விட்டதென வைத்துக் கொண்டால் தமிழ்க்கட்சிகளின் நிலை என்னவாகும்.

அனைத்து தமிழர்களையும் இந்த நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று கூறும் சிஹல உருமய, பூமிபுத்திர போன்ற கட்சிகளும் சர்வஜன வாக்கெடுப்பை எதிர்க்கின்றன. தமிழ்க் கட்சிகளும் எதிர்க்கின்றன. சிங்கள இனவாத கட்சிகளின் எதிர்ப்பில் உள்ள ஒரே நோக்கம் எப்பொழுதும் ஒன்றுதான். தமிழர்களுக்கு அதிகப்படியாக எதுவும் கிடைத்துவிடக் கூடாது என்பது மட்டும்தான்.

ஐ.தே.க சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பதன் நோக்கம் தமக்கு ஆட்சியை கைப்பற்ற இருந்த சந்தர்ப்பத்தில் இந்த வாக் கெடுப்பு மண்ணள்ளிப்போட்டு விட்டதே என்பதும் அரசியல் அமைப்பு சீர்திருத் தப்பணி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டால் இன்னும் பலகாலம் பாராளுமன்றம் மூடப்பட்டே கிடக்கும் என்பதும்தான். அதன் மூலம் அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சி தாமதமடையும் என்பதைத்தான் ஐ.தே.க. கருத்தில் கொள்கிறது.

ஐ.தே.க. தலைவர்கள் எதைக் கூறினாலும் இந்த சர்வஜன வாக்கெடுப்பின் வெற்றி தோல்வி அவர்களுக்கு பெரும் பிரச்சனையிலை அவர்களது தேவை எப்படியாவது பாராளுமன்றத்தை திறந்தாக வேண்டும் என்பதுதான் ஏனெனில் ஐ.தே.க.வின் அடுத்த வெற்றி பாராளுமன்றத்தில்தான் இருக்கிறது. ஆனால் தமிழ்க்கட்சிகள் சர்வஜன வாக்கெடுப்பில் குடத்தை வெல்ல வைப்பதென்பது அரசாங்கத்தை தோற்கடிப்பதற்கு சமம் என கருதிச் செயற்படுகின்றன. சர்வஜன வாக்கெடுப்பில் தோற்றதற்காக சந்திரிக்காவோ அவரது அரசோ பதவி விலகப் போவதில்லை.

சர்வஜன வாக்கெடுப்புக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் தமிழ் மக்கள், மீண்டும் ஒரு தடவை சந்திரிக்கா அம்மையாரை நம்புகிறார்கள் என்று அர்த்தம் கொள்ளத்தேவையில்லை. அரசாங்கம் சிக்குண்டு கிடக்கும் இன்றைய நெருக்கடியினால் எமக்கு ஏதாவது பலன் பெறலாமா என்ற முயற்சியாக மட்டும் தான் அதை கருத முடியும். சர்வஜன வாக்கெடுப்பை ஆதரிப்பது இந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தைத் தொடர வழங்கும் அனுமதியல்ல. அதேநேரம் அரசை கவிழ்க்கும் நடவடிக்கையுமல்ல இது இடையில் உள்ள ஒரு விடயம்.

ரணிலுடன் ஒரே மேடையில் பேசினாலும் தமிழ்க்கட்சிகளின் தலைவர்களால் ஐ.தே.க.வை பூரணமாக நம்ப முடியாத நிலையிருப்பதை அவர்களுக்கு மத்தியில் இடைக்கிடையே ஏற்படும் சலசலப்புகள் மூலம் அறிய முடியும். குறிப்பாக கூட்டணிக்குள் ஆனந்த சங்கரி ரணில் விக்கிரமசிங்கவின் தீவிர விசுவாசியாகவும் சம்பந்தன் சந்திரிக்காவின் ஆதரவாளராகவும் இருந்து வருகின்றனர்.

எது எப்படிப்போனாலும் தனது பயணத்துக்கு தமிழ்க்கட்சிகளை பயன்படுத்திவிட்டு அவர்களை நடுரோட்டில் இறக்கி விடுவதைத்தவிர மேலதிகமாக எதையும் கொடுக்கும் நிலையில் ஐ.தே.க. வும் இல்லை. தமிழ்க் கட்சிகளுடன் சேர்ந்து அவசரகாலச்சட்டத்தை தோற்கடிக்க முடிவு செய்த ரணில் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலுக்கு வந்ததும் வாய்திறக்கவில்லை. சர்வஜன வாக்கெடுப்பின் முடிவிலும் அதுதான் நடக்கப் போகிறது.

இதை வாசிக்கும்போது சர்வஜன வாக்கெடுப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதற்கான அறிவிப்பு கூட வெளியாகியிருக்கும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் பிரச்சனை அதுவல்ல இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் நமது தமிழ் தலைவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதுதான். ▫

~மதி~

# அம்பாறை மாவட்ட ச.தொ.ச.செயற்பாடுகள் குறித்து புகார்

அம்பாறை மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனை (ச.தொ.ச) நிறுவனத்தில் சிறுபான்மையினருக்கென புறக்கணிப்பு இடம்பெறுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மாவட்டத்தில் 13 ச.தொ.ச.கிளைகள் உள்ளன. இவற்றில் 11 கிளைகள் கரையோரப் பிரதேசத்தில் தமிழ்பேசும் ஊழியர்கள் கடமையாற்றும் கிளைகளாகும். 02 கிளைகளே அம்பாறை பெரும்பான்மை யினப் பிரதேசத்தில் உள்ளது.

ஆனால் இங்கு பிராந்திய முகாமை யாளராக பெரும்பான்மையினத்தவர் ஒருவரே கடமையாற்றி வருகிறார். அவருக்கு சிங்களத்தைத் தவிர வேறு ஒரு மொழியும் தெரியாததால் கிளைகளுடனான தொடர்புகளில் பலத்த அசௌகரியம் ஏற்பட்டு வருகிறது. அவருடனான கடிதத் தொடர்புகளும் தனிச் சிங்களத்திலேயே நடைபெற வேண்டியுள்ளது

ஆங்கிலத்தில் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் கரையோரப் பிரதேச 11 கிளை முகாமையாளர்களும் பாரிய பிரச்சனைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

எனவே 11 தமிழ்பேசும் கிளைகள் இருப்பதால் தமிழ் பேசும் சமுகத்தைச் சேர்ந்த ஒருவரை பிராந்திய முகாமையாளராக நியமித்துத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# லிங்கநகர் குடியிருப்புப் பிரச்சனை

## தொடர்பாக டக்ளஸ் ஜனாதிபதியுடன் பேசுவார்

திருகோணமலை லிங்க நகரில் குடியிருக்கும் தமிழ்க் குடும்பங்களை வெளியேற்றுவதற்கு இராணுவத்தினர் எடுத்துவரும் நடவடிக்கைகளை நிறுத்துவது தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசவிருப்பதாகத் திருகோணமலை மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் த.புஷ்பராசா தெரிவித்தார். லிங்க நகரில் தமிழ் மக்கள் வாழும் குடியிருப்புக் காணிகள் சுவீகரிக்கப்படுவதை நிறுத்தும் படியும் அக்காணிகளை அங்கு வாழும் தமிழ்க் குடும்பங்களுக்கே சொந்தமாக்க வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியைச் சந்தித்துக் கோரவிருப்பதாகவும் புஷ்பராசா தெரிவித்தார்.

# கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

கரவெட்டி கிழக்கு, வடமராட்சி தெற்கு மேற்கைச் சேர்ந்த பாக்கியம் பொன்னம்பலம் என்பவரின் தேசிய அடையாள அட்டை இல 467670115 V கண்டெடுக்கப்பட்டு, எமது அலுவல கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தக்க ஆதாரங்களைக் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம். ஆ-ர்


# மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



# உங்கள் பலன் எப்படி?

**ஏ.சுலேமான் - A. Suleman**

உங்கள் சொந்தப் பலன் எப்படி? கைரேகை, நட்சத்திரம், பிறந்த நேரக் குறிப்பு பார்த்து, பலன்கள் சொல்வோம். காதல் கைகூட வைப்பது, வெளிநாட்டுப் பயணத்தடையை நீக்குவது, விரும்பியவரை மணமுடித்து வைப்பது, கணவன்-மனைவி பிரச்சனைகளைத் தீர்ப்பது.

- ⋆ நீண்ட காலமாக நீங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்
- ⋆ பரீட்சை பற்றிய பதட்டமா?
- ⋆ பிசாசு, சூனியம், சாபக்கேடு துர் அதிஷ்டங்களால் இடர்பட்டு அழுந்துகிறவர்களுக்கு ஒரே பார்வையில் ஆறுதல் கிடைக்கும்.

பிறந்த திகதி, பெயர்-மொழி-தமிழர்-சிங்களவர் எவராயினும் எல்லோர் பிரச்சனையையும் தீர்த்து வைப்பார். முன்னதாக (காலை 10.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை) நேரம் நிர்ணயிக்க வேண்டும். அல்லது எழுதலாம்.

**Mrs.Madiha, 78 Plashet Grove,**
**London. E 6 1AB.**
**T.P. 02085860922**


# உதவி கோருதல்



இல 06, விபுலாநந்த வீதி, கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு என்ற விலாசத்தில் வசிக்கும் நல்லையா நாகேந்திரனாகிய நான் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக Advanced Dilated Cardiomyopath என்ற நோயினால் பீடிக்கப்பட்டு 24 மணி நேரம் ICUல் சிகிச்சை பெற்று தொடர்ந்து வைத்திய ஆலோசனை பெற்று வருகிறேன். தற்போது இந்த நோயின் தாக்கம் அதிகமாகி வருகின்றது. இந்த இருதய நோயைச் சத்திர சிகிச்சை மூலமே தீர்க்கலாம். இச்சிகிச்சையை இந்தியாவிலேயே மேற்கொள்ள வேண்டியிருப்பதால், அதற்கான செலவு ஏறத்தாழ 3 1/2 இலட்சம் இந்திய ரூபாய்கள் தேவைப்படுகிறது.

எனவே கருணை உள்ளங் கொண்ட அன்புச் சகோதர நெஞ்சங்களே! நிதி உதவி செய்து மேற்படி நோயைக் குணப்படுத்த உதவுமாறு வேண்டுகிறேன். தங்கள் அன்பளிப்புகளை செலான் வங்கி (Seylan Bank) மட்டக்களப்பு கிளை Savings A-c இல 7303962ற்கு அல்லது எனது விலாசத்துக்கு நேரடியாக அனுப்பி வைக்கவும்.

இறைவனருள் எல்லோருக்கும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். நன்றி

அன்புடன். ந. நாகேந்திரன்.


**சுவிஸ் பேர்ண் மாநகரில்.**

# Suji Jewellery Works


நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வோர்க்ஸ் தொடர்புகட்கு:-

**K. Thurai**
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

*உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.*


# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 - 10 - 1938



அமரத்துவம் 12 - 08 - 1992

**அமரர் திரு.பழனியாண்டி ராஜகோபால்** (கவுண்டர்)

ஆயிரம் உறவுகள் இருந்தாலும், அப்பா என்றழைக்க
உறவொன்றில்லை, எங்கள் நல்வாழ்வை
உங்கள் மூச்சாக சுவாசித்தீர்கள் மூலைக்
கொருவராய் இருந்தாலும் உங்கள் நினைவு
நாளில் விழிகளெல்லாம் நனைகின்றன
உங்கள் நல்லாசிகளை நாடி நிற்கும்

இங்ஙனம்: அம்மா, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# மனோதத்துவ வைத்தியம்

**GENARAL PSYCHO THERAPHY**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் ஆகஸ்ட் 23 முதல் 30 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் செப்டெம்பர் 1, 2, 3 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டி T.P.074-474156

**கல்முனையில் ஆகஸ்ட் 04, 05 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் ஆகஸ்ட் 11, 12 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



# சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் வந்து திருமணப்பதிவு செய்து, திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியுடன் தங்குமிடவசதியும், திருமணம் இலங்கை முறைப்படியோ அல்லது வீடியோ போட்டோவைப் பார்த்து வசதிக்கேற்பவோ தீர்மானிக்கலாம்.

விபரத்திற்கு:- அப்புலிங்கம் சிங்கப்பூர் கைதொலை பேசி எண்:-
Tel:- 00 65 9 7514941. Tel. Fax:- 0065 2857494.

**LINGAM WEDDING SERVICE**
BLK 219 SERANGOON AVE 4
# 10-208 SINGAPORE-550219
TELE: (65) 4533308



VHS கசெற் மாற்றவும் → V.C.D OR HQ, V.C.D. & NTSC


கொம்பியூட்டர் மூலம் மாற்றுவதைவிட புதிய டிஜிட்றல் தொழில் நுற்பத்தினால், நேரடி மாற்றத்தின் மூலம் தெளிவான படத்தை பார்க்க முடியும்.

STUDIO Chhaya S.K.Ads
Original Idea's From Us

Phone: 074-513888, 594492. E-mail: chhaya@eureka.lk. அசல் எண்ணப்பிரதிகளின் ஆரம்பம் நாமே..



வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின்
முன்னணி அரசியல் சக்தியான ஈ.பி.டி.பி யின் இணையத்தளம்




சமாதானம்- ஜனநாயகம் - சமூகமுன்னேற்றம்

## அலசுவது - இராஜதந்திரி

# மக்களைக் குழப்பும் அரசியல் கோதா!

இலங்கையில் கட்டுநாயக்கா விமானப்படைத்தளம், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் என்பவை மீதான தாக்குதல்கள் உலகின் கவனத்தைப் பெற்றிருந்த தருணத்திலேயே பிரிட்டனிலும் பலத்த குண்டுத்தாக்குதலொன்று இடம்பெற்றுள்ளது.

லண்டன் மாநகரின் ஈலிங் புரோட்வே பகுதியில் காரொன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டொன்று வெடித்ததில் வாகனங்கள், கட்டடங்களுக்குச் சேதங்கள் ஏற்பட்டிருந்தன.

உயிர்ச்சேதம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் ஆறுபேர் இத்தாக்குதலில் கடுங்காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பிரிட்டிஷ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வட அயர்லாந்துப் பிரச்சனை பிரிட்டனில் தொடர்ந்து அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருவதாகவே இருக்கின்றது.

ஓரிரு மாதங்களுக்கு முன்னர் கூட லண்டனில் பி.பி.ஸி. செய்தி நிறுவனம் முன்பாகவும் சக்திமிக்க கார்க்குண்டொன்று வெடித்துச் சேதத்தை ஏற்படுத்தியிருந்தது.

பாராளுமன்ற ஆட்சி முறையின் தாயகம் என்றழைக்கப்படும் பிரிட்டனில், ஜனநாயக நடைமுறைகள் உன்னத நிலையில் இருந்து வருகின்றன. இருப்பினும் அங்கே வட அயர்லாந்துப் பிரச்சனை இறுதியும், முடிவுமான ஒரு தீர்வை எட்டாமலேயே இருந்து வருகின்றது.

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னர் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தின் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருந்தன.

கட்டுநாயக்காவில் நிகழ்ந்ததுபோன்று பாரியதாக அத்தாக்குதல் இருக்கவில்லை. விமான நிலைய ஓடுபாதைகள், மற்றும் பயணிகள் நடமாடும் பகுதி ஆகியவற்றின் மீதே ராக்கெட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதனால் தினந்தோறும் நூற்றுக்கணக்கான விமானங்கள் தரித்துச் செல்லும் லண்டன் ஹீத்ரோ விமான நிலையம் ஒருசில தினங்கள் ஸ்தம்பித்துமிருந்தது.

இத்தாக்குதல் குறித்து வட ஜரிஷ் ஷின்பெயின் கட்சி ஜெரி அடம்ஸ் அன்று கருத்து வெளியிடுகையில், பிரிட்டிஷ் அரசாங்கம் வட அயர்லாந்துப் பிரச்சனை குறித்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தியே ஹீத்ரோ விமானநிலையத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

இரு வருடங்களுக்கு முன்னர் பிரிட்டிஷ் பிரதமர் டொனி பிளேயர் கூட அயர்லாந்துப் பிரச்சனையோடு அரசியல் ரீதியாக சம்பந்தப்பட்டுள்ள ஷின்பெயின் அமைப்புடன் ஆரோக்கியமான அரசியல் உடன்பாடுகளை எட்டியிருந்தார்.

சர்வதேச சமூகம் இந்த உடன்பாட்டைப் பெரிதும் வரவேற்றிருந்தது. அத்துடன் வட அயர்லாந்துப் பிரச்சனை விரைவில் ஒரு முடிவுக்கு வந்து விடும் எனவும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால் வட அயர்லாந்துப் பிரச்சினையில் மீளவும் சிக்கல்கள் தோன்றியுள்ள நிலையில், ஐரிஷ் கெரில்லாக்கள் தமது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

இருந்தபோதிலும் பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர் ஐரிஷ் கெரில்லாக்கள் நடத்திவருகின்ற தாக்குதல்கள் குறித்து உணர்ச்சிவசப்படாதவராக, மிகுந்த நிதானத்துடனேயே நிலமைகளைக் கையாண்டு வருகின்றார்.

ஐரிஷ் கெரில்லா அமைப்பு பிரிட்டனில் ஒரு பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் வட அயர்லாந்துப் பிரச்சனையை பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்க்க வேண்டுமென்பதிலேயே பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

இத்தகைய அணுகுமுறையே இன்று இலங்கை அரசியலிலும் வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாகத் தேவைப்படுகின்றது. அத்துடன் இலங்கையின் இன்றைய அரசியல் நிலபரத்தை அவதானித்து வருகின்ற சர்வதேச சமூகம்கூட வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வு குறித்த அரசியல் அணுகுமுறைகள் விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றன.

கட்டுநாயக்கா விமானத்தளம்தமீதான தாக்குதலையடுத்து இலங்கையின் அரசியல், இராணுவ, பொருளாதார நடவடிக்கைகள் அனைத்துமே கேள்விக்குறியாகி விட்டுள்ளன.

கட்டுநாயக்காவில் 500 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த விமானப் படை மற்றும் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் எயார் பஸ் விமானங்கள் நாசமாகிப் போயுள்ளன.

கட்டுநாயக்காவில் ஏற்பட்ட அனர்த்தம் உல்லாசப் பயணத்துறை சார்ந்த வருமானத்தில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி விட்டுள்ளது.

இலங்கைக்கு உல்லாசப் பயணிகள் வருவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த பல வெளிநாட்டுப் பயண நிறுவனங்கள் தமது பயண நடவடிக்கைகளைக் கைவிட்டுள்ளன.

கட்டுநாயக்கா வழியாக விமானச் சேவைகளை நடத்திய சர்வதேச விமானக் கம்பனிகள் பல தமது போக்குவரத்தை வெகுவாகவே குறைத்துக் கொண்டுள்ளன.

ஏற்கனவே பாரிய பொருளாதாரச் சிக்கல்களுக்கு இலங்கை முகங்கொடுத்துள்ள நிலையில், கட்டுநாயக்கா மீதான தாக்குதல் மேலும் மோசமான பின்னடைவுகளுக்கே வழியமைத்துள்ளது.

பொருளாதார ரீதியான சவால்களை எதிர்கொண்டு, மீண்டும் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துவதற்கு இலங்கை வெளிநாட்டு உதவிகளையே பெரிதும் நம்பியிருக்க வேண்டியதாக இருக்கின்றது.

இத்தகைய இக்கட்டான நிலையில் மேலும் பல கோடி விரயத்தில் இன்னும் ஓரிரு வாரங்களில் அரசியலமைப்புச் சீர் திருத்தம் குறித்து சர்வஜன வாக்கெடுப்பொன்றையும் நடத்துவதற்கு அரசு தயாராகி வருகின்றது.

இதனிடையே தேசிய நல்லிணக்க அரசு என்ற பேச்சு வெளிவர ஆரம்பித்துள்ளதையும் கேட்க முடிகின்றது.

இலங்கையில் கடந்த காலங்களில் நடந்து முடிந்த தேர்தல்களை அவதானிக்கையில் ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணிக்கே மக்கள் ஆதரவு இருந்துள்ளதை காண முடிந்தது.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி கடந்தகாலத் தேர்தல்களில் நாட்டுமக்களினால் நிராகரிக்கப்பட்டே வந்திருந்தது.

எனவே பொதுஜன ஐக்கிய முன்னணியையே ஆளுங்கட்சியாக ஏற்றுக் கொண்டதோடு அக்கட்சியினாலேயே இன்றைய நாட்டுப் பிரச்சனைகளை தீர்க்க முடியுமெனவும் மக்கள் நம்பினர்.



ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குதல், தமிழீழ விடுதலைப் புலிகளோடு பேச்சுக்களை நடத்தி வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்ப்பது போன்ற அனைத்து விடயங்களுக்குமே 1994ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வந்த அனைத்துத் தேர்தல்களிலும் மக்கள் ஆதரவு கிடைத்தே வந்துள்ளது.

மக்கள் எக்கட்சியை விரும்புகிறார்கள்? எத்தகைய தலைவரை எதிர்பார்க்கிறார்கள்? அரசியல், பொருளாதார ரீதியாக மக்கள் காணவிரும்புகின்ற மாற்றங்கள் எவை? போன்றவற்றை வெளிப்படுத்துபவை யாகவே தேர்தல்கள் விளங்குகின்றன.

பதினேழு வருடங்கள் இந்த நாட்டில் அரசு செய்த ஐக்கிய தேசியக் கட்சியையும் நிராகரித்து, அக்கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையையும் மாற்ற வேண்டுமென எதிர்பார்த்த மக்களைக் குழப்பி விடுவதாகவே சர்வஜன வாக்கெடுப்பு, மற்றும் தேசிய நல்லிணக்க அரசாங்கம் என்ற விடயங்கள் காணப்படுகின்றன.

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே கடந்த காலங்களில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவையாவுமே தோல்வியில் முடிவடைந்திருந்தன.

நாட்டில் இன்று இவ்விரு பிரதான கட்சிகள் மட்டுமல்ல. ஒரு மூன்றாவது சக்தியாக ஜனதா விமுக்தி பெரமுன அமைப்பும் இருந்து வருகின்றது.

இது தவிர வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல் கட்சிகள், மலையகத் தமிழ் மக்கள் சார்ந்த அரசியல் கட்சிகள், முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் போன்றவையும் காணப்படுகின்றன.

இந்நிலையில் தேசிய நல்லிணக்க அரசாங்கம் என்பது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவற்றை மட்டுமே உள்ளடக்கிய ஒரு கூட்டாட்சியா? அல்லது ஏனைய அரசியல் கட்சிகள், அமைப்புகளையும் ஒன்றிணைத்த ஓர் ஆட்சியமைப்பா? என்ற கேள்வியே மேலெழுவதாக இருக்கின்றது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ள நிலையில் எதிர்க்கட்சிகள், அரசின் மீது கண்டனக் கணைகளைத் தொடுத்தவையாக இருக்கின்றன. அத்துடன் சர்வஜன வாக்கெடுப்புக்கான திகதி குறிக்கப்பட்ட நிலையில் அரசை எதிர்த்து நிற்கும் அரசியல் கட்சிகள் தமது நிலைப்பாடுகளை விட்டுக் கொடுத்து தேசிய அரசாங்கம், கூட்டரசாங்கம் போன்ற ஏற்பாடுகளுக்கு இணங்கும் என்று எதிர்பார்க்கவும் முடியாது.

நாட்டு நலன் கருதிய, தேசிய நல்லிணக்க அரசை உருவாக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படாமல் இருந்ததில்லை.

முன்பொரு காலத்தில் இன்றைய ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி மட்டுமல்ல. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறை நீக்கப்பட வேண்டுமென்பதை உறுதியாகவே ஏற்றுக் கொண்டிருந்தது.

அத்துடன் பிரிட்டிஷ் அமைச்சராக விருந்த லியாம் பொக்ஸ் சில வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்து தமது பெயரைக் கொண்டதாகவே ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே ஓர் உடன்பாடொன்றையும் ஏற்படுத்தி விட்டிருந்தார்.

இந்த உடன்பாடு தேசியப் பிரச்சனைகள் பலவற்றுக்கும் தீர்வு காண்பதாக இருக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புக் கூட அரசியல் வட்டாரங்களில் தோன்றியிருந்தது.

எனவே அத்தருணத்தில் தேசிய அரசு, அல்லது தேசிய நல்லிணக்க அரசு போன்ற விடயங்களில் காத்திரமான சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருக்க முடியும்.

ஆனால் 'லியாம் பொக்ஸ்' உடன்படிக்கை தோன்றிய வேகத்திலேயே மறைந்துபோனதுடன், நாளடைவில் ஒரு நகைப்புக்குரிய விடயமாகவும் அந்த உடன்படிக்கை பிரதான கட்சிகளினால் நோக்கப்பட்டிருந்தது.

அண்மைக்காலங்களில்கூட இலங்கையின் பிரதான பிரச்சனையாக இருந்து வரும் வடக்கு-கிழக்குப் பிரச்சனையை தீர்க்கும் விடயத்திலும் ஆளுங்கட்சிக்கும், எதிர்க்கட்சிக்குமிடையே நல்லிணக்கமோ, கருத்தொருமிப்போ எற்படவில்லை.

இந்நிலையில் ஒரு காத்திரமான கட்டுக்கோப்பான தேசிய நல்லிணக்க அரசு அமையும் என எதிர்பார்ப்பதற்கில்லை. அத்தகையதொரு அரசு தோன்றினாலும் நீண்ட காலம் அது நீடித்து நிலைக்கப் போவதில்லை என்பதையே கடந்தகால அரசியல் அனுபவங்கள் மூலம் அறிந்து கொள்ளவும் முடிகின்றது.

எனவே இலங்கையின் அரசியல் கோதா என்பது தற்போது முழுநாட்டையும் குழப்பிக் கும்மாளம் போடுவதாகவே இருக்கின்றது. ■

## அதிரடி அய்யாத்துரை



**நாட்டுல** என்ன நடக்குதெண்டு புரியாம சனம் குழம்பிப்போயிருக்குதெண்டு சொல்லுகினமல்லோ. சனத்துக்கு மட்டுமில்ல அரசியல்வாதிகளின்ர நிலையும் உதுதான். உந்தாக்களுக்கும் என்ன நடக்கிறது, நடக்கப் போகுதெண்ட தெளிவு சுத்தமாக் கிடையாது! ஆளாளுக்கு ரீ.வியில தர்க்கம் புரியினமே தவிர எதைப் பற்றிப் பேசுகினம் எண்டு அவைக்கே புரியுதில்ல. போனவாரம் ஒரு தமிழ்ப் பிரமுகரிட்ட போய் சர்வஜன வாக்கெடுப்பில் அரசாங்கம் வென்றால் என்ன நடக்குமெண்டு கேட்டனான். அர்த்த புஷ்டியான ஒரு பதில் தந்தவர் "தினசரி நிறைய ரீ.வி. புரோக்கிறாம்ல முகம் காட்டி அரசியல் பேச வேண்டியிருப்பதால அதுபற்றி நான் இன்னும் யோசிக்க இல்ல" வேறு எதைப்பற்றி யோசிக்கிறவர்?! உந்த மாதிரி ஆக்களின்ர வாதங்களைத் தான் சனமும் வாய்பிளந்து கொண்டு பார்க்குது!

***கிழக்கு கட்சிக்காரரின்ர*** தலைமை சண்டையை பார்க்கைக்க கார்ட்டூன் பார்க்கிறமாதிரிக் கிடக்கு. உதுல அரசியல் வாதிகள் நிறைய பாடம் படிக்கலாம் பாருங்கோ. சனிக்கிழமை இரவில ஒரு அறிக்கையை தயாரிச்சு அதுல தான்தான் தலைவரெண்டு எழுதி ஊடகங்களுக்கு ஃபக்ஸ் பண்ணி விட்டுட்டா மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பேப்பரில அதுவந்துடும். அதைபார்த்த பிறகுதானே இருக்கிற தலைவர் அறிக்கை விடவேணும். அதனால முதல்ல அறிக்கை விடுறவர் சிம்பிளா 24 மணிநேரம் தலைவரா இருந்துடலாம். உந்த டெக்னிக் ஹிஸ்புல்லாவுக்கு தெரிஞ்சிருக்கு. ஏனையவர்களும் பின்பற்றலாம். ஹக்கீமின்ர நிலைமையும் பாவமாய்ப் போச்சு. உந்தாள் அட்டகாசமான ஐடியாக்களோடு அரசாங்கத்த விட்டு வெளியில வந்தாலும் உவர் எதிர்பார்த்த அவசரத்துல எதுவும் நடக்கேல்ல. என்னயிருந்தாலும் உந்தாக்களின்ர வெட்கம் கெட்ட தலைமைப் போட்டியக் கண்டு மறைந்த தலைவர் மரணித்தும் அழுவார்.

***ரீ.வி. பார்த்தனான்.*** பொடியன்கள் போகேக்க வடிவான பெட்டைகள் நெளியுது ஏதோ புடவைக் கடைக்காரரின்ர அட்வடைஸ்மன்ட்டெண்டு நினைச்சிடாதீங்கோ. உது ஆமிக்கு ஆள் சேர்க்குற விளம்பரமாம். எனக்கெண்டால் புரியேல்ல. ஆமிக்கு உதுதான் வேலையோ... பெட்டைகளின்ர டேஸ்ட் பார்க்கணுமெண்டால் எங்களோடு சேருங்கோவென்று சொல்லுற மாதிரியில்லயே.. யுத்தத்துக்கென்று சேர்த்தால் உத சரியா செய்யினமில்ல. உந்த மாதிரி பெட்டைகளின்ர பின்னால சுத்தவாவது ஆமியில சேருங்கோ வெண்டு சொல்லாம சொல்லுகினம் போல...

***ஜனநாயகத்தைப்*** பாதுகாக்கவென்று யு.என்.பி.யின்ர பின்னால திரியுற தமிழ்க்கட்சிக்காரர் வவுனியாவில தங்கட வழமையான 'ஜனநாயக' வித்தைய கடந்த வாரம் காண்பிச்சவை ஒரு பஸ் ஸ்டான்ட உருப்படியா நடத்த தெரியாத உவை, நாட்டுக்கு ஜனநாயகம் கேட்டு வீதிப் போராட்டம் நடத்துறது வேடிக்கையா இல்லையே.. வைரவப் புளியங்குளத்தில உவை அடிபட்டுக்கொள்ள இதுதான் சந்தர்ப்பம் எண்டு இராணுவம் போய் முகாம்களை சோதனை செய்ய... எப்பதான் திருந்தப்போகினமோ...

**எந்த நேரமும் இன்பமாக வாழ வேண்டும் என்று எவன் பிடிவாதம் பிடிக்காமல் இருக்கிறானோ-அவன் ஒவ்வொரு நொடியும் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான்.**

*-ஸ்டீவன்ஸன்-*

## உண்மைத் தொடர் 19




அதிகாரம் கையில் கிடைத்ததும் தன்னை உறுதி செய்து கொள்வதில் ஹிட்லர் ஆரம்ப நாட்களில் பல பிரச்சனைகளை எதிர்கொண்டான். எதிரணி பலமாக இருந்ததனாலும் கூட்டரசாங்கத்தில் நாஸி அமைச்சர்களின் எண்ணிக்கை சிறு பான்மையாக இருந்ததனாலும் நெருக்கடிகள் தோன்றின. ஆனால் தனக்கேயுரித்தான கபடத்தன அரசியலால் அவற்றைச் சீர்செய்து கொண்டான்.

அரசியல் ரீதியிலான பிரச்சனைகளுக்கு மத்தயில் ஹிட்லர் எதிர்கொண்ட மற்றொரு சங்கடம் ஜெர்மன் இராணுவம் தொடர்பானது.

நாஸிகளுக்கென தனியான பகுதி நேர படைப்பிரிவாக எஸ்.ஏ.என்ற படையணி நீண்டகாலமாக இயங்கி வருகின்றது. எஸ்.ஏ.படையணி முற்று முழுதாக ஹிட்லரின் கட்டுப்பாட்டில்தான் இருந்தது. இந்த அமைப்பின் தலைவர்களது கட்டுப்பாட்டுக்குள் ஜெர்மன் இராணுவத்தை கொண்டுவர



ஹிட்லர் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இதை இராணுவம் விரும்பவில்லை. ஒரு கூலிப்படையின் தலைமையின் கீழ் இயங்க இராணுவத்தினர் ஆர்வங்காட்டாததால் ஹிட்லருக்கும் இராணுவ தலைமைக்கும் இடையில் ஒரு பனிப்போர் ஆரம்ப நாட்களில் இருந்தது. ஆனால் இது நல்லதல்ல என்பதை ஹிட்லர் உணர்ந்திருந்தான். இராணுவத்தை பகைத்துக்கொண்டால் தன்னை பதவியை விட்டு தூக்கி எறிய அவர்களால் முடியும் என்பதை அவன் அறிந்திருந்தான். அதே நேரம் தனக்கு இராணுவத்தின் உதவி மிக அவசியம் என்பதும் ஹிட்லர் அறியாததல்ல.

இத்தகையதொரு பின்னணியில் 1933ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3ம் திகதியன்று ஓர் இராப்போசன வைபவத்தில் ஜெர்மன் இராணுவத் தளபதிகளை முதன் முதலில் ஹிட்லர் உத்தியோகபூர்வமாக சந்தித்தான்.

அவர்கள் மத்தியில் உரையாற்றி அவன் தனது உள்ளத்தில் ஒளிந்திருந்த உண்மையொன்றைஅப்போது வெளிப்படுத்தினான். "நாட்டை ஆளுவதற்கு ஜனநாயகம் சிறந்த வழியல்ல" என்று அவன் வெளிப்படையாகவே கூறினான். "அனைத்து விடயங்களிலும் உத்தரவிடுபவராக ஒருவரே இருக்க வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம்" என்றான்.

நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களை எடுத்துக் கூறிய ஹிட்லர் "ஐரோப்பிய சந்தையை மீண்டும் ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குள் கொண்டு வந்தாலே தவிர நிலைமை சீர்செய்ய முடியாது" என்று சொன்னான். இவை எல்லாவற்றுக்கும் முன்னர் நாட்டின் ஆயுத பலத்தையும் படைப் பிரிவுகளையும் பெருக்க வேண்டுமென அவன் வலியுறுத்திக் கூறினான்.

அதன்படி புதிய இராணுவம் ஒன்றையும் விமானப்படை ஒன்றையும் கட்டியெழுப்புவதென்று தனது திட்டத்தை விபரித்ததுடன் இவை எதுவும் பிரான்ஸுக்கு தெரிய வரக்கூடாதெனவும் அவ்வாறு தெரிந்து கொண்டால் அதை தடுக்க பிரெஞ்சு நிருவாகம் முயலக்கூடும் என்றும் கூறி வைத்தான்.

அதே நேரம் ஹிட்லர் குறித்து இராணுவத்துக்குள் இருந்த சகல சந்தேகங்களையும் முடிவுக்கு கொண்டு வரும் வகையிலும் அன்றைய இரவில் அவனது உரை அமைந்திருந்தது. எஸ்.ஏ.படைப்பிரிவை இராணுவத்துக்கு சமமாக உறுதிப்படுத்துவதில்லை என உறுதியளித்தான. இராணுவம் ஒரு போதும் அரச நிருவாகத்தில் தலையிடக் கூடாது என்பதையும் சொல்லிவைத்தான். அத்துடன் ஜெர்மனியில் சில அரசியல்வாதிகள் மத்தியில், பழைய முடியாட்சி முறையை மீண்டும் கொண்டுவருவது தொடர்பான ஒரு கருத்து நிலவியது. அதனை திட்ட வட்டமாக நிராகரித்த ஹிட்லர் அந்த பேச்சுக்கே இடமில்லை என கூறி விட்டான்.

இந்த உரையின் பின்னர் இராணுவத்துக்கு ஹிட்லர் மேலிருந்த சந்தேகங்கள் பெரும்பாலும் நீங்கிவிட்டன. தாம் எதிர்பார்த்தது போன்ற ஒரு தலைவர் தமது நாட்டுக்கு கிடைத்து விட்டதாக இராணுவத் தளபதிகள் பலர் கூறிக்கொண்டனர்.

☆☆☆

ஜிலி ரூபல் கர்வமாக நின்றிருந்தாள். தனது காதலன் நாட்டின் தலைவர் என்ற நினைப்பு அவளை மிகுந்த உற்சாகத்துக்குள் வைத்திருந்தது. ஏனைய நாட்களை விட அதிக ஆசையுடன் ஹிட்லரை நெருக்கமாக அணைத்து முத்தமிட்டாள்.

இராப்போசன விருந்தொன்றின் முடிவில் அவன் களைப்பாக அமர்ந்திருந்தான். அந்த விசாலமான மாளிகையின் விசாலமான அறையில் ஜிலியின் இறுக்கமான அரவணைப்பின் இதமான சுகந்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்த ஹிட்லருக்கு உடம்பு சூடாக இருந்தது. அவள் அனுமதியில்லாமலேயே அவனது ஆடைகளை உரிமையுடன் கலைந்து கொண்டிருந்தாள். பதிலுக்கு ஹிட்லரின் கைகளும் அதே காரியத்தை அவளிடத்தில் செய்தன. ஜிலியின் உடம்பில் எப்பொழுதுமே ஒரு தனி அழகு இருப்பதாக ஹிட்லர் அடிக்கடி கூறுவான். அவனது உதடுகள் அவளது கழுத்தின் பின்பகுதியை மென்மையாக முத்தமிட்டன. ஜிலியின் காது மடல்களை இலேசாகக் கடித்தான். அவள் இன்பவலியில் துடித்தாள். பின்புறமாக நின்றிருந்த ஹிட்லர் அவளின் முன்பக்க மேடுகளை அழுத்த மாக இறுக்கி அணைத்திருந்தான். அவனது கைகளை விடுவிக்க விரும்பாமலே அவன் முன்புறமாக திரும்பினாள். ஜிலியின் கண்களில் தெரிந்த மயக்கத்தை மேலும் பலமடங்கு அதிகரிக்கும்படி முத்தமிட்டான். அவளது பிடி அழுத்தியது. ஹிட்லரை கடித்துத்தின்பது போல வேகமாக கவ்விப் பிடித்தாள்.

☆☆☆

ஜெர்மன் பாராளுமன்றக் கட்டடத்துக்கு தீ வைத்து விட்டார்கள் என்று செய்தி ஒரு நொடியில் பேர்லின் முழுவதும் பரவியது. மக்கள் ஒன்று கூடும் சகல இடங்களிலும் அதைப்பற்றித்தான் பேசினார்கள்.

வென்டாலியுப் என்ற டச்சுக் காரரினால் ரிச்சிஸ்டர் பாராளுமன்றக் கட்ட டத்துக்கு தீ வைக்கப்பட்டது. இந்த தீ வைப்பு சம்பவம் ஒரு தனி மனிதனின் செயல் என்பதை யாரும் நம்புவதாக இல்லை. ஹிட்லர் திட்டமிட்டே இதை செய்திருக் கலாம் என்றே பலரும் கூறினார்கள். ஆனால் ஹிட்லரோ கம்யூனிஸ்டுகளை குற்றஞ்சாட்டினான். எப்படியிருந்தாலும் பாராளுமன்றத்தில் பிடித்த தீ அவனுக்கு பலவழிகளில் வாய்ப்பாக அமைந்து விட்டது. தனக்கெதிரானவர்களை மடக்க இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டான்.

பாராளுமன்றக் கட்டடம் எரியும் போது அதனை தனது வீட்டில் இருந்து பார்வையிட்ட அமைச்சர் ஒருவர் பதறியடித்துக் கொண்டு அந்தத் தகவலை தொலைபேசியூடாக ஹிட்லருக்கு தெரியப்படுத்திய போது "கவலைப்படாதே அது சுவர்க்கத்தில் இருந்து வந்த நெருப்பு" என்று மகிழ்ச்சிகரமாக கூறினான்.

தன்னை உறுதிப்படுத்திக் கொள்ளும் சந்தர்ப்பத்தை இந்தத் தீ ஹிட்லருக்கு தாராளமாக வழங்கியது. சம்பவம் நடைபெற்ற மறுநாள் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி 'ஜெர்மன் மக்களை பாதுகாக்கும் சட்டம்' என்ற அடக்குமுறை சட்டம் ஒன்றை அறிவித்தான் ஹிட்லர். அதன் பின்னர் தனது உத்தரவின்பேரில் ஆயுதப் படைகளைக்கொண்டு எந்தவொரு அக்கிரமத்தையும் அரங்கேற்ற அவனுக்கு அனுமதி கிடைத்தது.

முதல் காரியமாக கம்யூனிஸ்ட் கட்சியை தடைசெய்தான். அந்த கட்சிக் காரியாலயத்துக்கு தனது எஸ்.ஏ.படையினரை அனுப்பி சீல் வைத்து மூடினான். இது கடும் சர்ச்சைக்குரிய நிகழ்வாக அமைந்தபோதும் மக்களின் நலன் கருதியே தான் அவ்வாறு செய்ததாக ஹிட்லர் கூறினான்.

இதனையடுத்து வேறுசில சிறிய கட்சிகளும் தடை செய்யப்பட்டன. மக்கள் அதுவரை காலமும் அனுபவித்து வந்த பல உரிமைகள் இரத்துச் செய்யப்பட்டன. ஜனநாயக ரீதியிலான போராட்டங்களுக்கு அரசாங்க படைகளும் தனிப்பட்ட படைப் பிரிவும் கூட்டாக இடைஞ்சல் செய்தன.

தனது அரசியல் எதிரிகள் ஒவ்வொருவராய் தேடிப் பிடித்து வரிசைப் படுத்தி வளைத்திருந்தான் ஹிட்லர். அந்தப் பணியை எஸ்.ஏ.யின் உளவுப் பிரிவு கன கச்சிதமாக செய்தது. ஹிட்லருக்கு எதிராக கருத்துக் கூறுபவர்களின் விபரங்கள் சேகரிக்கப் பட்டன. சந்தர்ப்பம் வரும் போது மண்டையில் போடக்கூடிய வகையில் திட்டங்கள் தயாராகவே இருந்தன.


கையில் கிடைத்த அதிகாரத்தை கவிழ விட்டுவிடக்கூடாது என்பதில் ஹிட்லர் மிகக் கவனமாக இருந்தான். அதற்காக எந்த அட்டூழியத்துக்கும் தயாரானான். அடுத்தடுத்த நாட்களில் அவனது காரியங்கள் அரசியல் தலைவர்களை அதிர்ச்சியூட்டும் வகையில் அமைந்திருந்தன.

கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்ட கையோடு அதனுடன் தொடர்புகளை கொண்டிருந்த பல தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டன. பலர் கைது செய்யப் பட்டார்கள். தொழிற்சங்கப் போராட்டங்கள் சகலதும் நசுக்கப்பட்டன. அத்தகைய போராட்டங்களுக்கு தலைமை தாங்கு பவர்கள் அரச அனுமதியுடன் கூலிப்படைகளின் எச்சரிக்கைக்கு உள்ளானார்கள். பலர் காணாமல் போனார்கள்.

இவ்வாறு ஒருபுறத்தில் தன்னை நிலைப்படுத்தும் அதேவேளை மறுபுறத்தில் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பணியிலும் ஹிட்லர் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கினான். **வருவான்...**

**ஷானு**

## மற்றொரு பாலியல் வல்லுறவு சர்ச்சையில் மைக் டைஸன்



ஏற்கனவே ஒரு முறை பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டில் சிக்கி சிறைத் தண்டனை அனுபவித்த அதிபார குத்துச் சண்டை வீரர் மைக் டைஸன் மீண்டும் ஒரு தடவை இதே மாதிரியான சர்ச்சை ஒன்றில் சிக்கிக் கொண்டுள்ளார்.

இதற்கு முன்னர் அமெரிக்கக் கறுப்பின அழகி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதற்காக சிறை சென்று திரும்பிய டைஸன் பின்னர் ஹொலிபீல்டின் காதைக் கடித்ததற்காக போட்டித்தடைக்கு உள்ளானார்.

சிறிது காலம் சர்ச்சைகள் ஏதுமின்றி பல போட்டிகளில் வெற்றியும் பெற்று வந்த மைக் டைஸனுக்கு மீண்டும் சகுனம் பிழைக்கத் தொடங்கியிருக்கிறது.

தன்னை டைஸன் பலாத்காரம் செய்து விட்டதாக புகார் செய்திருக்கிறார் 50து வயது பெண்ணொருவர்.

லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இருந்து 70 மைல் தொலைவில் உள்ள பிக் பியர் நகரத்தில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து டைஸன் தன்னை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும் அப்போது தனது மார்பை கடித்துவிட்டதாகவும் கூறி இந்தப் பெண் சிகிச்சை பெற்றிருக்கிறார்.

தன்மீது சேறு பூசும் நோக்குடன் கட்டவிழ்த்து விடப்பட்ட சதி என்று இந்த குற்றச்சாட்டை மறுக்கிறார் டைஸன்.

பொலிஸார் வழக்குத் தொடுக்க தயாராகின்றனர்.

## குதிரையில் இருந்து விழுந்த சார்ல்ஸ்



பிரிட்டிஷ் இளவரசர் சார்ல்ஸ் போலோ விளையாடுவதற்காக குதிரை மீது ஏறியவர் தவறி வீழ்ந்து முதுகில் காயத்தோடு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

தர்மஸ்தாபனம் ஒன்றுக்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் இந்த போட்டி நடைபெற்றது. கௌரவ அதிதியாக கலந்து கொண்ட சார்ல்ஸ் குதிரை மேலிருந்து குப்புற விழுந்துள்ளார்.

52 வயதான சார்ல்ஸ் இதற்கு முன்னரும் பலதடவை குதிரையில் இருந்து விழுந்திருக்கிறார். ஒருமுறை நரிவேட்டையின் போது தவறிவிழுந்து தோற்பட்டை மற்றும் எலும்பு முறிவு ஏற்பட்டு பல நாட்கள் சிகிச்சை பெற்றிருந்தார்.

பெண் குதிரை என்றால் திறமையாக ஓட்டியிருப்பாரோ என்னவோ?!

## அரைமடங்கு வயதில் குறைந்த இளைஞர்கள் மேல் ஆசைப்படும் அம்மணிகள்



ஐரோப்பிய நாடுகளில் உள்ள வயது கூடிய தாய்மாரில் நான்குபேரில் ஒருவர் தம்மை விட இளவயது ஆண்களுடன் குடித்தனம் நடத்துவதாக ஆய்வொன்றில் இருந்து தெரியவந்துள்ளது. அமெரிக்காவிலும் இதே நிலைமை காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பாஷனா அல்லது வயது குறைந்த இளைஞர்களை மணமுடித்து அதிகபட்ச சுகம் அனுபவிக்கும் நோக்கம் கொண்ட செயலா என்பதை பிரித்தறிய முடியாமல் இருப்பதாகக் கூறுகிறார்கள் சில மனோதத்துவ நிபுணர்கள்.

ஹொலிவுட் திரைப்படங்கள் பலவற்றிலும் 'டினாஸ்ட்' உட்பட பிரபலமான நாடகங்களிலும் நடித்து புகழ்பெற்ற 68 வயதான ஜோன் கொலின்ஸ் இது விடயத்தில் மிகவும் பிரபலமானவர்.

இவர் தன்னைவிட அரை மடங்கு வயதில் குறைந்த பல இளைஞர்களை திருமணம் செய்திருக்கிறார். அவர்கள் ஒவ்வொருவரிடமும் இருந்து கிடைக்கும் வித்தியாசத்தை அனுபவித்து விட்டு பிரிந்து விடுவது இவரது வழக்கம். ஜோன் கொலின்ஸின் கடைசித் தெரிவு 35 வயதான பேர்ஸி கிப்சன். கொலின்ஸின் வயது 68 என்றாலும் 'அந்த' நேரத்தில் அவர் 28 வயது பெண்போல உற்சாகமாக செயற்படுவதாக சேர்டிபிகேட் கொடுக்கிறார் கிப்ஸன். இவருடன் நெருங்கிப் பழகிப் பலரும் இதேமாதிரியான 'நல்லபிப்பிராயத்தைத்தான்' கொண்டிருக்கிறார்கள்.

'வன் மிலியன் இயர்ஸ் பி.சி' என்ற திரைப்படத்தின் மூலம் புகழ் பெற்ற ருக்வெல் வேல்ச் என்ற நடிகையும் இம்மாதிரியான விளையாட்டில் கெட்டிக்காரி என புகழப்படுகிறார். இவர் இதற்கு முன்னர் 3 பேரைத் திருமணம் செய்திருக்கிறார். அந்த 3 திருமணங்களும் வெற்றி பெறாமல் போனமைக்கு காரணம் அவர்கள் தன்னை விட வயதில் கூடியவர்களாக இருந்தமையே என்பது ருக்வெல்லின் அபிப்பிராயம்.

இப்போது இவர் தன்னை விட அரை மடங்கு வயது குறைந்த ரிச் பெல்மர் என்ற இளைஞருடன் வாழ்கிறார். ருக்வலின் வயது 60 வயதை தாண்டி விட்டது. தனது முன்னைய கணவன் மாரைவிட பெல்மர் தன்னை 'நன்றாக'க் கவனிப்பதாகத் திருப்தியுடன் கூறுகின்றார்.

மூன்ஸ்ட்ரக் என்ற விஞ்ஞான புனைக் கதையை அடிப்படையாக வைத்து தயாரான திரைப்படம் ஒன்றின் மூலம் பிரபலமான சீர் என்ற 54 வயது நடிகையின் துணைவருக்கு வயது 26 மட்டும்தான். ரொப் கெம்லட் என்ற இந்த இளைஞரின் திறமைகளை மெச்சிப் புகழ்கிறார் நடிகை.

உலகப் புகழ் பெற்ற பாடகி மடோனாவின் கடைசிக் காதலர் கை ரிச்சின் வயது 32 மடனோ 40 வயதை கடந்து விட்டார். வயது குறைந்த இளைஞர்களை அனுபவிப்பதில் மடோனாவுக்குள் ஒரு தீரா வெறி உண்டென கூறுகிறார்கள்.

இவ்வாறு பல உதாரணங்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பிரபலமாக உள்ளன. புகழ்பெற்றவர்களின் கதைகள் மட்டுமே வெளியில் வருகின்றன. ஆனால் இது ஒரு மோகமாக அங்கு பரவிச் செல்கின்றது.

வயதில் குறைந்த இளைஞர்களை மணமுடிப்பது தொடர்பாக பல்வேறு வகையான அபிப்பிராயங்களை மனோவியல் நிபுணர்கள் வெளியிடுகின்றனர்.

சில பெண்கள் வயது அதிகமாகும் போது அதீத காமப்பசியால் பீடிக்கப் படுவதாகவும் அப்போது திடகாத்திரமான இளைஞர்களின் உறவை பெரிதும் விரும்புவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேவேளை இளைஞர்கள் ஏன் இவ்வாறான வயது கூடிய பெண்களை விரும்புகிறார்கள் என்ற கேள்விக்கும் பல வகையான பதில் கூறப்படுகின்றன. இவர்களிடம் வித்தியாசமான ஓர் அனுபவத்தை காண முடியும் என்றும் அது தனியான சுகம் என்றும் பலர் சொல்கிறார்கள். ஆனால் இளைஞர்களின் உண்மையான நோக்கம் அத்தகைய பெண்களின் சொத்து செல்வங்களை கவ்வுவதுதான் என்பதே பொதுவான அபிப்பிராயம். இவ்வாறான திருமணங்களில் பெரும்பாலும் பணக்காரப் பெண்களே அதிக நாட்டம் கொண்டிருக்கிறார்கள். சொத்துக்கள் கைமாறியதும் அல்லது தீர்ந்ததும் இளைஞர்கள் பலர் மெதுவாக நழுவியதையும் அவதானிக்க முடியும்.



# பச்சை அழகிக் கண்காட்சி

← கண்டதற்கும் கண்காட்சி வைப்பது இப்போது சகஜமாகிவிட்டது. மிகச் சமீபத்தில் தாய்வான் நாட்டில் ஒரு கண்காட்சி நடந்தது. என்ன கண்காட்சி தெரியுமா?

பச்சை குத்திக் கொண்ட அழகிக் கண்காட்சிதான் அது. அந்தக் கண்காட்சியில் உடலெங்கும் பச்சை குத்திய பல இளம் பெண்கள் கலந்து கொண்டனர். அவர்களில் ஒருத்தி தான் இந்தப் பெண்.

ஒரு சில இடங்களைத் தவிர உடலெங்கும் பச்சை குத்தியிருந்த இந்தப்பாவை, பார்வையாளர்களைத் தன் பக்கம் இழுக்க ஒரு குட்டி மலைபாம்பைத் தூக்கித் தோளிலே போட்டுப் பவனி வந்தார்.

தாய்வான் நாட்டு இளம் பெண்கள் தங்களது உடலில் ஓவியங்களைப் பச்சை குத்திக் கொள்வது வழக்கம். இப்போது இது அங்கு அதிகரித்துள்ளது. உடலில் பச்சை குத்திக் கொள்ள நம் நாட்டு மதிப்பில் சுமார் 4 இலட்சம் ரூபா செலவாகிறது. தொகையைப் பார்த்து மலைத்துப்போகாதீர்கள். இது அந்தநாட்டின் சாதாரண ஊழியர்களின் சாதாரண இருமாதச் சம்பளம்.



# பாம்புத் தொப்பி

↑ அருகே ஓர் அழகி தோளில் பாம்பைத் தொங்கப் போட்டுக் கொண்டு காட்சியளிக்கிறார். இங்கே இன்னொரு அழகி பாம்பைத் தூக்கித் தலையில் வைத்திருப்பது போல் காட்சியளிக்கிறார்.

இலண்டனில் நடந்த ஆடை அலங்காரக் கண்காட்சியில் வந்த அழகி ஒருத்தி பாம்பு போன்ற தொப்பியை அணிந்திருந்தார்.


பலரையும் கவர்ந்த இந்தத் தொப்பியை வடிவமைத்தவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஃபிலிப் ட்ரேஸி.

# ஆயுதங்களால் ஆபத்து

→ உலகம் முழுவதும் சுமார் 50 கோடி வகையான துப்பாக்கிகள் இருக்கின்றன. துப்பாக்கிகளால் துயரமே நீடிக்கும். இந்தத் துப்பாக்கிகளை அழிப்பதால் மட்டுமே உயிரிழப்புக்களும் சேதங்களும் குறையும் என்பதை வலியுறுத்தி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அண்மையில் மாநாடு ஒன்று நடைபெற்றது.

துப்பாக்கிகளினால் ஏற்படும் உயிரழிவுகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இந்த மாநாடு 10 நாட்கள் நடந்தது.

மாநாடு நடந்த இடத்திற்கு வெளியே துப்பாக்கிகளால் உயிரிழந்த காயமடைந்த சிலரின் காலணிகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.



# தகவல் பெட்டி



# குமுறும் எரிமலை

→ இத்தாலி நாட்டில் உள்ள எட்னா எரிமலை அண்மையில் குமுறியபோது, வெளியேறிய புகைதான் இது.

கடந்த சில வாரங்களாக இந்த எரிமலையின் சீற்றம் அதிகரித்திருந்ததால் ஏராளமான நெருப்புக் குழம்புகள் (லாவா) வெளியேறின.




# இரக்கமற்ற கொலைகள்

↑ அவுஸ்திரேலிய நாட்டில் கங்காருகள் எவ்வளவு அதிகமாக இருக்கின்றனவோ அவ்வளவு அதிகமாக காட்டுப்பூனைகளும் இருக்கின்றன.

நம் நாட்டில் வளர்க்கப்படும் நாய்கள் போன்ற அளவில் காணப்படும் இந்தக் காட்டுப்பூனைகளால் தொல்லைகளும் அதிகம். காட்டுப் பூனைகளின் தொல்லைகளைக் குறைப்பதற்காகச் சிலர் அவற்றைக் கொன்று மரத்தில் கட்டித் தொங்க விடுவார்கள். இவற்றைப் பார்த்ததும் ஏனைய காட்டுப் பூனைகள் எட்டிப் பார்க்காது.

அண்மையில் வில்லியம்ஸ் கிரேக் என்ற இடத்தில் ஒரு மரத்தில் 17 பூனைகள் கொன்று தொங்கவிடப்பட்டன. அதை ஒருவர் படமெடுக்கிறார்.




# சுற்றுச் சூழல் பாதுகாப்பு

→ சுற்றுச் சூழல் பாதுகாப்பில் உலகநாடுகள் கடும் அக்கறை காட்டி வருகின்றன. ஆனால் கனடாவும் அமெரிக்காவும் இந்த விஷயத்தில் அலட்சியப்போக்கைக் கொண்டுள்ளன என்று கனடாவின் ஸ்டீபன் கில் போல்ட் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அது மட்டுமன்றி இந்த அலட்சியப் போக்கைக் கண்டித்து இங்கிலாந்தைச் சேர்ந்த கிறிஸ் ஹோல்டனுடன் சேர்ந்து எதிர்ப்புப் பதாகை ஒன்றை கனடாவில் டொரண்டோ நகரின் பிரமாண்டமான கட்டடத்தின் வெளிப்புறம் ஏறித் தொங்க விட்டனர்.

ஸ்டீபன் கில் போல்ட் மற்றும் கிறிஸ் ஹோல்டன் இருவரும் பசுமை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

# அநாதையான கழுகு



↑ உற்றார் உறவினர்களை இழந்து எதுவுமின்றி ஆதரவற்று இருப்போரை அநாதை என்பார்கள். இது மனிதர்களுக்கு மட்டுமன்றி ஏனைய ஜீவராசிகளுக்கும் பொருந்தும்.

படத்தில் இருக்கும் கழுகாரும் ஓர் அநாதைதான். ஆப்கானிஸ்தான் நாட்டின் தலைநகர் காபூலில் உள்ள சரணாலயம் ஒன்றில் இருந்த கழுகுகளில் இவர் ஒருவர் மட்டும்தான் இப்போது உயிருடன் இருக்கிறார். ஏனையவை யாவும் உள்நாட்டுப் போரின் விளைவாகக் கொல்லப்பட்டுவிட்டன.

# காதோடு சொல்லுகிறோம்

'இரண்டெழுத்துப் பூ' நடிகை, அவரை அறிமுகப்படுத்திய இயக்குநரை காதலிப்பது உலகறிந்த விஷயம். அவர்களது திருமணம் எப்போது நடக்கும் என்று அவர்களிடம் கேட்டால், 'விரைவில்' என்று அவர்கள் பதில் சொல்கிறார்களாம். உண்மையில் அவர்களுக்குத் திருமணம் நடந்து வருடங்கள் இரண்டாகி விட்டதாம். நடிகை வீட்டில் இருக்கும்போது கழுத்தில் தாலியுடன் தான் காட்சியளிக்கிறாராம்.

'குஷியான இயக்குநரைக் காதலித்து வரும் அந்த மூன்றெழுத்து 'பூமி' நடிகை, தமது காதலைப் பகிரங்கமாக அறிவிக்கும்படி காதலரை நச்சரித்து வருகிறாராம். எதையும் விளையாட்டுத்தனமாக எடுத்துக் கொள்ளும் அந்தப் பிரகாசமான இயக்குநரோ தமது காதலைப் பகிரங்கப்படுத்தத் தயங்குகிறாராம். அத்துடன் தமது காதலைப் பற்றி பேட்டி எதிலும் கூறக்கூடாது என்று நடிகைக்கு நிபந்தனையும் விதித்துள்ளாராம்.

நடன சுந்தரத்தைக் காதலித்து வரும் 'சிம்ம' நடிகைக்கு என்ன பிரச்சனையோ தெரியவில்லை. படப்பிடிப்புத் தளத்தில் எல்லோரிடமும் எரிந்து விழுகிறாராம். அத்தோடு தான் சம்பந்தப்பட்ட காட்சிகள் எடுக்கப்பட்டதும் திடுதிடுப்பென ஒப்பனை அறைக்குள் சென்று தாளிட்டுக்கொண்டு தனிமையில் இருக்கிறாராம். 'நீலப்' பட விவகாரமாக காதலருடன் நடந்து வரும் பனிப்போர்தான் இதற்குக் காரணம் என்கிறார்கள்.

சமீபத்தில் வைகைப்புயல் நகைச்சுவை நடிகரைத் தமது படத்தில் நடிக்க வைக்க தயாரிப்பாளர்கள் இருவர் அவரிடம் சென்றார்கள். தான் நடிப்பதாக இருந்தால் 'மூக்கழகி' நடிகையைத் தனக்கு ஜோடியாகப் போடும்படி கூறியிருக்கிறார் வைகைப்புயல். தயாரிப்பாளர்களும் 'மூக்கழகி' நடிகையிடம் சென்று மேற்படி சமாச்சாரம் கூற, அவர்களை விரட்டாத குறையாக மறுத்து அனுப்பிவிட்டாராம். 'கிருஷ்ணா' படத்தில் தமாக நடிகருடன் 'மூக்கழகி' ஜோடி சேர்ந்ததைத் தொடர்ந்துதான் வைகைப்புயலுக்கு இந்த எண்ணம் வந்ததாம்.


ரீஷி-ரித்திகா
படம்: சப்தம்

# தமிழ்த்திரையுலகில் இருந்து புற்றீசல்கள் போல்

## வெளியாகிக் கொண்டிருக்கும் 'பலான' படங்கள்

தமிழ்த்திரையுலகில் இப்போது 'பலான' படங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. தமிழகத்தில் உள்ள பல திரையரங்குகளில் 'செக்ஸ்' படங்கள் வகை தொகையின்றி வெளியாகி ஓடிக்கொண்டிருக்கின்றன.

முன்பெல்லாம் மலையாளத்திரையுலகில் இருந்து தமிழுக்கு வரும் 'பலான' படங்கள் இப்போது தமிழிலேயே தயாரிக்கப்பட்டு வருகிறது.

ஒரு பக்கத்தில் பிரமாண்டமாகச் செலவு செய்து கம்பியூட்டர் கிராஃபிக்ஸ் உத்தியுடன் தமிழ்த் திரையுலகின் தரம் உலகத் தரத்தை எட்டிக் கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில் கதை எதுவும் இல்லாமல் வெறும் சதையை மட்டும் மூலதனமாக வைத்துக் கொண்டு கொழுத்த இலாபம் பார்க்கிறார்கள்.

இப்படியான படங்கள் மட்டுமன்றி, இப்படிப்பட்ட படங்களைத் தயாரிக்கும் தயாரிப்பாளர்களின் எண்ணிக்கையும் தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.

'மடிசார் மாமி', 'என் அத்தை', 'சாரி ஆன்டி', 'குஷி', 'ராசலீலா' என்று கிளுகிளுப்பான பெயர்களுடன் வரும் படங்களின் பட்டியல் ஏராளம்.

திடீரென தமிழ்த் திரையுலகில் இந்தமாதிரியான படங்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு என்ன காரணம்?

பல காரணங்கள் கூறப்பட்டாலும் உண்மையான காரணம் குறைந்த முதலீட்டில் அதிக இலாபம்.

குறைந்த செலவில் படம் எடுப்பதாகக் கூறும் சில தயாரிப்பாளர்கள், புதுமுகங்களை வைத்து ஒரு படத்தைத் தயாரிக்கிறார்கள். அதில் படுக்கையறைக் காட்சிகள் வரும்படி கதை அமைத்திருப்பார்கள்.

இப்படி எடுக்கப்படும் படங்களை தணிக்கைக் குழுவினரிடம் காட்டி அனுமதி வாங்கி விடுவார்கள். ஆனால் இந்தத் திரைப் படங்கள் திரையரங்குகளுக்கு அனுப்பப் படும்போது 'விசேட' காட்சிகள் இணைக்கப்பட்டிருக்கும்.

இந்த மாதிரியான படங்கள் வெறும் பத்து இலட்ச ரூபா செலவில் தயாரிக்கப்பட்டு இரண்டு, மூன்று மடங்கு இலாபம் பெற்றுக் கொடுக்கும்.

சிலர் செக்ஸ் அறிவைப் போதிப்பதாகச் சொல்லி இது போன்ற படங்களை எடுக்கிறார்கள். ஆனால் 'செக்ஸ்' விஷயங்கள் ஏராளம் அப்படத்தில் இருக்கும்.

இந்த மாதிரியான படங்கள் சென்னையில் உள்ள பிரத்தியேக ஸ்ரூடியோ ஒன்றில் வைத்துப் படமாக்கப்படுகின்றன. இதில் நடிக்கும் நடிகைக்கு மட்டும் தான் பத்து நாள் வேலை. மற்றப்படி யாருக்கும் வேலை இல்லை. நடிகருக்கு இடைக்கிற 'வாய்ப்பு' மட்டும்தான்.

50 பிரதிகள் வரைப் போடப்படும் இப்படங்கள் 10 நாட்கள் ஓடினாலே போதும். போட்ட பணம் கிடைத்து விடும். அதற்கு மேல் ஓடுவது இலாபக் கணக்கில் சேரும். அதுமட்டுமன்றி இந்தப்படம் தமிழ்நாட்டில் எந்த மூலையிலாவது வருடம் முழுவதும் ஓடிக்கொண்டே இருக்கும்.

மொழிமாற்றம் செய்யாமலே ஏனைய மொழிக்கும் விற்றுவிடலாம். இதற்கு மொழி எதற்கு? பத்து இலட்சத்திற்குத் தயாரிக்கும் படத்தை தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் என 5 மொழிகளுக்கும் இலாபம் வைக்காமல் விற்றாலே 50 இலட்சம் கிடைத்து விடும்.

இதுபோன்ற படங்களை எடுக்க தமிழ்த் தயாரிப்பாளர்களுக்கு கற்றுக் கொடுத்தவர்கள் மலையாளப் படவுலகத் தயாரிப்பாளர்கள்.


உதயா-விஜயலட்சுமி
படம்: கலகலப்பு


ஜோதி மீனா



## கன்னட நாயகி காயத்ரி

மொடலிங் செய்து கொண்டிருந்த காயத்ரி ஜெயராம், சின்னத்திரை மூலம் பிரபலமானார். இப்போது 'மனதைத் திருடி விட்டார்' படம் மூலம் பெரிய திரைக்கும் வந்து விட்டார். அது மட்டுமா முதல் படம் வெளி வர முன்னரே 'சார்லி-சாப்ளின்' படத்திலும் ஒப்பந்தமாகியுள்ளார். விரைவில் சரத்குமார் ஜோடியாகவும் நடிக்கவுள்ளார். இப்படத்தை ராதிகா தயாரிக்கிறார்.

காயத்ரி தமிழுக்குத்தான் புதிதே தவிர, கன்னடப்படவுலகில் ஏற்கனவே கால் பதித்து விட்டார். பிரபல கன்னட இயக்குநரான நாகபரணா இயக்கத்தில் 'நீலா' என்ற படத்தில் காயத்ரி நாயகியாக நடித்துள்ளார்.

## தமிழ்-தெலுங்கில் ரம்பா

மலையாளத்தில் பெருவெற்றி பெற்ற 'ஹிட்லர்' படத்தில் மம்முட்டி-ஷோபனா இணைந்து நடித்திருந்தார்கள். இது தமிழிலும் அதே பெயரில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியானது.

மலையாள வெற்றியை அடுத்து 'ஹிட்லர்' தெலுங்கில் தயாரானது. சிரஞ்சீவி-ரம்பா ஜோடியாக நடித்த இப்படம் அங்கு 'டைகர்' என்ற பெயரில் வெளியாகி வெற்றி பெற்றது.

இப்போது தமிழில் 'மிலிட்டரி' என்ற பெயரில் தயாராகி வருகிறது. சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் இப்படத்தில் ரம்பா அவருக்கு ஜோடியாக நடிக்கிறார்.

## இசைக்காக வியாபாரம்

லிவிங்ஸ்டன்-ராதிகா சௌதரி இணைந்து நடித்து வெளியீட்டுக்குத் தயாராக இருக்கும் 'லேடீஸ் அன்ட் ஜென்டில்மன்' படம் வியாபாரமாகாததால் அப்படியே இருந்தது. இப்படத்திற்கு இசை பரணி.

அண்மையில் பரணி இசையமைத்த 'பார்வை ஒன்றே போதுமே' படப்பாடல்கள் சூப்பர் ஹிட்டாகி இருப்பதால், 'லேடீஸ் அன்ட் ஜென்டில்மன்' படத்தை போட்டி போட்டுக் கொண்டு வாங்கியுள்ளார்கள் விநியோகஸ்தர்கள்.

## மறுபடியும்

அம்மா ஜோதிலட்சுமி வழியில் சினிமாவில் புகுந்து கவர்ச்சி காட்டி வந்தார் ஜோதி மீனா. அந்நேரத்தில் திடீரென மருத்துவர் ஒருவருக்குக் கழுத்து நீட்டி, சிலகாலம் சினிமாவில் இருந்து ஒதுங்கியிருந்தார். குடும்பம் என்னவானதோ தெரியவில்லை. மறுபடியும் சினிமாவில் நடிக்க முடிவு செய்து விட்டார் ஜோதிமீனா. விரைவில் ஜோதிமீனாவின் குலுக்கல் நடனத்தைத் திரையில் காணலாம்.

## ரம்பா-சிம்ரான்-லைலா நடிக்கும் 'த்ரீ ரோஸஸ்'

ரம்பா படத்தயாரிப்பில் இறங்கி விட்டார். விரைவில் அவர் தயாரிக்கும் படத்திற்கு 'த்ரீ ரோஸஸ்' என்ற பெயரும் வைத்து விட்டார். இதில் ரம்பா-சிம்ரான்-லைலா ஆகிய மூவரும் நாயகிகளாக நடிக்கின்ற னர். இப்படத்திற்குக் கதாநாயகன் இல்லை.

## அமைச்சர் பின்னணியில் தாதாக்கள்

இரண்டு பெண் அமைச்சர்கள். அவர்களுள் ஒருவர் உள்துறை அமைச்சர். இவரது பின்னணியில் இயங்கும் தாதாக்களின் அட்டூழியத்தை அடக்க நினைக்கிறார் மற்றொரு அமைச்சர். இதற்காக இரண்டு அனாதைச் சிறுவர்களை எடுத்து வளர்க்கிறார்.

எங்கெல்லாம் தாதாக்களின் அட்டூழியம் தலைவிரித்தாடுகிறதோ அங்கெல்லாம் அமைச்சரின் வளர்ப்பு மகன்கள் சென்று தட்டிக் கேட்கின்றனர்.

இந்த இரண்டு பெண் அமைச்சர்களிடையே நடைபெறும் போராட்டம்தான் 'சிட்டி தாதா' படத்தின் கதை. கன்னடத்தில் இருந்து தமிழுக்கு மொழிமாற்றப்பட்டிருக்கும் இப்படத்தை இயக்கியுள்ளார் ஆனந்தராஜ்.

இதில் சரண்ராஜ், வினோத்குமார், த்ரில்லர் மஞ்சு, தாரா, லலிதாஸ்ரீ மற்றும் பலர் நடித்துள்ளனர்.

## கைவிடப்பட்ட படம்

'சிட்டிசன்' இயக்குநர் சரவணன் சுப்பையா இயக்கத்தில் அஜித் நாயகனாக நடிக்க 'இதிகாசம்' என்ற படத்தைத் தயாரிக்க இருந்தார் 'சிட்டிசன்' படத்தயாரிப்பாளர் சக்கரவர்த்தி.

'சிட்டிசன்' படத்தின் தெலுங்கு விற்பனை உரிமை தொடர்பாக இயக்குநர்-தயாரிப்பாளர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக 'இதிகாசம்' படத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

## அபிநயாவுக்கு அழகுச் சிகிச்சை

முன்னாள் கவர்ச்சி நடிகை அனுராதாவின் மகள் அபிநயாஸ்ரீ தற்போது பல படங்களில் ஆடியும் நடித்தும் வருகிறார். 13 வயதான மகளைக் கொஞ்சம் புஷ்டியாகத் தெரிய வைக்க சில இலட்சங்கள் செலவில், உடம்பில் ஆங்காங்கே மூன்று இடங்களில் பிளாஸ்டிக் அறுவை (அழகுச் சிகிச்சை) செய்துள்ளார் அனுராதா.

## மண்டபக் காதல்

மகன் சஞ்சய் பெயரில் திருமண மண்டபம் ஒன்றைக் கட்டியிருக்கும் விஜய் தற்போது 'ஷோபா மாளிகை' என்ற பெயரில் இன்னொரு திருமண மண்டபத்தை கட்டி வருகிறார்.

அடுத்து யார் பெயரில் திருமண மண்டபம் கட்டப் போகிறாரோ விஜய்?



விவேக் ஆனந்த்-அனுராதா
படம்: விடிவதற்கு முன்னால்



ஸ்நேகா
படம்: புன்னகை தேசம்

## விசிட்

## மினி சினி

✪ கேயார் இயக்கிய 'இரட்டை ரோஜா' படம் மலையாளத்தில் தயாராகி வருகிறது. தமிழில் ராம்கி-ஊர்வசி-குஷ்பு நடித்த வேடங்களில் மலையாளத்தில் சுரேஷ்கோபி-கௌசல்யா-தேவயானி நடிக்கிறார்கள்.

✪ 'சிட்டிசன்' படத்தைத் தயாரித்த சக்கரவர்த்தியின் நிக் ஆர்ட்ஸ் நிறுவனம் அடுத்துத் தயாரிக்கும் படங்களில் ஒன்றுக்கு 'மீண்டும்' என்று பெயர் சூட்டியுள்ளது.

✪ விக்ரமன் இயக்கத்தில் விஜய் கதாநாயகனாக நடிக்கும் 'மௌனமே காதலாக' படத்தின் நாயகியாக லைலா நடிப்பதாகக் கூறப்பட்டது. இப்போது இன்னொரு நாயகியாக ஸ்நேகாவும் நடிக்க வைக்கப் போகிறார்கள்.

✪ கார்த்திக் புதிதாக நடிக்கும் படங்களில் ஒன்றிற்கு 'ஸ்வீட் ராஸ்கல்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தை நகுலன் பொன்னுசாமி என்ற புதியவர் இயக்கவுள்ளார்.

✪ 'நரசிம்மா'வை அடுத்து விஜயகாந்த் நடிக்கும் 'தவசி' படத்தில் முதலில் நாயகியாக நடிப்பதாக இருந்த மஹிமா சௌத்ரி இப்போது மறுத்துவிட, சௌந்தர்யாவை நாயகியாக நடிக்க அணுகியுள்ளார்கள்.

✪ சத்யராஜ்-ரம்யா கிருஷ்ணன் இணைந்து நடித்த 'அசத்தல்' படத்தைத் தயாரித்த மாலா சினி பட நிறுவனம் அடுத்து 'குண்டக்க மண்டக்க' என்ற பெயரில் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது.

✪ 'ஐஸ்வர்யா' படத்தில் சுமித்ராவின் வாரிசு உமாவும் அனுராதாவின் வாரிசு அபிநயாஸ்ரீயும் நடிப்பதாக முதலில் அறிவிக்கப்பட்டது. இப்போது அப்படத்தில் சிம்ரானின் தங்கை மோனலும் ஒரு நாயகியாக நடிக்கிறார்.

✪ 'தோஸ்த்' படத்தை இயக்கியிருக்கும் எஸ்.ஏ.சந்திரசேகரன் அடுத்து 'நண்பர்கள் தினம்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இதில் முழுக்க முழுக்க புதுமுகங்கள் நடிக்கிறார்கள்.

## அரசியல்வாதிகளைத் தோலுரிக்கும் கமல்

பெரும் எதிர்பார்ப்புக்குள்ளாகியிருக்கும் 'ஆளவந்தான்' எப்போது வெளியாகும் என்று கமல் இதுவரை அறிவிக்கவில்லை. ஆனால் 'ஆளவந்தான்' படத்தைத் தனது 200வது படமாக அறிவித்து விட்டார் கமல்.

சமீபத்தில் அவர் அளித்த பேட்டியொன்றில் அரசியல்வாதிகளைக் கடுமையாகச் சாடியுள்ளார். கமலின் 'ஹேராம்' மாதிரி தற்போது சன்னி தியோல் நடித்த 'கதர்' என்ற இந்திப் படம் கண்டனத்தில் மாட்டியிருக்கிறது.

இதுபற்றி அவர் கூறும்போது, "நிகழ்ந்தவற்றைச் சித்தரிக்கும்போது சில உண்மைகளைச் சுட்டத்தான் செய்யும். அதற்காக கடுமையான எதிர்ப்புக்களைச் சந்திக்க நேரிடுகிறது. முட்டாள்தனமாக அறிவற்ற எதிர்ப்புகளை நாம் தொடர்ந்து அனுமதிக்க ஆரம்பித்தால் நாம் ஜனநாயகவாதிகள் என்று சொல்வதற்கே தகுதியற்றவர்கள் என்று ஆகிவிடும்.

நம்முடைய அரசியல்வாதிகள் அவர்களை முன்னேற்றிக் கொள்வதற்காகத்தான் பாடுபடுகிறார்கள். சில படங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது முட்டாள்தனமானது. என்னுடைய படங்களுக்கு ஏற்பட்ட கண்டனங்களால் நான் நிறையக் காயப்பட்டேன். அதிகமாகக் கோபப்பட்டேன்" என்று அப்பேட்டியில் தெரிவித்தார்.



ராஜ்-ரம்யா கிருஷ்ணன்
படம்: அசத்தல்

## ஹாலிவுட்டில் பெரியார்

தந்தை பெரியாரைப் பற்றிய படமொன்று தயாராகவுள்ளது. தமிழில் அல்ல, ஆங்கிலத்தில். அதுவும் ஹாலிவுட்டில். 10 கோடி இந்திய ரூபாயில் தயாராகும் இப்படத்தை இயக்குபவர் வேலு பிரபாகரன்.

'கடவுள்', 'புரட்சிக்காரன்' போன்ற படங்களை இயக்கிய வேலு பிரபாகரன் இயக்கும் இப்படத்தை 'மிட்னி பாயஸ்' என்ற ஹாலிவுட் திரைப்பட நிறுவனம் தயாரிக்கிறது.

மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் கனவுகளில் ஒன்று பெரியார் வேடத்தில் நடிப்பது. அது நிறைவேறாமலேயே போய்விட்டது. அவர் இப்போது உயிருடன் இருந்திருந்தால் சில வேளைகளில் பெரியார் வேடத்திற்கு உயிர் கொடுத்திருப்பார்.

இப்போது பெரியார் வேடத்தில் நடிக்க 5 வெளிநாட்டு நடிகர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் யாருக்கு வாய்ப்புக் கிடைக்கப்போகிறதோ தெரியவில்லை.

## மொடல் ஷாம்

'வாலி' படத்திற்குப் பின் சிம்ரன்-ஜோதிகா இணைந்து நடிக்கும் '12பி' படத்தில் ஷாம் நாயகனாக அறிமுகமாகிறார். மதுரையைச் சேர்ந்த ஷாம் பெங்களூரில் வளர்ந்தவர்.

'காதலர் தினம்' படத்தின் நாயகனாக நடிக்க முதலில் ஷாமைத் தான் அணுகினார் கதிர். அப்போது மறுத்த ஷாம் இப்போது ஜீவா இயக்கத்தில் நடிக்க சம்மதித்து, நடித்து வருகிறார்.

ஷம்ஷுதீன் இப்ராஹிம் என்ற சொந்தப் பெயரைக் கொண்ட ஷாம் சில காலம் பெங்களூரில் மொடலிங் செய்துள்ளார்.

## முகப்பில்

கமல்

காயத்ரி ஜெயராம்

# 1893ல் இந்திய கிரிக்கெட் அணி



இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் இந்தியா இருந்த காலகட்டத்தில், சின்னச் சின்னக் கிராமங்களைத் தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தனர் சமஸ்தானத்து ராஜாக்கள்.

இவர்கள் தங்கள் ராஜ்யத்தைக் காப்பற்றிக் கொள்வதற்காக ஆங்கிலேயர்களை அங்கு மேயவிட்டிருந்தனர்.

உத்தரப் பிரதேசத்தின் சம்பனீர் என்ற கிராமத்திற்கு இரட்டைவரி கட்ட உத்தரவிட்டது வெள்ளையர் அரசு. அந்நேரத்தில் வெள்ளைக்காரர்கள் விளையாடிக் கொண்டிருந்த கிரிக்கெட்டைப் பார்த்த சம்பனீர் மக்கள், அது தம்நாட்டு கில்லி (கிட்டிப்புள்) விளையாட்டு என நகைத்தனர்.

இதைக்கேட்டுக் கோபமடைந்த வெள்ளைக்கார கிரிக்கெட் கப்டன், சம்பனீர் கிராம மக்களைப் பார்த்து, "எங்களுடன் விளையாடி இந்த விளையாட்டில் வென்று விட்டால் மூன்று வருடம் வரி கட்டத் தேவையில்லை. தோற்றால் இரட்டைவரியை மும்மடங்காகக் கட்ட வேண்டும்" என்று சவால் விடுகிறான்.


சவாலுக்குச் சம்மதித்த சம்பனீர் மக்கள் வாழ்வா, சாவா என்ற அந்தப் போட்டியில் வென்று விடுகிறார்கள்.

இது அமீர்கான் தயாரித்து நடித்திருக்கும் 'லகான்' என்ற இந்திப்படத்தின் கதை. லகான் என்றால் வரி என்று அர்த்தம். 4 மணி 42 நிமிடங்கள் ஓடும் நீண்ட படம் இது.

இந்திய திரைப்பட இலக்கணங்களை மீறி உருவாக்கப்பட்ட யதார்த்தமான இப்படம் சுமார் 100 வருடங்களுக்கு முற்பட்ட கதைக் களத்தைக் கொண்டுள்ளது.

அமீர்கான் தலைமையிலான சம்பனீர் கிராம கிரிக்கெட் வீரர்கள் தான் படத்தில் காணப்படுகிறார்கள்.

## பேனா நண்பர்கள்



பெயர்:எஸ்.செலஸ்ரீன்.
வயது: 22
முகவரி:
46/2, புனித
அந்தோனியார் வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.



பெயர்: எஸ்.லோஜி,
வயது: 21
முகவரி:
334, 3ம் கட்டை,
உப்புவெளி,
திருகோணமலை.
பொழுது போக்கு:
வழமையானவை.




பெயர்:
எஸ்.றிஹான்,
வயது: 19
முகவரி:
அரபிக்கல்லூரி வீதி,
மூதூர்-05.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

## உலகமே காதல் மயம்

மணம் கொண்ட
மலர்களுக் கெல்லாம்...
மானுடத்தை மாட்சி செய்யும்
மாருதத்தின் மீது காதல்....!
***
அண்டத்தை ஆளும்
அம்புலிக்கோ அகிலத்தை
அரவணைக்கும் ஆகாயத்தின் மீது காதல்
***
வசந்த வருகை
வான் மழைக்கோ...
தயாள மனம் கொண்ட
தாயகத்தின் மீது காதல்
கட்டிளங் காளையருக்கெல்லாம்
கண்ணாலே காதல் சொல்லும்
கன்னியர் மீது காதல்
மணமான...
மங்கையருக்கெல்லாம்
'மழலையெனும் மாணிக்கம் மீது காதல்'
***
கடமையின் சிகரம்
கதிரவனுக்கோ...
பசுமையின் புல்வெளியில்
படர்ந்திருக்கும் பனித்துளியின் மீது
காதல்...!
***
கவிபுனையும் கவிஞனுக்கோ
கரை தாண்டி ஓடிவரும்
கற்பனை எனும்
கடல்மீது காதல்...!
***
இதயத்தை வருடும்
இசையைத் தரும்
வீணைக்கோ.. மீட்டுகின்ற
விரல் மீது காதல்!
மனித நேயம் கொண்ட
மனிதன் மரணித்த போதும்
மண்மீது காதல்...!
***
உலகமே காதல் மயம்-அதில்
உல்லாச வானம் பாடியாய்
உலா வருவோம்.
***
இறைவன் படைத்த
இயற்கை முதல்
மனித நேயம் கொண்ட
மனிதன் வரை
எங்கும் காதல்
எதிலும் காதல்!

எஸ்.மனோஹரன்-ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரி.



# தேன் கிண்ணம்

## காஷும் லூஸும்

பஸ் தரிப்பிடத்தில்
பர்ஸ் நிறைய
காஷாகக் கொண்டு
பேஷாக நின்றிருந்தேன்.
***
லேசாக இடித்துச் சென்றவன்
'லூஸ்' என நினைத்தவாறு
பஸ்ஸில் ஏறி,
லேசாய் செருமிக்கொண்டு
பர்ஸை தொட்டதுமே
'பீஸை' பதறியது மனது!
லூஸாகப் போனவன்
பர்ஸை கொண்டு போனதறிந்து
லூஸாகிப் போனேன்.

பொ.கோபிநாத்-கொழும்பு-04.

## எதிர்பார்ப்பு

எதிர்பார்த்தேன் சீமை
சென்ற என்னவனை!
"சீமை சென்று வந்து
உன்னை கரம்பிடிப்பேன்.."
என்றாய்.
நான் சீதனம்
சேர்த்து வைக்கவில்லை!
***
சீமை போய் வந்தாய்
சும்மாவல்ல;
சீதனப் பேயாய்!
தாய் பேச்சைக் கேட்டு
என்னிடம் சீதனம் கேட்டாய்!
சீ... தனம் என்ற சொல்லால்
சீரழிந்தது
என் வாழ்க்கை.
***
எதிர்பார்க்கிறேன் சீமை
சென்ற என்னவனை அல்ல;
சீதனம் கேட்காத
ஆண் மகனை..!

கோளாவில் சசிகாந்தன்-அக்கரைப்பற்று.

## நீ பிரிந்தபோது...

என்னோடு நீ
இருந்தபோதெல்லாம்
என் வாழ்க்கையில்
எனக்கு நம்பிக்கையிருந்தது!
***
என்னை நீ
பிரிந்தபின்
எனக்குள் நானே
காணாமல் போனேன்!
***
எங்கு நான்
சென்றபோதும்
என்னோடே
ஒட்டியிருந்தாய்...!
அதனால் என்
தொலை தூரப் பயணம்கூட
சுகமாக இருந்தது!
***
என் ஒவ்வொரு
நடவடிக்கையும்
உன் முகம் பார்த்தபின்தான்
செயற்பட்டுக்கொள்ளும்.
***
நீ இல்லாத
ஒரு நிமிடம்கூட
பல யுகங்களாகத் தோன்றும்!
***
சொந்த நாட்டில்
இருந்தபோதும்
எனக்கு நானே
அந்நியனானேன்!
***
உன்னையிழந்தபின்
என் உயிருக்கும்
உத்தரவாதமில்லாமல்போனது.
***
என் பிரியமான
அடையாள அட்டையே!
என்னுயிர் பிரிவதற்குள்
வந்துவிடு!

ஏ.எம்.ஷாலி-ஒலுவில்-02.

## நினைவு இருக்கும்வரை

துளிர் விடும்
முன்னே
காதல் உணர்வை
கற்பித்தவளே.
***
பெண்மை என்னும்
அழகை காட்டி
சுகத்துக்காக என்னை
அடிமையாக்கியவளே.
***
இடையில் வந்த
சொத்து சுகங்களுக் ா
என்னைவிட்டு
பிரிந்தவளே.
***
என்னைப் பிரிந்து
பாதை
மாறி
செல்பவளே.
***
உன்னால் நான்
இளமை நல்
வாழ்க்கைகளை
இழந்துவிட்டேனடி.
***
இவைகளை இழந்தும்
இம்மண்ணில்
வாழ்கிறேன்
என்றால்?
***
என் இதயத்தில்
இருந்து
இன்னும் நீ
பிரியவில்லையடி.
***
முதல் காதல்
இப்பவும் முள்ளாக
குத்திக்கொண்டே
இருக்குதடி.
***
உன்னால் எப்படி
என்னை மறந்து
இருக்க
முடியுதடி...?
***
நீ என்னை
மறந்தாலும்
என்னால் உன்னை
மறக்க முடியவில்லையே.

ந.ஜெகதாஸ் கோட்டைக்கல்லாறு-01.




**வா**ழ்க்கையில் ஒரு இன்பத்தையும் எதிர்காலத்தில் நம்பிக்கையையும் செய்யும் செயலில் உறுதியையும் வைத்திருந்தால் தான் நாம் வெற்றியை அடைந்தவர்களாக இருக்க முடியும். உலகத்தையே வெல்லக் கூடிய மகா சக்தி நம் உள்ளத்தில் அடங்கிக் கிடக்கிறது.

ரயில் புறப்பட்டவுடனேயே முழு வேகத்துடன் கிளம்பிவிடுகிறதா? இல்லையே! ஆரம்பத்தில் நிதானமாகச் சென்று முழு சக்தியையும் ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு அல்லவா வேகத்துடன் செல்லுகிறது.

வாழ்க்கையில் வெற்றியடையவே பிறந்திருக்கிறோமே தவிர காரியங்களில் எல்லாம் தோல்வி அடையவோ, முகம் சோர்ந்து நடைப் பிணமாக அலைந்து அழிந்து போவதற்காகவோ நாம் பிறக்கவில்லை என்பதனை நம்மனத்தில் என்றும் நிலைத்து இருக்கும்படிச் செய்ய வேண்டும்.

யுத்தக்களத்தில் எதிரிகளை முறியடிப்பவனை விட தன்னைத்தான் உணர்ந்து உயர்த்திக் கொள்ளப் பாடுபடுபவனே பெரியவன் ஆவான்.

தண்ணீரில் மூழ்கி மூழ்கி எழுந்திருக்கும் ஒருவன் மூச்சுவிட வேண்டுமென்று எவ்வாறு ஆசைப்படுவானோ அதே அளவு ஆசை வாழ்விலும் வாழ்ந்து காட்டுவதிலும் இருக்க வேண்டும். நெஞ்சில் உறுதியும், உழைப்பில் பலம், செய்யும் காரியத்தில் துணிச்சலும் இருந்தால் கட்டாயம் வெற்றி அடைந்தே தீருவோம்.

மனோதிடத்துடன் உழைப்பும் சேர்ந்தால் தோல்வி என்பதற்கே இடம் இருக்காது. வெற்றி என்னும் அச்சாணியில் தான் உலகம் சுழன்று கொண்டிருக்கிறது என்பதனை நினைவில் வைக்க வேண்டும்.

நம்முடைய சக்தியால் சாதிக்க முடியாது, செய்ய முடியாதது என்று எதனையும் நினைத்து விடக்கூடாது நம்முடைய சக்தியை ஒருமுகப்படுத்தாவிட்டால் வெற்றி அடைய முடியாது.

வெற்றி பெறும் வகையில் நம் சக்தியைச் சிதறவிடாமல் ஒரே நோக்கத்தில் பதிந்து இருக்கும்படிச் செய்ய வேண்டும் ஒவ்வொரு மனிதனுடைய சக்தியும் நம்பிக்கையும் அவனிடமே அடங்கி இருக்கின்றன.

அலெக்சாண்டர் ஒரு சமயம் படையெடுத்துச் செல்லப் புறப்படும் முன் தன்னுடைய சொத்துக்களை எல்லாம் நண்பர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். தனக்காக எதுவும் வைத்துக் கொள்ளவில்லை.

அதைக் கண்ட அவருடைய தளபதி "உங்களுக்காக வைத்துக் கொள்ளப்போவது எது?" என்று கேட்டார். அதற்கு அலெக்சாண்டர் 'நம்பிக்கை' என்று பதிலளித்தார்.

ஓர்வில் ரைட்டுக்கு அதிகப் படிப்பு கிடையாது. இவர் சிறு பையனாக இருக்கும் பொழுதே ஆடு மாடுகளின் எலும்புகளையும் தெருவில் எறியப்பட்ட துருப்புடித்த இரும்புகளையும் பொறுக்கி எடுத்து விற்று வந்தார்.

# செயலே உறுதி!

பிறகு ஓர் அச்சகம் ஏற்படுத்தி தினப் பத்திரிகை ஒன்றை நடத்தினார். அதில் அவருக்கு ஏற்பட்டது தோல்வி தான். அதன் பின்னர் சைக்கிள் பழுது பார்க்கும் கடை ஒன்றைத் தொடங்கினார். அதிலும் அவருக்குக் கிடைத்தது தோல்விதான்.

பறவையைப்போல தன்னாலும் பறக்க முடியும் என்று உறுதியாக நம்பினார். பல இன்னல்களும் இடர்பாடுகளும் ஏற்பட்ட போதிலும் தன்னுடைய உறுதியை விடவில்லை.

ஆகாயத்தில் மனிதன் பறப்பது எப்படி என்பது பற்றி தன் சகோதரருடன் சேர்ந்து ஆராய்ந்தார். பல சோதனைகளைச் செய்து பார்த்தார். அதன் மூலம் அவருக்குக் கிடைத்தது தோல்விதான்.

ஆனாலும் விடாமல் மேலும் மேலும் முயன்று கொண்டிருந்தார். இறுதியில் வெற்றி பெற்றார். உறுதி உயர்வைத்தரும்.

# இந்தவாரம் உங்கள் பலன்

12.08.2001 தொடங்கி 18.08.2001வரை

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழிலில் நன்மையும், பொருள் சிறப்பும் உண்டாகும். எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியுண்டாகும். உத்தியோகத்தில் உள்ளோர், வார இறுதியில் நன்மை பெறுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

**இடபம்:**
(கார்த்திகை பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) தொழில் நிலையில் சிக்கல்கள் தோன்றும். பொருளாதார ரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். வெளியிடப் பிரயாணங்களில் விழிப்புடன் இருக்கவும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் தென்படும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

**மிதுனம்:**
(மிருக சீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்,) தொழில் சிறப்பும், முயற்சிகளில் வெற்றியும் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தில் உள்ளோர் மனக்குறை நீங்குவர். மாணவர்களுக்கு கல்வியில் இருந்துவந்த தடைகள் நீங்கும். விவசாயிகள், வியாபாரிகள், எதிலும் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) கருமங்களில் வெற்றியும், பொருளாதார நன்மையும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமளிக்கும். உத்தியோகத்தில் சிலருக்கு வார இறுதியில் நன்மைகள் ஏற்படும். விவசாயிகள் வியாபாரிகள், குறைந்த இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) கருமங்களில் வெற்றியும், பொருள்வரவும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சம்பவங்கள் நடந்தேறும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளினால் நன்மையடைவர். மாணவர்கள் கல்விச் சிறப்படைவர். விவசாயிகள், உரிய நன்மை பெறுவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 05.

**கன்னி:**
(உத்தரத்து பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) தொழில் நிலையில் முன்னேற்றமும் பொருளாதார நன்மைகளும் உண்டாகும். வெளியிடப் பிரயாணங்களால் சிலருக்கு உபத்திரம் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளினால் உதவி பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 07.

## சோதிட மாமணி தில்லை

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) தொழிலில் சிறிது பிரச்சனை காட்டும். கடன் பயம் தென்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகத்தில் உள்ளோர் அவதானமாக நடந்து கொள்வது நன்று. மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி உண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை,) கருமங்களில் வெற்றி கிடைக்கும். பொருள்வரவும், குடும்பத்தில் மகிழ்ச்சியுமுண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு பதவியில் இருந்து வந்த தொல்லைகள் மறையும். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புண்டு. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

## கிரக நிலை

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், புதன் |
| தனு | - செவ்வாய், கேது |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வெள்ளி, வியாழன், இராகு |

சூரியன் 17.08.2001ல் சிங்க இராசியில் பிரவேசம். சந்திரன், மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) குடும்பத்தில் மனமகிழ்ச்சியும், தொழில் நிலைச் சிறப்பும் ஏற்படும். வார இறுதியில், பிள்ளைகளால் சிலருக்கு மனக்கவலையுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் தமது கடமைகளில் கவனமுடன் செயற்படுவது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 05.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) தொழில் கஷ்டங்களுக்கு இடமுண்டு. குடும்பத்தில் பணத்தட்டுப்பாடு நிலவும், வீண் பிரச்சனையொன்றினால் வார இறுதியில் கவலையுண்டாகும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது. மாணவர்களுக்கு, கல்வி தடைகள் விலகும்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

**கும்பம்:**
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி, முன்முக்கால்) தொழில் நிலையில் உயர்ச்சியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். பொருள் வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், பதவி உயர்வுகளுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்குக் கல்வியில் உயர்ச்சியுடாகும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 06.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) எடுத்த கருமங்களில் தடையுண்டாகும். குடும்பத்தில் செலவினங்கள் அதிகரிக்கும். கடன்பயமுண்டு உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நெருக்குதல் ஏற்படும். மாணவர்கள் கல்வியில் மந்தமடைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## குளிர் சாதனப் பெட்டி கெடாமலிருக்க...



**தொ**டர்ந்து 24 மணிநேரமும் ஃபிரிட்ஜ் இயங்கிக் கொண்டே இருப்பதால், மின்சாரம் அதிகம் செலவாகும். ஃபிரிட்ஜைக் கையாளும் போதுசில முக்கிய விஷயங்களைக் கருத்திற் கொண்டு செயற்பட்டால் மின்சாரச் செலவை ஓரளவிற்குக் குறைக்கலாம்.

* குளிர்ந்த நீரைக் குடிப்பதற்காக குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அடிக்கடி ஃபிரிட்ஜைத் திறப்பதால், வெதுவெதுப்பான காற்று உள்ளே புகுந்து, அந்தக் காற்றைக் குளிர வைக்க சொப்பிரேசரின் சுமையை அதிகரித்துவிடும். இதைத் தவிர்க்க குளிர்ந்த நீரை ஒரு பிளாஸ்க்கில் ஊற்றி வெளியில் வைத்துக் கொண்டு, தேவையான போது பருகிக்கொள்ளலாம். ஃபிரிட்ஜ் இயங்கத் தேவைப்படும் மின்சாரம் இதன் மூலம் கணிசமாகக் குறைக்கப்படும்.
* ஃபிரிட்ஜின் உள்ளே குறைந்த பொருட்களை வைப்பதன் மூலம் மின்சாரமும் குறையும் என்பது தவறான ஒரு கருத்து.
* ஃபிரிட்ஜின் பின்னாலுள்ள கொன்டென்சர் கொயில் சரியாக இயங்க வேண்டுமானால், அதை அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டும்.
* திரவப் பொருட்களை மூடிய பாத்திரங்களில் தான் வைக்க வேண்டும்.
* சூடான பொருட்களை நன்றாக ஆற வைத்து, பிறகே ஃபிரிட்ஜினுள் வைக்க வேண்டும்.
* குளிர் காலங்களில் ஃபிரிட்ஜின் வெளிப்புறப் பகுதிகளில் நீர்த்திவாலைகள் தோன்றி, அவற்றின் நிறம் மாறவும், துருப்பிடிக்கவும் செய்யக்கூடும். எனவே வெளிப்பகுதிகளை அவ்வப்போது துணியால் துடைத்து விட வேண்டும்.

## பெண் குழந்தைகளை வளர்ப்பது எப்படி?

**பெ**ண்களைக் குழந்தைகளாக இருக்கும் போதே தைரியமும், தன்னம்பிக்கையும் உள்ள குழந்தைகளாக வளர்க்க வேண்டும். விட்டுக் கொடுத்துப் போவதில் உள்ள இன்பத்தை வயதுப் பெண்களுக்கு உணர்த்த வேண்டும். உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் மனநிலையைப் பெண் குழந்தைகளுக்கு வளர்க்க வேண்டும்.

அவரவர் சக்திக்கேற்ற அளவு எவ்வளவு கல்வியறிவை ஒரு பெண்ணுக்கு வழங்க முடியுமோ அந்த அளவு வழங்க முயல வேண்டும். அதிகம் படிக்க வைக்க இயலவில்லை என்றாலும் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தையல் பயிற்சி போன்றவற்றைக் கற்றுத் தரவேண்டும்.

எல்லாவற்றையும் விட பெண் குழந்தைகளை சுறுசுறுப்பாக வளர்த்தல் அவசியம். எதையுமே சொல்லிக் கொடுக்க வசதி வாய்ப்பற்ற ஏழைக்குடும்பமாக இருந்தால் சமையல், கலையிலாவது உங்கள் மகளை தேர்ச்சி பெற்றவளாக ஆக்குங்கள்.

ஆண் மகனின் உதவியின்றிச் சுயசம்பாத்தியத்தில் ஒரு பெண் சிறந்த முறையில் வாழ்க்கை நடத்த முடியும் என்ற நம்பிக்கையோடு பெண் குழந்தைகளை வளர்க்க வேண்டும். உங்களது தகுதிக்கேற்ற இடத்தில் திருமணம் செய்து கொடுங்கள். அப்போது தான் உங்கள் மகளுக்கு மதிப்பும் மரியாதையும் இருக்கும்.

கடன் வாங்கி சக்திக்கு மீறிய இடத்தில் மணம் பேசி திருமணத்தின் போது எல்லா சீர் சினத்திகளையும் செய்து விட்டுப் பின், எதுவுமே பெண்ணுக்குச் செய்ய இயலாத நிலைக்கு ஆளாகாதீர்கள். நினைத்தவுடன் போய்ப் பார்த்து வரக்கூடிய தூரத்தில் பெண்ணை மணம் செய்து கொடுக்க வேண்டும்.

பெண்ணின் திருமண விஷயத்தில் நல்ல அறிவுரைகள் வழங்க வேண்டும். எக்காரணம் கொண்டும் வற்புறுத்தி மணம் முடிக்காதீர்கள். திருமணம் முடிந்ததும் கடமை முடிந்தது என்று இல்லாமல் மகளுடன் கடிதத் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். மாதம் ஒரு முறை சென்று நேரில் பெண்ணைப் பார்த்து வருவது நல்லது.

பெண்ணை மணம் செய்து கொடுத்துப் புது ஊரில் உங்கள் மகளுக்கு, புகுந்த வீட்டிலிருந்து பஸ் நிலையம், புகையிரத நிலையம், தபாற்கந்தோர் போன்றன உள்ள இடங்களைக் காண்பித்து வையுங்கள். ■


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** JW

பெயர்:..............................

முகவரி:..............................

..............................

தொழில்:..............................

கையொப்பம்:..............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 18-08-2001**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

எஸ்.கலாதேவி,
170, காத்தார் சின்னகுளம், வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.





**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

**மு**தலில் வைரவன்தானா என்று அனிதாவுக்குச் சந்தேகமாக இருந்தது. இருமுறைதான் பார்த்திருக்கிறாள். நீலக் கலரில் ரொம்ப தொளதொளவென்று டீ ஷர்ட் போட்டுக்கொள்வது தான் இப்போது ஃபாஷன் போலும்... இயல்பாக இருந்தான். 'அதே ஆசாமிதானா...?'

"என்ன பார்க்கறீங்க... நான் வைரவன்.."

"நீங்க இத்தாலிக்குப் போறதா.."

"கான்ஸல் பண்ணிட்டேன். கண்டக்டர்.. கொஞ்சம் அடுத்த ஸ்டாப்பில் நிறுத்த நீங்களா? பின்னால் கார் வந்துக்கிட்டு இருக்கு."

'பிர்ர்' என்று கண்டக்டர் விசில் ஊத, அடுத்த ஸ்டாப் வருமுன்னமேயே வண்டி நிற்க... வைரவன். "வாங்க அனிதா இறங்கிடலாம்" என்றான்.

"நான் வீட்டுக்குப் போகணும்..."

"ட்ராப் பண்றேன்... கமான் கெட் டவுன்..."

அனிதா தயக்கத்துடன் இறங்கினாள். அவன் சொன்னால் எலெக்ட்ரிக் ரயில்கூட பாதியில் நிற்கும் போலத் தோன்றியது. வெளியே வெயில். ஈ காக்காய் இல்லை. 'பெண்ணுக்குத் திருமண வயது 21' என்று ஓர் ஆட்டோ காலியாகப் போயிற்று. மரியாதையான தூரத்தில் நின்று கொண்டிருந்தது காண்டெஸா கார்.

"பிரின்ஸிபால் உங்களைப் பார்க்கணும்னாங்க..."

"பார்த்துட்டா போச்சு..."

டிரைவர் கார் கதவைத் திறந்து வைத்திருக்க, சாவியை வாங்கிக்கொண்டு டிரைவர் ஸீட்டில் தன்னை நுழைத்துக் கொண்டு இடது பக்கத்து கதவைத் திறக்க, அனிதா தயக்கத்துடன் ஏறிக் கொண்டாள்.

"அவர்?"

"டிரைவருக்கெல்லாம் கவலைப்படாதீங்க அனிதா. அந்த ஆள்க்கு ஒரு நாளைக்கு நூறு ரூபா பேட்டா.. ஆட்டோ புடிச்சு வீட்டுக்கு வந்துருவான்..."

உள்ளே ஏஸி ஜில்லென்று இருந்தது. குட்டியாக கலர் டி.வி. இருந்தது. அதில் கிரிக்கெட் சலனித்துக் கொண்டிருந்தது. "எதுக்காக வந்தீங்க...?"

"உங்களைப் பார்க்கத்தான்..."

"ரசீது கேட்கவா?"

"ரசீதா...?" சிரித்தான்.

"சேச்சே... உங்களைப் பார்க்கணும்னு தோணிச்சு..."

மௌனமாக இருந்தாள்.

தொடர்ந்து... "உங்களைன்னா உன்னை... மதுவை சேர்த்து இல்லை..."

அனிதாவுக்குப் புரியவில்லை. பயமாக இருந்தது. இங்குமங்கும் பார்த்தாள். டெண்டுல்கர், பௌலரின் தலைக்கு மேல் ஒரு ஃபோர் அடித்துக் கொண்டிருந்தார். ஓரமாக உட்கார்ந்து இடைவெளியை மிகைப் படுத்திக் கொண்டாள்.

"என்ன இது.. பல் டாக்டருக்குக் காத்திருக்கிற பேஷண்ட் மாதிரி உட்கார்ந்திருக்கே...?"

"என்னை கிண்டி ஸ்டேஷன்ல இறக்கி விட்டுருங்க.."

"எதுக்கு இறக்கிவிடணும்...?"

"அங்கிருந்து எலெக்ட்ரிக் டிரெயின் பிடிச்சு வீட்டுக்குப் போயிடுவேன்..."

"அனிதா... நான் இத்தாலி ட்ரிப்பை கான்சல் பண்ணிட்டு, போர்டு மீட்டிங்கை ஒத்திப் போட்டுட்டு வேளச்சேரில மத்தியான வெயில்ல பஸ் ஸ்டாண்டுல காத்துக்கிட்டிருக்கேன்னா அதுக்கு என்ன அர்த்தம்?" என்றான் வைரவன். 'என்ன...?' என்று அவள் கேட்காமலேயே தொடர்ந்தான்:

"உன்னை எனக்குப் பார்க்கணும்போல இருந்தது... என்னமோ தெரியலை..."

"எங்க பிரின்ஸிபால் உங்களைப் பார்க்கணும்னாங்க..."

"அதையே திருப்பித் திருப்பிச் சொல்லாதே... பிரின்ஸிபால் இப்ப தட்டுக்கெடலை... பாரு. உங்களை உன்னைன்னு கூப்பிட்டா கோவிக்க மாட்டீங்களே மாட்டியே...?"

"அவசரமா வீட்டுக்குப் போகணும்..."

"அப்படி என்ன தலை போகிற காரியம்..? நாம ஏதாவது ட்ரிங்க்ஸ் சாப்பிட்டுட்டுப் போகலாம்...!"

"இல்லை... நான் போகணும்..."

"ஓகே... ஓகே.. ஐ ல் ட்ராப் யு..."

"எனக்கு எதுவும் புரியலை..."

"என்ன புரியலை...?"

"எதுக்காக என்னை நீங்க பார்க்க வந்தீங்க...?"

"புரியலை...?"

"புரியலை."

"எனக்கும் புரியலை. எனக்காக இந்த நேரத்துல எட்டு ஃபோன்கால் காத்திருக்குது. பத்துப் பெரிய மனுஷங்க காத்திருக்காங்க. பதினெட்டுல கையெழுத்துப் போடணும். ஒரு ஸேல் டீல் முடிக்கணும். எதுக்காக வந்தேன்னு எனக்குப் புரியலை... இங்கே நான் என்ன பண்ணிக்கிட்டிருக்கேன்னும் புரியவே இல்லை!"

"இங்கதான் திரும்பணும்..."

"தெரியும். மோட்டார் சைக்கிள்ல விழுந்தேன். நல்லவேளை..."

"எப்படி நல்லவேளை?"

"இல்லைன்னா உன்னைச் சந்திச்சிருப்பேனா..?"

"ஓ.. அதுக்கா...?"

"அனிதா... லுக்! அரைமணி கிம்கானா கிளப் போய் பேசிட்டு வரலாமா... என்ன சொல்றே?"

"எனக்காக வீட்ல காத்திருக்காங்க..." -அனிதா சட்டென்று தீர்மானித்தாள்.

"என்னைப் பார்க்க ஒரு பையன் வரான்..."

"வரட்டும்... அரைமணி கழிச்சு வரச் சொல்லு..."

"கல்யாணம் பேச!"

அவன் சட்டென்று காரை நிறுத்த, பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்தவன் டயர் தேய பிரேக் போட்டு 'ஓஓய்' என்று அதட்டிவிட்டுப் போனான்.

"தாங்க்ஸ்" என்றாள்; அவன் புறப்பட்டு சென்றான். அவன் முகம் ஏமாற்றத்தில் விழுந்திருந்ததைக் கவனிக்க முடிந்தது. அவன் விட்டுப்போன நீலப்புகையின் பெட்ரோல் வாசனை பிடித்திருந்தது அனிதாவுக்கு.

"என்னடி! கப்பல் மாதிரி கார்ல வந்து இறங்கறே... யாரு அது..?" என்று சுகந்தி கேட்டாள்.

"அதான் அன்னிக்கு மோட்டார் சைக்கிள்ல விழுந்தானே.. அந்தப் பையன். அவன் ட்ராப் கொடுத்தான்..."

"ட்ராப் கொடுக்கறான்னு கண்டவா கார்ல எல்லாம் ஏறிக்கக்கூடாது.. அதும் முன் ஸீட்டில்..."

அம்மா, "நீ சும்மாருடி... அவளுக்கு எல்லாம் தெரியும். தன்னைப் பார்த்துக்க தெரியும். தப்பு தண்டாவுக்கெல்லாம் போகமாட்டா. போ... போய் தலை வாரிப் பின்னிக்கோ. அரக்கு கலர் புடவையை எடுத்துக் கட்டிக்கோ..." என்றாள்.

"அம்மா, சீதா சொன்னான்... யாரோ என்னைப் பார்க்க வர்றதா.."

"யாரு... நம்ம கோபாலன் இல்லை, அவருடைய சித்தப்பா பையன் சுரேஷ்னு. அமெரிக்கால இருக்கானாம். ஒரு வார லீவுல வந்திருக்கானாம். ரெண்டு மூணு பெண் தான் பார்த்தானாம். ஒண்ணும் சரிப்பட்டு வரலையாம் அவனுக்கு. ஹோம்லியா பொண்ணு வேணுமாம். அனிதாவை ஒரு விசை பார்த்துரட்டும்னு அந்த மாமி எட்டு தடவை சொல்லியனுப்பிட்டா. உன்னைப் பார்த்துட்டு புடிச்சுப் போயிருந்தா வர டிசம்பர்ல கல்யாணம் பண்ணிக்க மறுபடி வருவானாம். நீயும் ஸ்டூடண்ட் விசாவில போய் படிப்பை முடிச்சுட்டு ரெண்டு பேரும் வேலைக்குப் போகலாம்..."

"என்னம்மா இப்பப் போய் கல்யாணம்னுட்டு..."

"இப்ப இல்லைடி கல்யாணம்..."

**அமெரிக்கா!**

**அனிதாவின் வியாழக்கிழமைக் கனவுகளில், அமெரிக்க எக்ஸ்பிரஸ்-வேக்-க் களில் கப்பல் கார் ஓட்டிக்கொண்டு சில வேளை போவாள்.**

சுகந்தி அக்காதான் உடுத்திவிட்டாள்.

"எங்களுக்குத்தான் அதிர்ஷ்டம் இல்லைன்னாலும் நீயாவது அமெரிக்கா, இங்கலண்ட்னு போ, நாங்கள்லாம் லீவுக்கு வந்து பார்க்கலாம்..."

அதற்குள் சுகந்தியின் கணவர் ராஜாராமன் உள்ளே எட்டிப் பார்த்து... "என்ன அனிதா, கல்யாணமா..?" என்று விசாரித்தார்.

"நீங்க போய் நாற்காலி எடுத்துப் போட்டு கார்பெட்விரிச்சு, காமிரா அல்மைரா பக்கத்தில பத்தமடைப்பாய் வெச்சிருக்கு- அதைப் பிரிச்சுப்போட்டு, ஓட்டல்ல போய் கேசரி பாத் வாங்கிண்டு வந்துடுங்கோ..." என்றாள் சுகந்தி.

"எல்லாம் ஆச்சு. உங்கம்மா அப்பவே சொல்லிட்டா..."

"பொம்மனாட்டிகள் இருக்கற இடத்தில் உங்களுக்கு என்ன வேலை...?" என்றாள் சுகந்தி.

"புதுசா சேஷகோபாலன் காஸெட் வந்திருக்கு அனிதா... நீ அதைக் கேக்கணும்..."

அனிதா தலை பின்னிக்கொண்டு மல்லிகை சூடும்போது, கண்ணாடி முன் நின்று பார்த்துக்கொண்டாள். பின்னால ஜிம்பு தெரிந்தான்... "என்னடி, கல்யாணமா உனக்கு?"

"போடா..."

"அந்தாளைப் பார்த்தேன். படா ஸ்டைலா இருக்கான்.. இங்கிலீஷே ஒரு மாதிரி இருக்கு..."

"யாரைச் சொல்றே...?"

"அதான் அந்த சுரேஷா...? உன்னைப் பார்க்க வரானே... டீ-ஷர்ட் எல்லாம் பிரமாதமா வெச்சிருக்கான்.

எம்.பி.ஏ.பண்ணப்புறம் உடனே அமெரிக்கால எனக்கு வேலை வாங்கித் தர்றதா சொல்லியிருக்கான். அனி... ப்ளீஸ்.. அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதா சொல்லிடு. உன் மூஞ்சிக்கு இதைவிட நல்ல மாப்பிள்ளை கிடைக்க மாட்டான்..."

"இவ மூஞ்சிக்கு என்னடா..?" என்றாள் சுகந்தி.


"இவன் அமெரிக்கா போகணும்னா, நான் கல்யாணம் பண்ணிக்கணுமாம்... என்ன நியாயம் இது?" என்றாள் அனிதா.

மகாதேவன் உள்ளே வந்தபோது சட்டென்று மௌனமானார்கள்.

"அரட்டை வேண்டாம். அவாள்லாம் வந்துருவா!" என்றார்.

[அனிதா வருவாள்...]





## பாப்பா முரசு சிறுகதை

# தாத்தாவும் பேரனும்



பொன்னியூர் கிராமத்தில் ஒரு தாத்தாவும் பேரனும் இருந்தனர். அவர்களுக்குச் சொந்தமான கழுதையை விற்பதற்காக, வெகு தூரத்தில் உள்ள நகரத்துக்குப் புறப்பட்டனர். கழுதையை நடத்திச் சென்றபடி தங்கள் பயணத்தை ஆரம்பித்தனர்.

வழியில் ஆற்றங்கரையில் இவர்களைப் பார்த்த சலவைக்காரர், "ஏன் ஐயா! கழுதை இருப்பதே பொதி சுமக்கத்தான்... அதைக் கையில் பிடிச்சுக் கொண்டு ரெண்டு பேரும் நடந்து போறீங்களே! ரெண்டு பேரும் கழுதை மேல ஏறிக்கொண்டு போகலாம்?" என்றார்.

அதைக் கேட்ட தாத்தாவும் பேரனும் கழுதை மேல் உட்கார்ந்து சென்றனர்.

பக்கத்து கிராமம் வந்தது. இவர்களைக் கண்ட ஒரு வழிபோக்கர், "அய்யா! பாவம் இந்தக் கழுதை... உங்க ரெண்டு பேரையும் இது தாங்குமா? அவன்தான் சிறுவன்... நடக்கமுடியாது... நீங்க பெரியவர்தானே... நடந்து போகலாமே!" என்றார்.

உடனே தாத்தா இறங்கிக்கொண்டார். பேரன் மட்டும் கழுதைமீது இருந்தான்.

இன்னும் சிறிது தூரம் சென்றதும், ஒரு பாடசாலை ஆசிரியர் எதிர்ப்பட்டார். "ஏன், தம்பி! படிச்சிருந்தும் உனக்கு அறிவு வேலை செய்யலியே! வயதான தாத்தாவை நடக்க வைச்சுட்டு, நீ சுகமாக் கழுதை மேல சவாரி செய்றியே...

இந்த வயதில் சோம்பேறித்தனம் கூடாது!" என்றதும் பேரன் இறங்கிக் கொண்டு தாத்தாவைக் கழுதை மேல் அமர்த்தினான்.

அடுத்த ஊர் வந்தது. அங்கு இரண்டு இளைஞர்கள் இவர்களைப் பார்த்து, "என்னய்யா இது அநியாயம்? வாயில்லா ஜீவனை இப்படி வதைக்கிறீங்களே! உங்க பாரத்தை இந்தச் சின்னக் கழுதை தாங்குமா? சந்தைக்குப் போறதுக்குள்ள உயிர் போயிடும் போலிருக்கே!" என்றதும் இருவரும் யோசித்தனர்.

தாத்தா பேரனைப் பார்த்து, "நாம சந்தைக்குப்போறதே இந்தக் கழுதையை விக்கத்தான்... இது உயிரை விட்டா, நமக்குத்தான் நஷ்டம்... அதனால இதைத் தூக்கிக்கிட்டுப்போவோம்" என்றார்.

பேரனும் அதை ஆமோதித்தான். உடனே தாத்தா கழுதையைத் தூக்கிக் கொண்டு நடந்தார்.

சந்தை நடக்கும் நகரம் வந்தது. கழுதையைத் தூக்கிக்கொண்டு வரும் இருவரையும் பார்த்து, மக்கள் சிரித்தனர்.


"இப்படி யாராவது முட்டாள் இருப்பார்களா? கழுதைக்குக் கால்கள் இருக்கும் போது அதை நடக்கவிடாமல் தூக்கிட்டுப் போவார்களா!" என்றனர்.

மீண்டும் குழம்பிய தாத்தா, பேரனிடம், "வா.. முன்போல நடத்தியே கூட்டிட்டுப் போலாம்" என்றார்.

அடுத்தாற்போல் வந்த வியாபாரி, "ஏம்பா.. இது மேல ஏறி வந்திருக்கலாமே!" என்றதும், தாத்தா திகைத்தார். பேசாமல் நடந்தார்.

பேரன் "ஏன் தாத்தா... இப்போ இவர் சொன்ன மாதிரிச் செய்யலையா? என்று கேட்டான்.

"மனிதர்கள் என்று இருந்தால் நாலு பேர் நாலு விதமாகக் கருத்துக்கள் சொல்லத்தான் செய்வார்கள்... ஆனால் நமக்கு எது சரியென்று படுதோ அதைத்தான் செய்யணும்னு நான் உணர்ந்திட்டேன்... அதனால் இனி இப்படியே போவோம்" என்றார். சந்தையும் வந்து விட்டது.



பூனையைக் கண்டு பயந்து ஓடுபவர் யார்? 1 முதல் 29 வரையான இலக்கங்களை இணைத்துக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **18.08.2001.**

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 407**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 405

**பரிசுக்குரியவர்:**
நவரெத்தினராஜா நிரஞ்சன்,
அரசடித்தீவு ஆர்.டி.எஸ். வீதி, கொக்கட்டிச்சோலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| யோ. ஐங்கரன், உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருக்கோணமலை. | என்.நிவேதினன், விபுலானந்தா தமிழ் மகா.வி., மொனராகலை. |
| இராசரத்தினம் சாரூஜன், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | இ. கமலநாதன், கிண்ணையடி, வாழைச்சேனை. |
| டி.எஸ்.கே. மேபல் பினிடா, கலாபொக்க தமிழ் மகா வித்., மடுல்கலை, கண்டி. | எஸ். சாக்ஷிஹன், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு-04. |
| ந. வடிவுக்கரசி, ஹோல்புறுக் தமிழ் மகா வித், அக்கரப்பத்தனை. | பொன்னம்பலம் கமல்ராஜ், விநாயகர் ம.வி., கோளாவில்-01, அக்கரைப்பற்று. |
| ரா. கோமதி, நிவ்வெளி தமிழ் வித்தியாலயம், நோர்வூட். | எம். எஃப். பாத்திமா ரிப்னா, மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |

## கேள்வி இங்கே

1. ஆசியாவில் முதன் முதலில் குடியேற்ற நாடுகளை அமைத்த ஐரோப்பிய நாடு எது?
2. கப்பல்களின் அரசி என்றழைக்கப்படுவது எந்த நாடு?
3. முதல் உலகப் போரின் போது அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்தவர் யார்,
4. ரஷ்யாவை இரும்புத்திரை நாடு என்று அடைமொழியிட்டுக் கூறியவர் யார்,
5. மாலைதீவில் மொத்தம் எத்தனை தீவுகள் இருக்கின்றன?
6. ஹிட்லர் ஜெர்மனியின் தலைவராக எப்போது பதவியேற்றார்?
7. கூடைப்பந்தாட்ட விளையாட்டைக் கண்டுபிடித்தவர் யார்?
8. எவரெஸ்ட் சிகரத்தில் முதன் முதலில் ஏறிய டென்சிங், ஹிலாரி ஆகியோர் சிகரத்தின்மீது எந்தெந்த நாட்டுக்கொடிகளை ஏற்றினர்?
9. நம் உடலில் உள்ள எந்த உறுப்பை மூளை அதிகமாய் வேலை வாங்குகிறது?
10. ஒரு தீக்கோழி முட்டை எத்தனை கோழி முட்டைகளுக்குச் சமம்?

## பதில் இங்கே

1. போர்த்துக்கல்
2. இங்கிலாந்து
3. வுட்ரோ வில்சன்
4. இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில்
5. ஆமிரத்து 200 தீவுகள்
6. 1933ம் ஆண்டு
7. அமெரிக்காவைச் சேர்ந்த ஜேம்ஸ் நைஸ்மித்
8. ஐ.நா., பிரிட்டன், இந்தியா, நேபாள கொடிகள்
9. நமது கைகளில் உள்ள இரண்டு பெருவிரல்கள்
10. 30 கோழி முட்டைகளுக்குச் சமம்.




### பறவைக்கு மரியாதை



விக்டோரியாவில் உள்ள கிரைண்ட் தேவாலயம் மிகவும் புகழ்பெற்றது. இத் தேவாலயம் கட்டும்போது ரொபின் பறவை ஒன்று வந்து அங்கு கூடு கட்டியது. அந்தப் பறவையின் நினைவாக தேவாலயத்தில் உள்ள ஒரு தூணின் மீது ரொபின் பறவையின் உருவம் பொறிக்கப்பட்டது. இந்த ஆலயத்திற்குப் புகலிடம் தேடி வந்த முதல் பறவை என்ற காரணத்தாலேயே இச்சிறப்பு அப் பறவைக்குக் கொடுக்கப்பட்டது.

### அலெக்சாண்டர் போட்ட வழக்கு



அலெக்சாண்டர் கிரஹாம்பெல் கண்டு பிடித்த தொலைபேசியின் செயல் முறையைத் தெரிந்து கொண்டு பல தனியார் நிறுவனங்கள் அவரது அனுமதியின்றி சுயநலத்திற்காக தொலைபேசிகளைத் தயாரித்த நிறுவனங்கள் மீது வழக்குத் தொடுத்து வென்றார். அப்படி அவர் தொடுத்த வழக்குகளின் எண்ணிக்கை 600 ஆகும்.

### முதல் ஜனாதிபதி



ஆகாய விமானத்தில் பயணம் செய்த உலகின் முதல் ஜனாதிபதி யார் தெரியுமா?

அமெரிக்க ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்.

### வரிக்குதிரை பாதுகாப்பு



கறுப்பும் வெள்ளையுமாக வரிக்குதிரையின் உடலில் வரிகள் இருப்பது அழகுக்காக அல்ல, பாதுகாப்புக்காக. வரிக்குதிரைகள் எப்போதும் கூட்டமாக இடம்பெயரும். அப்படி அவை செல்லும் போது அவற்றின் உடலில் உள்ள கோடுகள் பலவும் பல திசைகளில் அசையும். வேட்டைக்கார மிருகங்களால் குறிப்பிட்ட ஒரு வரிக்குதிரையை மட்டும் குறிவைப்பது கஷ்டமாகிவிடும். கண்கள் குழம்பும். எதிரிகளின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுத் தப்பிச் செல்லவே இந்த வரிகள் இயற்கையால் வழங்கப்பட்டவை.

### புலியும் உணவும்



ஒருநாளைக்கு ஒரு புலிக்கு ஏறத்தாழ 12 இறாத்தல் எடையுள்ள உணவு தேவைப்படுகின்றது. நன்றாக வளர்ந்த புலி ஒன்று ஒரு வருடத்தில் 6 ஆயிரத்து 600 இறாத்தல் எடையுள்ள இறைச்சியை உண்ணுகிறது.

### முழுவதும் இலக்கத் தகட்டில்

நான்கு சக்கர வாகனங்களுக்கு முதலில் இலக்கத் தகடுகள் பொருத்தும் வழக்கம் ஃபிரான்ஸ் நாட்டில் தான் 1893ம் ஆண்டு முதன் முதலாகக் கையாளப்பட்டது. அப்போதைய எண் தகடுகளில் வண்டியில் உரிமையாளர்ப் பெயரும் முகவரியும் முழுவதுமாக எழுதப்பட்டிருக்கும்.

# "நினைப்பதொன்று..."

"எல்லாம் சரியா...?"

"ஓம் ஐயா! ஒரு சின்ன சிக்கல் மற்றப்படி எல்லாம் நல்லாயிருக்கு."

"சிக்கல்கள் ஏதுமிருக்கவே கூடாது. முக்கியமா ' இதற்கு நானும் உடந்தை என்பது தெரியவே கூடாது!"

"புரிஞ்சு கொள்ளக்கூடிய நிலைமை இல்லியே. நல்லது செய்கின்ற மாதிரியாக தானே ஏற்பாடெல்லாம்."

"சரி! எல்லாம் ரெண்டு கிழமைக்குள் தானே...? கவனிச்சுக்கொள்வோம்."

"ஐயா! சின்ன சந்தேகம்...!"

"பின்னாடி இந்த நோக்கத்தை அறிந்து உங்களைத் தப்பாக...?"



## இளையவன் - திருகோணமலை

"பரவாயில்லை. எல்லோருக்கும் சுமையாக இருக்கின்ற அந்த விசயம் நல்ல படியாக நடந்தாகணும். எவ்வளவு காலமாக வீணே இழுபட்டுக்கொண்டிருக்கின்றது...?" எதிரே நின்றவனுக்கு முகத்தைக் காண்பிக்காது திரும்பிக் கொண்டு கண்ணாடியைக் கழற்றிக் கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டார். காரியம் ஆக வேண்டுமாயிருந்தால் நமது விருப்பு வெறுப்புக்களுக்கும் அப்பால் சில காரியங்களை செய்தாக வேண்டியுள்ளது. ஜீரணித்துக்கொள்ளவே முடியாத அந்த விசயத்திற்காக உள்ளே புழுங்கிக்கொண்டிருப்பதை வெளிக்காண்பிக்கவில்லை. நீண்ட வாக்கு வாதத்தின் பின்னர் செயற்படுத்தவுள்ள அந்த திட்டம் தன்னுடைய பலவீனத்தினால் பிசுபிசுத்துப்போய்விடக்கூடாது என்பதில் மிகவும் உறுதியாகவே இருந்தார்.

நெருங்கிய உறவினர்கள், உறவுக்காரர்கள், வேண்டப்பட்டவர்கள் என்று ஒவ்வொருவராக வரத்தொடங்கிக் கொண்டிருந்தனர். கணவருடைய மனநிலை சரியாகவே இல்லையென்பதைத் தெளிவுற புரிந்து கொண்ட மனைவி, யார் பொறுப்பில் எந்த வேலைகள் கொடுத்தால் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள் என்பதை மிகவும் நிதானமாக அவதானித்து வேலைகளைப் பகிர்ந்து கொண்டிருந்தாள். எங்கும் சுறுசுறுப்பான வேலைகளினால் கலைகட்டத் தொடங்கியது.

"என்னங்க...!"

"ம். சொல்லு..."

"மனசுக்குக் கஷ்டமாக இருக்கா..? இந்த நேரத்தில நாமதான் அருகில் இருந்து உதவியாக இருக்கவேண்டும். நல்லா விசாரிச்சுப் போட்டன். அவங்க நல்லாவே கவனிச்சுக் கொள்வாங்கலாம். என்னங்க செய்றது! நாம இஷ்டப்பட்டா இப்படி நடந்துக்கிறோம். சாஸ்திர சம்பிரதாயங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டியிருக்கு. நாம விட்டாலும் மத்தவங்க விட்டிடுவாங்களா?"

"இல்லையப்பா! டொக்டர் வந்து அப்படிச் சொல்லியும்..."

"நாம சும்மா வீசிவிட்டு வரவில்லையே? செலவோட இன்னும் அள்ளிக்கொடுத்தால், மணிக்கொரு தடவை அங்கேயே பரிசோதித்து மருந்தெல்லாம் கொடுத்து எங்களை விட நல்லாவே கவனிச்சுக்குவாங்க. இடமொன்றும் தூரமில்லை அடிக்கடி நாமலே போய்ப் பார்த்துக்கொண்டும் வந்திடலாம்."

"சரியாப்படல. நம்ம வீட்டிலேயே எங்காவதொரு மறைவான ரூமில் வைத்து."

"தெரிஞ்சுதான் பேசுறீங்களா...? கொஞ்சமென்றாலும் பெரிதாகத் தூக்கிப் பிடித்துக்கொண்டு பேசுகிற ஆட்கள் அவங்க. நிச்சயப்படுத்தும் போதே எவ்வளவு ஆச்சாரங்களைப் பார்த்தார்கள்...? ஏதோ சாஸ்திர சம்பிரதாயங்களை தாங்கள் மாத்திரம்தான் கட்டிக்காப்பது போல." சலித்துக்கொண்டாள்.

"நல்லாத் தெரிஞ்ச வங்கிட்ட கேட்டுப் பார்த்தனியோ...?"

"எல்லாம் கேட்டாச்சு. சீக்காலிய வீட்டுல வைச்சுக்கொண்டு செய்ய கூடாதாம். அபசகுனம் அது இதென்று... என்ன சம்பிரதாயமோ? என்னங்க!

வீணே மனசைபோட்டு குழப்பிக்கொள்ளாதீங்க. சிலர் சொல்றாப்போல ஏதும் நடந்திடமாட்டாது. மூணு வருசமா நடக்காததா ரெண்டு கிழமைக் குள்ள நடந்திடப் போகுது..? எந்தக்காரணத்தைக் கொண்டும் இனிமேல் அது தள்ளிப்போக விடமாட்டேன். என்னை மாதிரியுள்ளவங்களுக்குத் தான் அந்தக் கஸ்டம், வேதனை எல்லாம் புரியும். எல்லாக்காரியங்களையும் செய்து முடிச்சாச்சு.இதைவிட்டால் இனிமேல் சாத்தியப்படாதென்று சோதிடரும்..."

"இப்போ நீயேன் அழறே...? சிறப்பாக நடக்கவேண்டு மென்ற ஆசைகள் இல்லாதவனா நானும். ஒரு விசயம்தான் என்ட மனசை உறுத்திக் கொண்டிருக்கு எப்படி ஆறுதல் படுறதென்று தெரியாமல்..." அந்த வார்த்தைகளைக் கேட்டதும், கண்களை அழுத்தமாகவே துடைத்துக்கொண்டு நிமிர்ந்து கணவனை முகத்திற்கு நேரே ஏறிட்டாள்.

"என்மேல எவ்வளவு பாசம். இதுக்காக அப்படிச் செய்து போட்டனென்று பிறகு அறிந்துகொண்டால் அந்த மனசு எவ்வளவு கஷ்டப்படும்...?"

"நியாயம்தான். டொக்டர் வந்து சொன்னதெல்லாம் அவங்களும் அறிந்து தான் இருக்காங்க. நிலைமை மோசமடையக்கூடாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடுகள் என்று நான் பக்குவமாகச் சொல்லி ஆறுதல் படுத்திப்போடுவன். அந்தக் கவலை உங்களுக்குத் தேவையில்லாதது. எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கு." மேற்கொண்டு மனதிலுள்ளதைப் பட்டென்று சொல்லிட சற்றுத் தயங்கிக் கொண்டார். தன்னுடைய பாசம், பலவீனங்கள் வென்று எதிர்பார்த்த அந்த நிகழ்வு அந்த வீட்டுக்குள்ளே நடந்துவிட்டால்... ஐயோ! ஒரு வருடம் எந்த நல்ல காரியத்தையும் செய்ய முடியாது போய்விடும்.

"இந்த விசயத்தில் எல்லாமே உன் இஸ்டம்தான். நல்லதோ கெட்டதோ நாளைக்கு விசயமறிந்த உன்ட தாய் தன்னோட பேத்தியின் கல்யாணத்தை காட்டாமல் ஏன் என்னை ஒதுக்கினியள். வருத்தக்காரியென்றா தூக்கி வீசி எறிந்தீர்கள் என்று கேட்கக்கூடாது." உறுதியான முடிவுடன் கட்டளையிட்டவாறு படுக்கையிலிருந்து எழுந்து வேகமாக வெளியேறிக் கொண்டார். தனிமைப்பட்டவள் மனதின் பாரம் குறைந்திட கட்டிலில் வீழ்ந்து அழுதாள்.

விடிந்ததும் அக்கல்யாண வீட்டில் எங்கும் பரபரப்பு. பாதியில் முடிவடைந்திருந்தது. சோடனை வேலைப்பாடுகள். சகல வேலைகளும் உடனே நிறுத்தப்பட்டிருந்தது. எல்லோர் முகங்களிலும் மாறுபட்ட தன்மைகள். 'சிறப்பான ஏற்பாடுகள் இப்படி ஆகிப்போச்சே' என்று ஊரவர்கள் பேசிக் கொண்டாலும், அதிர்ச்சியான அந்த நிகழ்வு உறவினர்களை உலுக்கிக்கொண்டிருந்தது. இப்படியாகுமென்று யார்தான் எதிர்பார்க்க முடியும். நேற்று இரவுவரைக்கும் ஆரோக்கியமாக இருந்து விடிகின்ற நேரத்தில் நெஞ்சைப்பிடித்துக் கொண்டு அழுது அவர் மடியில் வீழ்ந்த மனைவி எழுந்திருக்கவேயில்லை மாரடைப்பினால்.

# இதுவும் பெண்ணா?

நிர்மலாவுக்கு அடிவயிறு 'சுரீர் சுரீர்' என்று வலித்தது. நாரித் தசையை யாரோ சிறு சிறு துண்டுகளாக வெட்டி எடுப்பது போன்ற உணர்வில் அவள் துடித்துப் போனாள். அந்த வேதனையிலும் மனம் இடைவிடாமல் "முருகா இந்தக் குழந்தை யாவது ஆணாகப் பிறக்க வேணும். நான் நேர்ந்தபடி மிளகு தண்ணியோடை கந்த சஷ்டி விரதம் பிடிக்கிறன்." என்று ஆண்டவனை மனமுருகி இறைஞ்சியது.

நிர்மலா பிரசவ அறைக்குள் வலியுடன் முனகிக் கொண்டிருக்க, வெளியே தாய் பாக்கியமும் மாமியார் ராசம்மாவும் குறுக்கும் நெடுக்குமாகப் பதைப்புடன் விறாந்தையை அளந்து கொண்டிருந்தார்கள்.

"முத்துமாரி அம்மாளே! மாலிசந்தி விநாயகா, வல்லிபுரத்தானே செல்வச் சந்நிதி முருகா! தாய் பிள்ளையின்ரை உயிரை வெவ்வேறாக்கி விடப்பா." என்று பாக்கியம் பெற்ற வயிறு துடிக்கக் கலங்கும் நெஞ்சை ஒரு கையால் அழுத்தியபடி எல்லாக் கோவில்களும் உள்ள திசைக்கு மாறி மாறித் திரும்பி நின்று புலம்பினாள்.

"முந்தியும் நாலும் பொடிச்சியள். இதுவும் அது மாதிரி எண்டால் என்ரை பொடியன் பிட்சா பாத்திரந்தான் ஏந்த வேணும். அஞ்சு பெண்ணைப் பெத்தால் அரசனும் ஆண்டியாவான் எண்டு அந்தக் காலத்திலை சும்மாவா சொல்லி வைச்சவங்கள்." என்று ராசம்மா சிறிது பலமாகவே முணுமுணுத்தாள்.

"க்வா.. க்வா... குவா.." என்று மூடிய கதவையும் மீறிக் கொண்டு புதிய ஜீவனின் அவசரக் குரல் கேட்டதும், இருவரும் ஆவலுடன் கதவைப் பார்த்தனர்.

"அம்மளாச்சி! பெரிய நன்றி தாயே!" என்று ஆண்டவனுக்கு மறக்காமல் நன்றி கூறிவிட்டு, கதவருகில் ஓடிப்போய் நின்று கொண்டாள் பாக்கியம்.

உள்ளே நாலைந்து மணி நேர



ஜீவமரணப் போராட்டத்தின் பின் பெற்ற புதிய உயிரை அணைத்து முத்தமிட வேண்டும் என்ற ஆவலுடன் களைப்பெல்லாம் பறந்தோட கண்களை மெல்லத் திறந்தாள் நிர்மலா.

"அழகான பெண் குழந்தையம்மா. நல்ல நிறை..." என்று தாதி தொடர்ந்து சொன்னதெதுவும் நிர்மலாவுக்கு புரியவில்லை.

"பெண்ணா..." என்று ஈனஸ்வரத்தில் அவள் முனகியது அவள் காதுக்கே கேட்கவில்லை. நெஞ்சு குற்றம் புரிந்தவள் போல் படபடவென்று அடித்துக் கொள்ள கண்கள் சோர்வுடன் மூடிக்கொண்டன.

"நிர்மலாவின் குழந்தையை வாங்க யாரம்மா நிக்கிறியள்?" என்று வெளியே வந்த தாதியிடமிருந்து பாக்கியம் ஆசையுடன் குழந்தையை வாங்கிக் கொள்ள,வாய் "என்ன, ஆண்குழந்தைதானே?" என்று தன்னிச்சையாகக் கேட்டது.

"பெண் குழந்தையம்மா. நல்ல அழகான, ஆரோக்கியமான பெண் குழந்தை." என்று தாதி சிரித்தபோது நெஞ்சில் நெருப்பை வாரிக்கொட்டிக் கொண்டது போல் துடித்துப் போனாள் பாக்கியம்.

"அடக் கடவுளே! வயிற்றைப் பார்த்தால் அச்சு அசலாக ஆண்குழந்தை இருப்பது போல் சின்னதாகக் கூராக இருந்துதே. போதாக்குறைக்கு வலது கையையும் ஊன்றிக் கொண்டு தானே எழும்புவாள். அதோடை இந்தப் பொடிக்குத் தானே வாந்தி, தலைச்சுற்றெண்டு பாடாய்ப்பட்டுக் கொண்டிருந்தாள். காலிலை வேறை நரம்பு வெடிச்சு சரியா ஆம்பிளைப் பிள்ளையின்ரை அறிகுறியளோடை... ஐயோ! இப்ப மருமகனுக்கு என்னத்தைச் சொல்லுறது?" என்ற மனம் ஆற்றாமையுடன் பெருமூச் செறிந்தது.

"அது தானே பாத்தன். இதுகளின்ரை வம்சத்திலை ஆம்பிளைப்பிள்ளை எப்ப பிறந்தது இப்ப பிறக்க? எல்லாம் என்ரை பிள்ளையின்ரை தலை எழுத்து.. இந்தக் குடும்பத்துக்கை போய் கட்டி அறுக்க வேணுமெண்டு பலன்? எனக்கு முதலே தெரியும். என்ரை பொடியன் ஒரு ஆண் வாரிசு வேணுமெண்டு எப்படி ஆசைப் பட்டவன். கடைசியிலை அஞ்சாவதும் இப்பிடி ஒரு கறுமமா வந்திருக்கு. தாய் கொண்டு வந்த சீதனத்திறத்திலை அஞ்சு பொடிச்சியளுக்கும் என்னத்தைச் செய்யிறது?" ராசம்மா கொதித்த எண்ணெய்க்குள் போட்ட அப்பளம் போல் பொரிந்து கொண்டிருந்தாள்.

"இதென்ன வம்பாக்கிடக்கு. பொடி பிறந்து ஒரு நிமிசமாகேலை. அதுக்கிடையிலை சீதனமெல்லாம் பேசுகியள். என்ன செய்யிறது? எங்கடை தலைவிதி? அனுபவிக்கத்தானே வேணும். அதுக்கு இப்ப இஞ்சை ஆஸ்பத்திரியிலை இழவு வீடு நடந்த மாதிரி ஏன் ஒப்பாரி வைக்கிறியள்?" என்று தாங்க முடியாமல் சிடுசிடுத்தாள் பாக்கியம்.

"ஓஹோ! ஏதோ பேரப் பொடியனைப் பெத்த மாதிரி ரோசம் பொத்துக் கொண்டு வருகுதாக்கும்.உன்ரை மேளைப் போலவே? என்ரை ராசாத்தி, நாலு ஆம்பிளைப் பிள்ளையளை ராசா மாதிரிப் பெத்து வைச்சிருக்கிறாள். ஒரு பொடியனைப் பெறத்துப்பில்லை. கதைக்க வந்திட்டாளவை வெக்கங் கெட்டதுகள். தூ?" என்று அங்கிருந்து நகர்ந்தாள்.

***

காலச்சக்கரம் கனவேகமாக உருண்டோடியதில் சங்கர் நிர்மலா தம்பதிகளின் பெண்கள் ஐவரும் வளர்ந்து இளமைப் பருவத்தில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் அறிவும், அழகும், பண்பும் எல்லோரையும் அவர்கள் பால் காந்தமாக ஈர்த்தது. மூத்த இரு பெண்களும் நல்ல இடத்தில் வாழ்க்கைப் பட்டிருந்தார்கள். பிறந்த போது வீட்டுக்காரராலேயே வெறுப்புடன் பார்க்கப்பட்ட ஐந்தாவது கடைக்குட்டிப் பெண் மைதிலி டாக்டராகியிருந்தாள்.

திடீரென்று வீட்டின் முன்னே கார் ஒன்று வந்து நிற்கும் சத்தமும் அதைத் தொடர்ந்து கதவை அறைந்து மூடும் சத்தமும் கேட்டதில் அடுக்களையில் வேலையாக இருந்த நிர்மலா வாசலுக்கு ஓடினாள். மைதிலி ராசம்மாவை அணைத்தபடி காரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள்.

"அம்மா! இஞ்சை ஓடி வாங்கோ. யார் வந்திருக்கினம் எண்டு வந்து பாருங்கோ."உற்சாகத்துள்ளலுடன் மைதிலி குரல் கொடுக்கவும், நிர்மலா வாசலை அடையவும் சரியாக இருந்தது.

"அம்மா! பாட்டிக்கு பிறெஷர். தலையைச் சுத்துதெண்டு ஹொஸ்பிற்றலுக்கு தனிய வந்திருந்தா. பாட்டியைத் தனிய விட்டிட்டு அத்தான்மார் நாலுபேருக்கும் அப்பிடியென்ன தலை போகிற வேலை? வயது போன நேரம் விழுந்து காலைக்கையை உடைத்தால் அவங்களா சேஜரி பண்ணி ஒட்ட வைப்பாங்கள்? பாட்டீ? உங்களுக்கு உங்கடை மகள் மட்டும் தான் ஒரு பிள்ளையா? அவவின்ரை பிள்ளையள்தான் பேரப் பொடியளா? அப்பாவும் உங்கடை பிள்ளைதான். நாங்களும் உங்கடை அருமைப் பேரப்பிள்ளையள் தான். பாட்டீ! இனி நீங்கள் எங்களோடை தான் இருக்கப் போறியள். அப்போ தான் நேரத்துக்கு நேரம் மருந்து தந்து குணப்படுத்தலாம். என்ன பாட்டீ? ஓகே தானே. நீங்கள் ஒண்டுக்கும் கவலைப்படாதேங்கோ. உங்கடை பேரன்மார் கவனிக்கினமில்லை எண்டு கவலைப்பட்டியள். பாட்டீ, பெண்ணாப் பிறந்த உங்களுக்குப் புரியாதா, என்ன? ஆண்டவன்ரை படைப்பிலை பெண்களுக்குத் தான் இரக்கமும், பொறுமையும், அன்பும் அதிகம். ஒன்றல்ல, ரெண்டல்ல நாங்கள் ஐந்து பேர் உங்களைப் பார்க்க இருக்கிறம். பிறகென்ன கவலை உங்களுக்கு, எங்கை பாட்டி சிரியுங்கோ. அப்ப தான் இந்தப் பேத்திக்கு சந்தோஷமாயிருக்கும்." கலகலத்தாள் மைதிலி.

## அல்வையூர் காந்தி அருணாசலம்-கனடா

கார்ச்சத்தம் கேட்டு வெளியே வந்த சங்கரும் பாக்கியமும் மைதிலியின் குட்டிப் பிரசங்கத்தைக் கேட்டதில் நெகிழ்ந்து போய் நின்றார்கள். பெண்களைப் பெற்றதில் குறுகிப்போய்நின்ற நெஞ்சும், வயிறும் பூரிக்க நிர்மலா பெருமையுடன் நிமிர்ந்தாள். ஏனோ மைதிலி பிறந்த அந்த நிமிடம்... தாங்கள் ஆஸ்பத்திரியில் நடந்து கொண்ட அருவருப்பான நிகழ்வுகள்... எல்லோர் நினைவிலும் ஒரு சேர நிழலாட வெட்கம், வெறுப்பு, இயலாமை, குற்ற உணர்வென்று பல வகைப்பட்ட உணர்ச்சிக் கலவைக்குள் எல்லோரும் அமிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

"என்ரை பேத்தி!" என்று அடக்க முடியாமல் கேவியபடி மைதிலியை நெஞ்சோடு ஆரத்தழுவி முத்தமிட்டாள் ராசம்மா. பேத்தியின் கேசத்தை ஆதரவுடன் கோதி ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தாள் மைதிலி.

# தப்பு

வீதியோரமாய் பஸ்ஸுக்காக காத்துநின்றான் சங்கர். 'சே... என்ன வெயிலா இருக்கு. மண்டையே பிளந்திடும் போல கிடக்கு.' தனக்குள் ஆதங்கப்பட்டுக் கொண்டவன், வீதியில் ரியூசன் விட்டுப் போகும் பெண்பிள்ளைகளை கேலி செய்தபடி இளைஞர் கூட்டமொன்று அவர்கள் பின்னாலேயே உலாப் போக கவனித்தவன் 'காலம் ரொம்ப கெட்டுத்தான் போயிடுச்சி..' புறுபுறுத்தபடி எதிரே வந்து கொண்டிருந்த மினிவேன் அவனருகில் நிற்கவே, அதில் ஏறிக்கொண்டான். உள்ளே நுழைந்தவனுக்கு எரிச்சலாக இருந்தது.

"ஏறுங்க அண்ண சீட் தாறன்!" என்றுதான் கண்டக்டர் பொடியன் சொன்னான். உள்ளே கால் வைத்து நிற்கவே இடமில்லாமல் அவஸ்தைப்பட வேண்டியதாகிவிட்டது. 'இந்த வேன்காரங்களே இப்படித்தான். காணாததுக்கு வேனுக்குள்ளே கெசட்ரெக்கோடரில ஒரு இங்கிதமில்லாத பாடல். ஆண்களும் பெண்களும் அடைபட்டு நெரிசல்பட்டு அவஸ்தையில் தவிக்க 'கட்டிப்புடி கட்டிப்புடிடா கண்ணாளா கண்டபடி கட்டிப்புடிடா' 'சே.. விவஸ்தையில்லாத பாடல்கள்' என மனதுக்குள் சலித்தபடி நின்றிருந்தான் சங்கர்.

வேன் கல்லாற்றுப்பாலம் தாண்டியதும் அருகிலிருந்த ஒருவர் இறங்கிக் கொள்ள சங்கருக்கு அந்த ஆசனம் கிடைத்ததால், "அப்பாடா!" பெருமூச்சொன்றை விட்டபடி அதில் அமர்ந்து கொண்டான். அவனருகில் ஒருவன் கண்ணுக்கு கறுப்புக் கண்ணாடியும் முறுக்கு மீசையுமாக அமர்ந்திருந்தான். முதல் பார்வையிலேயே சங்கருக்கு அவனைப் பிடிக்கவில்லை. பத்திரிகை படித்துக் கொண்டிருந்த அவன் பக்கத்தில் அமர்ந்த சங்கரை ஒருமுறை பார்த்துவிட்டு பட்டென முகத்தை திருப்பிக் கொண்டான். வேன் களுவாஞ்சிக்குடியை அடைந்தபோது, கைக்குழந்தையுடன் ஏறிய ஒரு பெண் இருக்க இடமில்லாமல் நிற்கவும் முடியாமல் தள்ளாடியபடி தவிக்க,

"அக்கா இந்த சீட்ல இருங்கோ!" என்றபடி அந்தப் பெண்ணுக்கு இருக்கையை கொடுத்துவிட்டு எழுந்து நின்று கொண்டான் சங்கர். வேனுக்குள் இருந்த சிலர் சங்கரைப் பார்த்த பார்வை 'இவரு பெரிய தியாகி' என்பதுபோல் இருந்தது. சங்கர் அதைப்பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாதவனாய் நின்றிருக்க வேன்



## ஆரையம்பதி பூ.இதயரெத்தினம்

செக்பொயிண்டையும் தாண்டி தரித்து நிற்க, கர்ப்பிணிப் பெண்ணொருத்தி ஏறிக் கொள்ள வேன் புறப்பட்டது. சங்கரைப் போல் மனமிரங்கி அந்தப் பெண்ணுக்கு யாருமே இருக்கை கொடுக்கவில்லை. அவளைப்பார்க்க சங்கருக்குப் பரிதாபமாக இருந்தது. அவன் பக்கத்திலிருந்த மீசைக்காரன் ஒரு கணம் திரும்பிப் பார்த்துவிட்டு இதையெல்லாம் கண்டும் காணாதவன் போல் திரும்பிக்கொள்ள இதைக்கவனித்த சங்கருக்கு ஆத்திரம்தான் வந்தது. 'சீ.. என்ன மனிசன்ரா இவன், கொஞ்சம்கூட இரக்கமில்லாம இருக்கானே? இந்த திடகாத்திரமான உடம்போட இருக்கிறவன் எழும்பி நின்னு அந்தப் பெண்ணுக்கு இடம் கொடுக்கலாம்தானே? ஒரு செக்பொயிண்டுலயும் இறங்காம கல்லுப்போல இருக்கானே. சரியான திமிர் புடிச்சவன்தான்' என மனதுக்குள் அவனை சபித்தபடி மறுபக்கம் திரும்பிக் கொண்டான் சங்கர்.

வேன் களுதாவளையை நெருங்கிய போது வேகம் குறைக்கப்பட்டு அந்த மீசைக்காரன் இறங்க ஆயத்தமானான். 'மகாராசா இறங்கப்போறாரு' அவன்மீது இன்னும் கோபம் தீராமல் புறுபுறுத்தான் சங்கர்.

"மெதுவா... மெதுவா பார்த்து இறங்கங்க அண்ணா..." கண்டக்டர் பொடியனின் குரலால் திரும்பியவன் அதிர்ந்தான். எழுந்து நின்றிருந்த மீசைக்காரனின் இடது பக்க ரவுசர் தொள தொளவென்று ஆடியது. அப்போதுதான் சங்கர் உணர்ந்தான். ஒரு கால் இல்லாதவரா அவர்? நொண்டி நொண்டி அவர் முன்னேற வேன் கண்டக்டர் மேலேயிருந்து ஊன்றுகோலை எடுத்துக்கொடுத்ததும் அவர் இறங்கிச் செல்ல, எண்ணத்தால் தவறிழைத்த குற்ற உணர்வோடு தலைகுனிந்து நின்றிருந்தான் சங்கர்.

**(யாவும் கற்பனை)**

# மர்மத்தீவு 17

## சங்கர்லால் துப்பறியும்

**புகை** எழும்பிய இடம் போகப்போக வில கிப்போவதைப் போல் இருந்தது.

புகை எழும்பிய இடத்துக்குப் பக்கத்தில்தான் ஷாவின் மறைவிடம் இருந்தது. அந்தப் பகுதியில் ஷாவும் அவர் ஆட்களும் மலையிலோ குகையிலோ வாழவில்லை. ஒரு சிறிய ஊரையே உருவாக்கி இருந்தார்கள். ஷாவுக்கு என தனியாக ஒரு பெரிய பங்களா கட்டப் பட்டிருந்தது. அவர் கூட்டத்தைச் சேர்ந்த வர்கள் பலர் அந்தப் பகுதியில் வீடு கட் டிக்கொண்டு வாழ்ந்தார்கள். கொடிய வர்கள் அடங்கிய இடம் அது.

ஷாவைப் பற்றி மலைவாழ் மக்களும் காட்டு மனிதர்களும் கொஞ்சமும் துன்பம் கொள்ளவில்லை. ஷா, பெரும் பணக்காரர். ஏதோ ஒரு குறுக்குவழியில் பணம் ஈட்டு கிறார் அவர் என்று அவர்கள் ஐயம் கொண்டார்கள், என்ற போதிலும் அவர்க ளுக்கு ஷாவும் அவர் மனிதர்களும் துன்பம் விளைவிக்கவில்லை. இதனால் அந்தப் பகுதி மக்கள் ஷா கூட்டத்தினரோடு நண் பர்களாகவே வாழ்ந்தார்கள்.

மலைவாழ் மக்களுக்கும் காட்டுமனி தர்களுக்கும் உணவு பொருட்கள் கொடுத் தும், கொடிய நோய்கள் பரவியபோது, மருத்துவ உதவி செய்தும் ஷா நல்லபெயர் வாங்கிக்கொண்டார். இதனால், அவர்கள் அவரை ஒரு மன்னரைப் போல மதித் தனர். அவருடைய மறைபொருள் வாழ்க் கையைப் பற்றி அவர்கள் துன்பம் கொள்ள வில்லை.

ஷாவும் அவர் கூட்டத்தைச் சேர்ந்த வர்களும் பெரிய பல பாங்குகளைக் கொள்ளையடித்தார்கள். பல கடத்தல் தொழில்களைச் செய்தார்கள். பணம் சேர்த்தார்கள். இந்தப் பணத்தைக் கொண்டுதான் மர்மத் தீவில் ஆராய்ச்சி செய்து உலகமே அஞ்சத்தக்க அந்த இரகசிய மருந்தைக் கண்டு பிடித்தார்கள். பெரும் பணத்தை ஆராய்ச்சிக்காகச் செலவு செய்துவிட்டு, ஷா மறைபொருள் கண்டுபிடிப்பைச் சீனாவுக்கோ அல்லது பொதுவுடைமை நாடுகளுக்கோ விற்றுத் தாங்கள் செலவு செய்ததைவிட நூறு மடங்கு மிகுந்த பணத்தைப் பெறத் திட்டம் போட்டிருக்கிறார். அது அவருக்குத் தெரி யும். அவர் இப்போது இந்தியாவிலிருந்து தப்பி வெளிநாடு போகவேண்டும். ஒன் றிரண்டு நாட்கள் பொறுத்து எல்லாரும் ஷாவைப்பற்றி மறந்துவிட்டிருக்கும் வேளை யில் வேறு விமானத்தைப்பிடித்து வெளி நாட்டுக்குப் போய்விட வேண்டும் என்று அவர் திட்டம் போட்டிருந்தார்.

எலும்பு முறிந்த அப்துல்லாவை வெளிநாட்டுக்குத் தன்னுடன் அழைத்துப் போக முடியவில்லையே என்ற துன்பம் ஷாவை உறுத்திக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் விரைந்து செய்தி ஒன்று வந்தது. அவருடைய கூட்டத்தைச் சேர்ந்தவன் ஒருவன் ஓடி வந்து, "விமானம் ஒன்று வந்து ஒரு கல் தொலைவில் இறங் கியது. அதில் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் வந்தார்கள். மிகவும் வேடிக் கையான விமானம் அது. ஹெலிகாப்ட ரைப்போல் குறுகிய ஓர் இடத்தில் இறங் கியது. அதிலிருந்து ஒரு மனிதர் மட்டும் நம் இருப்பிடத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார். விமானத்தில் அந்தப் பெண் உட்கார்ந்திருக்கிறாள். மற்றொரு வன், விமானத்தின் வெளியே பாதுகாப்புக் காக நிற்கிறான்." என்றான்.

இதைக் கேட்டதும் ஷாவின் முகம் மலர்ந்தது.

"நான் எதிர்பார்த்ததை விட விரை வாகச் செயல்கள் நடக்கின்றன. சங்கர் லால் இறக்கவில்லை. உயிருடன் தப்பி விட்டார் என்று என் உள்ளுணர்வு எண் ணியது எவ்வளவு சரியாகிவிட்டது!" என் றார் மலர்ச்சோலையிடம். பிறகு,

"மலர்ச்சோலை, மர்மத்தீவில் சங்கர் லாலை நாம் வரவேற்றுப் பேசினோம். இந்தத் தடவை இங்கே அவருக்கு வர வேற்பு வேறு வகையில் இருக்க வேண்டும். உடனே புறப்படு. ஒரே ஒரு பெட்டியில் ஒன்றிரண்டு உடைகள் எடுத்துக்கொள். எனக்கும் ஒன்றிரண்டு உடைகள் எடுத் துவை. நாம் உடனே புறப்படுவோம்" என்றார் ஷா.

"இதோ புறப்படுகிறேன்" என்று சொல்லித் தன் அறைக்குள் ஓடினாள் மலர்ச்சோலை.

ஷா தன் ஆட்களில் ஒருவனை அழைத் தார். அவனிடம் மறை பொருளாகச் சொன்னார். "நம்முடைய இருப்பிடத்தை நோக்கி ஒரு மனிதர் தன்னந்தனியாக வருகிறார். அவர் பெயர் சங்கர்லால். பார்ப்பதற்கு மிகவும் எளியவராகத் தெரிவார். ஆனால் அச்சத்திற்கு உரியவர். ஆற்றல் உள்ளவர். ரோஜா மலர் மிகவும் அழகாக இருக்கிறதே என்று கிள்ளப் போனால் அதன் அடியில் இருக்கும் முள் எப்படி நறுக்கென்று நம் விரல்களைக் குத்துகிறதோ, அதைப்போல், இவர் இவரு டைய அறிவினால், துப்பறியும் திறனால் பலரை ஒழித்திருக்கிறார்! இந்த இடத்துக்கு அவர் தனியாக வருகிறார் என்றால் பார்த்துக்கொள். அவர் விரும்பினால், ஒரு சொல்சொன்னால் போதும், பொலிஸ் படையே திரண்டுவரும். ஒரு பெரிய இராணுவமே வேண்டுமானாலும் இவர் உதவிக்கு வந்து சேரும். நம் கோட் டையைப் பிடிக்க பாரசூட் படை வேண் டும் என்று சொன்னால் போதும். பாது காப்பு இலாகாவினர் ஆயிரக்கணக்கான பாரசூட் படையினரை அனுப்பி முற்றுகை செய்யச் சொல்லுவார்கள். ஆனால், இவர் இப்போது தன்னந்தனியாகவே வருகிறார். இதிலிருந்தே அவர் எவ்வளவு துணி வுள்ளவர் என்பதைத் தெரிந்துகொள். அவரிடம் துப்பாக்கி இருக்கும். சில வேளைகளில் அது கூட இல்லாமலேயே வருவார்! அவரைப் பின்பற்றித் தனியாக, அதுவும் நம் கோட்டைக்கு வருபவரைத் தாக்கலாமா என்று சிந்திக்காதே! மிகவும் தேர்ச்சி பெற்ற பத்து ஆட்களுடன் மலை யில் ஒளிந்து கொண்டு அவர் நெருங்கிய தும், மலைச் சரிவிலிருந்து மிஷின் துப் பாக்கியால் ஒரே நேரத்தில் அனைவரும் அவரைச் சுடவேண்டும்! சங்கர்லால் இன்றுடன் ஒழிந்தார் என்பது உறுதியாக வேண்டும்! மர்மத் தீவில் செய்த தவறை மீண்டும் செய்ய விரும்பவில்லை. துப் பாக்கி வேட்டுகள் கேட்டதும்தான் நான் புறப்படும் விமானம் புறப்படும்! மகிழ்ச் சியுடன் நான் புறப்படுவேன். சில நாட் களில் மீண்டும் நான் திரும்பி வருவேன். அப்போது நாம் வேறு இடத்துக்குப் போய் வேறு தொழிலைத் தொடங்கு வோம். இப்போது நமது ஆட்களுக்கு தேவையான பணத்தை இப்போதே கொடுத்து விட்டுப் போகிறேன்!" என்று சொல்லிப் பணப்பெட்டி ஒன்றை மேசை மீது எடுத்துப் போட்டார்.



**தமிழ்வாணன்**

அவன் பணப் பெட்டியை எடுத்துக் கொண்டான்.

"நீ போகலாம். ஒரு சிறு தவறுகூட நடக்கக்கூடாது" என்றார் ஷா.

அவன் மெல்லச் சிரித்தான்.

பாலைவனங்களில் வாழும் ஒரு வகைச் சுருள் பாம்பு சீறுவதைப்போல் இருந்தது அவன் மெல்லச் சிரித்தது.

ஷா கொஞ்சம்கூடத் தன் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை.

பங்களாவின் மறை பொருள் அறைக் குள் சென்று, இரும்புப் பெட்டியில் பாது காப்புடன் வைக்கப்பட்டிருந்த புரபஸரின் கண்டுபிடிப்பை, இரகசியக் கவரை எடுத் துப் பாதுகாப்புடன் கால்சட்டைப் பைக் குள் வைத்துக் கொண்டார். கோட்டு ஒன்றை அணிந்து கொண்டு கழுத்துப் பட்டையைச் சரிப்படுத்தியபடி வெளியில் வந்தார்.

அவருடைய பங்களாவில், மற்றொரு மறைபொருள் அறையில் வானொலித் தொலைபேசி அமைக்கப்பட்டிருந்தது. உலகத்தின் மாபெரும் ஒற்றர்கள் மட்டுமே வைத்துக் கொள்ளக் கூடிய வானொலித் தொலைபேசி அது. பல இலட்ச ரூபாய் செலவில் அதை ஷா அமைத்திருந்தார். அந்தத் தொலைபேசியின் உதவியுடன் உலகத்தின் எந்தப் பகுதிக்கு வேண்டு மானாலும் தொடர்பு கொள்ள முடியும். ஷாவின் தொடர்பு, கொடியவர்களுடன் கூடியதாகவே இருந்தது. ஆகையால், அந்தத் தொலைபேசி அவருக்கு மிகவும் பயன்பட்டது. அந்த வானொலித் தொலை பேசியின் உதவியுடன் எந்த அரசாங்கப் பிரிவினருடன் வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளாமல் இரகசிய இலாகாவுடன் தொடர்பு கொள்வது மிக எளிது.

அந்த அறையிலிருந்து கொஞ்சம் வயதான மனிதன் வெளிப்பட்டு ஷாவைத் தேடி ஓடினான்.

"என்ன ஆவுடைநாயகம்?" என்றார் ஷா மிகவும் ஆவலுடன்.

"சீன ஒற்றன் ஒருவன் தொடர்பு கொண்டு பேசினான். அவர்கள் அர சாங்கம் இந்த இரகசியத்தை வாங்க என்ன விலை வேண்டுமானாலும் கொடுக்க முன்னேற்பாடுடன் இருக்கிறது என்றான். உங்களை நேரில் கண்டு பேச விரும்புகிறான். எந்த நாட்டுடன் தொடர்பு கொண்டாலும் இந்த இரகசியத்தைப் பெற அந்த நாடுகள் முன்னேற்பாட்டுடன் இருக்கின்றன."

"சீன ஒற்றன் என்ன சொல்லுகிறான்?"

"ஹாங்காங்கில் உங்கள் வருகைக் காகக் காத்திருப்பதாகவும், தங்கமாக வேண்டுமானால் தங்கமாகவோ, டால ராகவேண்டுமானால் அமெரிக்க டால ராகவோ கொடுக்கமுடியும் என்கிறான். இரகசியக் கவர் ஒப்படைக்கப்பட்டதும் ஸ்விற்சர்லாந்து பாங்கில் பணத்தைக் கட்ட வேண்டுமானால் கட்டமுடியும். எல்லாம் ஒரு மணி நேரத்தில் முடிந்து விடும் என்கிறான்" என்றான் ஆவுடை நாயகம்.

"மற்ற நாடுகளைவிட இந்தக் கொடிய காரியங்களுக்கு சீனாதான் நிறையப் பணம் கொடுக்கும் என்பது என் முடிவு. ஆகையால், ஹாங்காங்கில் போய் விலையை பேசி வியாபாரத்தை முடித்துக் கொள்கிறேன்" என்றார் ஷா.

பிறகு அவர் மலர்ச்சோலையைத் தேடிச் சென்றபோது, அவள் ஆடைகளை மாற்றிக் கொண்டிருந்தாள்.

அரை நிர்வாணமாகக் காட்சியளித்த அவளைக் கண்டதும் ஒரு சில வினாடிகள் அவர் தடுமாறினார். அவளுடைய ஒயிலி லும் கட்டுடல் பேரழகியிலும் அவர் மணிக்கணக்கில் மயங்கிக் கிடந்தது உண்டு. இப்போது ஆபத்து நெருங்கி வரும் வேளையில் அவளுடன் காதல் செய்ய அவர் முன்னேற்பாடுடன் இல்லை.

"விரைந்து புறப்படு மலர்ச்சோலை. திரைப்படத்துக்கோ அல்லது விழாவிற்கோ புறப்படுவது போல் புறப்படுகிறாயே!" என்று கூச்சல் போட்டார் ஷா.

அவர் அவளிடம் இதுவரையில் இப் படி கூச்சல் போட்டதே இல்லை.

சங்கர்லால் வருகிறார் என்பதை உணர்ந்ததும் அவருடைய இரத்தக் கொதிப்பு மிகுதியாவதை உணர்ந்த அவள், "ஒரே நிமிடம் வந்துவிடுகிறேன்" என்றாள்.

அவர் அங்கேயே நின்றபடி சினத்து டன் அவள் அழகைச் சுவைத்துக் கொண்டிருந்தார்.

அவள் கைப்பெட்டியுடன் புறப்பட்ட போது அவர் அதைப் பிடுங்கிக் கொண் டார். "விரைந்து வா" என்றார்.

ஷா விரைந்து நடந்தபோது, மலர்ச் சோலை அவருடன் ஓட வேண்டியிருந்தது.

வெளியிலிருந்த ஜீப்பில் அவரும் மலர்ச் சோலையும் ஏறி உட்கார்ந்து காரோட்டி யிடம், "மலையடி ஓரத்திலேயே ஜீப்பைச் செலுத்து. ஜீப் போவது ஒருவர் கண்ணி லும் படக்கூடாது!" என்றார், அவர் கடுமையான குரலில்.

ஜீப்பை ஓட்டிய காரோட்டி, ஒரு சர்தார்ஜி. அவர் தலைப்பாகையைச் சரிபடுத்திக்கொண்டு ஜீப்பை மரங்களுக்கு இடையே ஓட்டினார்.

பெரும்பாலும் மரங்களுக்கும் செடிக ளுக்கும் இடையே ஜீப் ஓடியதால், மலைச் சரிவிலிருந்தோ மலை உச்சியிலிருந்தோ பார்த்தால் ஜீப் வருவதே தெரியாது. இரண் டாவதாக, சங்கர்லால் வந்த பக்கம் ஜீப் போகாமல், வேறுபக்கமாக அது ஓடியது.

விமானம் நின்ற இடத்தை நெருங்கிய தும் ஷா ஜீப்பை நிறுத்தும்படி சொன்னார். பெரிய நெருங்கி வளர்ந்த ஒரு மரத்தின் நிழலில் ஜீப் நின்றது. **தொடரும்...**

## இரத்தத்திற்கு இரத்தம் என்று கணக்குத் தீர்க்கப்பட்ட

# பூலான் தேவியின் முடிவு!

**இது** ஒரு பெண்ணின் வலி நிறைந்த 38 வருட வாழ்க்கை!

பத்து வயதில் திருமணம்... பதினொரு வயதில் கணவனின் சித்திரவதை... பதின் மூன்று வயதில் கொள்ளைக்காரி... பதினேழு வயதுக்குள் மூன்று பேருக்கு மனைவியாக வாழ்க்கை... பதினெட்டு வயதில் துப்பாக்கி யால் சுட்டு, இருபது பேரை பழிக்குப் பழி.. இருபதாவது வயதில் துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு சரண்டர்.

அடுத்து வந்த பதினோரு வருடங்கள் சிறை வாசத்திலேயே கழித்து பூலான்தேவி, கையில் நயாபைசா இல்லாமல் நிராதரவாக டெல்லித் தெருக்களில் நடமாடியது சில வரு டங்கள்... வீட்டுப் பணிப்பெண்ணாக வேலை பார்த்து வயிற்றைக் கழுவிய பூலான்தேவிக்கு, அரசியல் பிரவேசம் கிடைத்ததுமே வாழ்க்கை மளமளவென மாறியது.

முப்பத்து மூன்று வயதில் சமாஜ்வாரி கட்சி சார்பாக உத்தரப் பிரதேச மாநிலத்தின் மிர்சாபூர் நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு எம்.பி. ஆனார். இந்திய அரசால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்படும் அளவுக்கு செல்வாக்கோடு விளங்கினார். மறுபடி முப்பத் தாறாவது வயதில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கைப்பற்றிய பூலான்தேவி, உள்ளுக்குள் தொடர்ந்து மரண பயத்தில் நடுங்கிக் கொண்டே இருந்தார்.

"செக்கச்சிவந்த கண்களுடன், தலையில் கட்டிய துணியுடன் சம்பல் பள்ளத்தாக்கில் கொள்ளைக்காரியாக வலம் வந்த காலத்தில் சம்பாதித்துக்கொண்ட விரோதம், தன்னை டெல்லி வரை விடாமல் துரத்துகிறது என்பதை பூலான்தேவி நன்றாகவே அறிந்திருந்தார். அவரால் படுகொலை செய்யப்பட்ட தாக்கூர் இனத்தவரின் குடும்பத்தினர் சபதம் போட்டு நினைத்ததை முடித்திருக்கிறார்கள்" என்று அரசியல் வட்டாரத்தில் சொல்லிக் கொண்டி ருக்க...

"பூலான்தேவியின் சொத்துக்கு ஆசைப் பட்டு அவரது குடும்ப உறுப்பினர்களில் சிலரே கூட திட்டமிட்டு இந்தப் பாதகத்தை நிறை வேற்றியிருக்கக் கூடும்" என்று சொல்லத் துவங்கியிருக்கிறது பொலிஸ்.

உத்தரப் பிரதேசத்தின் பேமாய் கிராமத்தில் பிறந்து காலத்தின் கட்டாயத்தால் கொள்ளைக் காரியாக மாறிப் போன பூலான்தேவி என்ற கரெக்டரை வெளியுலகத்துக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர் கல்யாண் முகர்ஜி.

இந்தப் பத்திரிகையாளர், பூலான்தேவி பற்றிக் கேள்விப்பட்டு, உயிரைப் பணயம் வைத் துத் தேடிப்போனார்.

துப்பாக்கிச் சூழ கொள்ளைக்காரத் தோழர்கள் நிற்க, கொஞ்சம் கொஞ்சமாக இளகிப் போய், தனது கடந்த காலத்தை கல்யாண் முகர்ஜியிடம் அப்போது பகிர்ந்து கொண்டார் பூலான்தேவி.

தாழ்த்தப்பட்ட 'மல்லா' (மீனவ) வகுப்பில் பிறந்த தன்னையும் தன் சுற்றத்தாரையும் உயர் சாதிக்காரர்களான தாக்கூர் வம்சத்தினர் எப்படி யெல்லாம் அவமானப்படுத்தினார்கள் என்பதை யும், கதறக் கதற பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி சித்திரவதை செய்தார்கள். என்பதையும் சொல்லிக் கொண்டே வந்தபோது, பூலான்தேவி யின் கண்களில் கண்ணீர் வடிந்ததாம்.

தாக்கூர் வம்சத்தினரைப் பழிவாங்கத்தான் துப்பாக்கியைக் கையில் எடுத்ததாகவும் உண்மை யில் இந்தக் கொடூர வாழ்க்கை தான் விரும்பி ஏற்றது அல்ல என்றும், வாய்ப்புக் கிடைத்தால் திருந்தி வாழத் தயார் என்றும் பூலான் சொன்ன போது, கல்யாண் முகர்ஜி கலங்கிப் போய்விட் டார்.

பூலானின் சோகக்கதையைச் செய்தியாக வெளியிட்டதோடு நிற்கவில்லை கல்யாண் முகர்ஜி. சரணடைய விருப்பம் என்று தன்னிடம் பூலான் தெரிவித்ததை, அன்றைய மத்தியப் பிரதேச முதல்வர் அர்ஜுன்சிங்கிடம் சொன்ன தும் கல்யாண் முகர்ஜிதான்.

அதற்குச் சில ஆண்டுகள் முன்புதான் இந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ஜெயப்பிரகாஷ் நாராயண் முன்னிலையில் சுமார் இரண்டாயிரம் பேரைக் கொண்ட கொள்ளைக் காரன் மலிகான்சிங் சரணடைந்தான். இதையே மேற்கோள்காட்டி அர்ஜுன்சிங்கிடம் பேசி, பூலான் தேவி சரணடைவதற்கான ஏற்பாடு களைச் செய்துள்ளார் கல்யாண் முகர்ஜி.

கல்யாண் முகர்ஜியின் இந்த முயற்சிகள் வெளியுலகுக்கு அதிகம் தெரியாது. ஆனால், எம்.பி. ஆகி பத்திரிகையாளர்களை அடிக்கடி சந்திக்கும் போதெல்லாம், "என் வாழ்க்கையை மாற்றி அமைத்தவர் கல்யாண்ஜிதான்" என்று உருக்கமாக சொல்லி வந்தார் பூலான்தேவி.

பூலான் தேவி சரணடைந்து குவாலியர் சிறையில் அடைப்பட்டிருந்த சமயத்தில், அவரைப் பற்றிக் கேள்விப்பட்டு பிரான்ஸிலிருந்து வந்து பேட்டி எடுத்தார் ஒரு எழுத்தாளர். பூலான் தேவியுடன் பலமுறை சந்திப்பு நிகழ்த்தி, அந்த பிரெஞ்சு எழுத்தாளர் விரிவாக ஒரு புத்தகம் எழுதினார்.

ஜெயிலில் இருந்து விடுதலையாகி வந்த போது வரவேற்கவோ கைகொடுக்கவோ முன் வராத அவரது உறவினர்கள், வீடும் பணமும் வந்த பிறகு ஓடிவந்து உறவு கொண்டாட ஆரம்பித்தார்கள். சொந்தங்கள் ஒவ்வொன்றாக தேடி வர ஆரம்பித்தன. அப்படி வந்து சேர்ந்த வர்களில் ஒருவர்தான், பூலான்தேவியின் கணவர் உம்மேத்சிங். சொந்த கிராமத்தில் வசித்து வந்த தங்கையும் தாயும் வந்தபோது அவர்களை யும் பூலான் அரவணைத்துக் கொண்டார்.

இளம் வயதில் பலமுறை காட்டுமிராண்டித் தனமாக பாலியல் வல்லுறவுக்குட்டுத்தப்பட்ட தாலும் வயிற்றில் துப்பாக்கிக் கட்டையால் அடிவாங்கியதாலும் பூலான்தேவிக்குக் குழந்தை பாக்கியம் கிடையாது என மருத்துவர்கள் கூறி விட்டார்களாம். எனவே, தன் தங்கை குழந்தை களையே தன் குழந்தைகளாக வளர்த்து வந்தார்.. கடைசி வரை வாழ்க்கையின் எந்த சுவையும் முழுமையாக அறியாமலே இறந்து போய்விட்டார்" என்று கூறி, கண்ணீர் வடிக் கிறார் ஃப்ரான்சிஸ் மேதாஸ். (கேரளாவைச் சேர்ந்த இவர், பூலான்தேவி அரசியலுக்கு வந்த காலத்திலிருந்தே அவருடன் இருப்பவர். பூலான் தேவியின் முதன்மை உதவியாளர்.)

"சரணடைந்தால் ஒரே வருடத்தில் வெளியே விட்டு விடுவோம் என்று அன்றைய அரசாங்கம் சொன்னது. ஆனால், பதினொரு வருடங்கள் உள்ளே வைத்திருந்தார்கள்.

"தற்போதைய உ.பி. முதல்வர், தாக்கூர் இனத்தைச் சேர்ந்தவர். இவருடைய இனத் தினர் நடத்தும் ஷத்திரிய மகாசபை பூலான்தேவி மீதான விரோதத்தை மறக்கவில்லை. 'பூலான் தேவியின் ரத்தம் வேண்டும்' என்று கடுமையாக பிரசாரம் செய்து வந்தார்கள். இந்தக் கொலை யில் இவர்களுக்கும் பங்கு இருக்கலாம் என்று சந்தேகப்படுகிறோம்" என்றும் நம்மிடம் குமுறி



னார் ஃப்ரான்சிஸ் மேரிதாஸ்.

பூலானைத் தீர்த்துக்கட்ட சதி நடப்பதாக அவரது ஆதரவாளர்கள் சுப்ரீம் கோர்ட் வரை புகார் செய்தார்கள். அவருக்கு பாதுகாப்பை பலப்படுத்தச் சொல்லி சுப்ரீம் கோர்ட் நோட்டீஸ் கொடுத்தது. 'அப்படியும் பொலிஸ் அலட்சிய மாக இருந்ததால்தான் இந்த படுகொலை நடந்து விட்டது' என்று கலங்குகிறார்கள் அவரது உறவினர்கள்.

தன் உயிரைக் காப்பற்றிக் கொள்வதற்காக ஒரு துப்பாக்கி லைசென்ஸ் கேட்டு பூலன் ஏகத்துக்கும் போராடியதாக சொல்கிறார்கள், அவரது உறவினர்கள். அப்போது உள்துறை அமைச்சராக இருந்த இந்திரஜித் குப்தா அதற்கு அனுமதி வழங்கவில்லை. பூலான் நின்று வென்ற தொகுதியான மிர்சாபூர் மாஜிஸ்திரேட்டிடம் கேட்டபோது, 'உங்கள் பழைய ரெக்கார்டுகள் சரியில்லை' என்று சொல்லி மறுத்துவிட்டார் மாஜிஸ்திரேட். உ.பி. அரசுக்கே நேரடியாக மனு செய்தபோதும் துப்பாக்கி லைசென்ஸ் தரப்படவில்லை.

"இரண்டு தடவை எம்.பி-யாக ஜெயித்த வர்.. ஏராளமான எதிரிகளை சம்பாதித்துக் கொண்டவர்.. ஒரு பெண்மணி தன் உயிர் பாதுகாப்புக்காக துப்பாக்கி லைசென்ஸ் கேட்டு போராடியும் தரவில்லை என்றால் அதற்குக் காரணம் இந்த சமுதாயத்தைப் பிடித்து ஆட்டும் ஆணாதிக்கம்தான்" என்று வேதனையுடன் குமுறுகிறார், பூலான்தேவியின் ஆன்மீக குரு வான தர்ம வீர்யோ.

புத்த மதத்தில் ஏற்பட்ட பற்று காரணமாக அந்த மதத்தில் சேர்ந்தார் பூலான். இவருக்கு வழிகாட்டும் குருவாக அமைந்தவர்தான் தர்ம வீர்யோ. பீகார் மாநிலத்தைச் சேர்ந்த இவர், ராஜ்யசபா எம்.பி.. கிர்பா ஷரன் புத்த மிஷன் தலைவராகவும் இருக்கிறார். பூலான்தேவி சுட்டுக் கொல்லப்பட்ட சில நிமிடங்களிலேயே டெல்லி ராம்மனோகர் லோகியா ஆஸ்பத் திரிக்கு வந்து சேர்ந்த தர்ம வீர்யோ, அவரது உடலைப் பார்த்து கலங்கி நின்று விட்டார்.

"பூலானுக்கு பூப்போல மனசு. இரக்கமின்றி கொள்ளையும் கொலையும் நடத்தினாலும்கூட அவரால் பாதிக்கப்பட்டவர்கள் கொடியவர்கள் மட்டும்தான். எளியவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எப்போதும் அவ ருக்கு உண்டு. அரசியலில் சேர்ந்தால் பாதுகாப்பு கிடைக்கும்... நினைத்தபடி சேவையும் செய்ய லாம் என்று முடிவெடுத்து ராம்விலாஸ் பாஸ்வன் உட்பட பலரிடமும் போய் வாய்ப்புக் கேட்டார். முலாயம் சிங்க யாதவ் ஒருவர் தான் தைரியமாக முன்வந்து, தனது சமாஜ்வாதி கட்சியில் சேர்த் துக் கொண்டு அவரைத் தேர்தலில் நிறுத்தினார்.

பூலான்தேவி தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான். ஆனால், அவர் போட்டியிட்ட மிர்சாபூர் ரிசர்வ் தொகுதி அல்ல. இருந்தாலும் எல்லா சாதிக்காரர்களும் அவர்மீது நம்பிக்கை வைத்து இரண்டு முறை ஜெயிக்க வைத் திருக்கிறார்கள். அம்பேத்கரின் கொள்கைளை வைத்து அவர் செய்த பிரசாரம் மக்களை ரொம்பவே கவர்ந்தது. அதனால்தான் அவரது ஜென்ம எதிரிகளான தாக்கூர் சமுதாயத்தைச் சேர்ந்த வீரேந்திர சிங் (பொலிஸ் பார்வை இவர்மீதும் திரும்பியிருக்கிறது) எதிர்த்துப் போட்டியிட்டபோதும், பூலான்தேவிக்கு மக்கள் வெற்றியை கொடுத்தார்கள்" என்று நினைவு கூர்ந்தார் தர்ம வீர்யோ.

பூலான்தேவி வாழ்க்கையை மையமாக கொண்டு சேகர் கபூர் 'பண்டிட் குயின்' படம் எடுத்தார் அந்தப் படத்தில் தன் கரெக்டர் நிர் வாணமாகக் காட்டப்படுவதாக கேள்விப்பட்டு கொந்தளிப்பில் ஆழ்ந்து போனாராம் பூலான் தேவி. "அந்தப் படம் மக்கள் பார்வைக்கு வரக் கூடாது" என்று சொல்லி வழக்குப் போட ஆயத்தமானார். ஏற்கெனவே சென்ஸார் பிரச் சனையில் சிக்கி, படத்தை வெளிக்கொண்டுவர முடியுமா என்ற திணறலில் இருந்த சேகர் கபூர், உடனடியாக பூலான்தேவியைச் சமாதானப் படுத்த விரும்பியிருக்கிறார். அப்போது அவர் முதலில் சந்தித்தது குரு தர்ம வீர்யோவைதான்.

"சேகர் கபூர் படமெடுக்க பட்ட சிரமங் களைக் கேள்விப்பட்டு பூலான்தேவி மனம் இளகி விட்டார். சமாதானத்துக்கு வந்தார். சேகர் கபூரிடமிருந்து இருபது லட்ச ரூபாய் வாங்கிக் கொடுத்தேன்.. அந்தப் பணம் பூலான்தேவிக்கு பெரிய உதவியாக இருந்தது..." என்கிறார் புத்த பிட்சு தர்ம வீர்யோ.

## எஸ்.டி.எஸ். தொடர் 63

# தமிழரசுக் கட்சி வளர்ச்சியில் ஏற்பட்ட இடையூறுகள்!

### இரா.பத்மநாதன்

கொழும்பு மாநகரில் தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பணக்கூட்டம் 1949ம் ஆண்டு டிசம்பர் 18ம் திகதியன்று நடைபெறுவதற்கு முன்னர் யாழ் குடாநாட்டின் பல்வேறு ஊர்களிலும் ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன. அவ்வப்போது பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன. இருப்பினும் இக்கூட்டங்களெல்லாம் சொல்லடியும், பொல்லடியும், கல்லடியும் தான் பரிசாகக் கிடைத்தன.

கட்சியின் ஆரம்பகாலம் உற்சாக மூட்டக்கூடியதாக அமைந்திருக்வில்லை. இருப்பினும் தலைவர்கள் சோர்வடையவில்லை. தொடர்ந்து மேற்கொண்ட முயற்சிகள் ஏறத்தாழ எட்டாண்டுகளுக்குப்பின்னரே உரியபலனை அளிக்கத் தொடங்கியது.

இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களை எதுவிதமான உரிமையுமற்றவர்களாக ஆக்கிவிடவேண்டும் என்ற பேரினவாத எண்ணங்கள் சிங்களத் தலைவர்கள் பலரிடம் இருந்தமையினால், அந்த எண்ணத்தை அடிப்படையாக வைத்துக்



கொண்டே சட்டமூலங்கள் தயாரிக்கப்பட்டன. குடியுரிமை, வாக்குரிமை போன்ற கொடிய சட்டங்களால் மொத்தத் தமிழ் பேசும் மக்களும் பாதிப்புக்குள்ளாக்கப்படுவதற்கேற்ற நடவடிக்கைகள், வாழைப்பழத்தில் ஊசி ஏற்றப்படுவதுபோல் எவ்வாறு செயற்படுத்தப்பட்டன என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தேன். தந்தை செல்வா உரையிலிருந்து இவ்வுண்மைகளைத் தெரிந்திருப்பீர்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 418து முரசின் 2ம் பக்கத்தில் கனடா நாட்டிலிருந்து ஒரு வாசகர் எழுதிய கடிதத்தை அப்படியே பிரசுரித்திருக்கிறோம்.

மலைநாட்டு இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையைப் பறித்த பாராளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை வெட்டிக்குறைக்க எடுத்த முயற்சி பற்றிக் கூறியிருந்தேன். இச்சட்டத்துக்கு சார்பாக அரசாங்கத்துடன் இணைந்து திரு.பொன்னம்பலம் வாக்களித்த செயலை கட்டுரையில் குறிப்பிட்டிருந்ததைக் கண்டு கனடா வாசகர் குமுறுகிறார்.

"சோல்பரி விசாரணை சபைமுன்பாக திரு.பொன்னம்பலம் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையை வைத்திருந்தால் அவர்கள் கொடுத்திருப்பார்களா?" என்றும் வினா எழுப்பியிருக்கிறார்.

அந்தக்கால கட்டத்தில் திரு.செல்வநாயகம் அவர்களோ வேறு எவரோ தனித்தமிழ் நாடு கோரவில்லை. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தனித்தனி அலகுகள் கொண்ட இரு அமைப்புகளும் மத்தியில், இருபிராந்திய அவைகளையும் ஒன்றிணைக்கும் சமஷ்டி (கூட்டாட்சி) முறைமையே பின்னர் கோரிக்கையாக விடுத்தனர்.

அன்று தந்தை செல்வா கூறியது போல், தனிச் சிங்களமே நாட்டின் ஆட்சிமொழி என்று களனி மாநாட்டில் ஐக்கியதேசியக் கட்சி கொண்டு வந்த தீர்மானமே தமிழ்பேசும் மக்களின் கண்களைத் திறந்து விட்டன. அதனைத் தொடர்ந்தே அதுவரை உதிரிகளாகவும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளாகவும் செயற்பட்ட பல தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் தவறுகளை உணர்ந்து, தந்தை செல்வா அவர்களின் பாதையில் செல்லத் திட சங்கற்பம் பூண்டனர்- இது வரலாறு.

திரு.பொன்னம்பலம் அவர்கள், தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவத்தை சரி அரைவாசியாகக் குறைக்க ஒத்துழைக்காதிருந்தால் (எண்ணிக்கையில் சிங்களப் பிரதிநிதிகளை விடக்குறைவாக இருந்தாலும்) 'இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இச்சட்டங்களை உருவாக்குகிறார்களே!' என்ற சர்வதேச அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கும்.

இது தவிர இந்தியத் தலைவர்கள்கூட இலங்கை தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமைத் தன்மையை, தன்னலமற்ற மேன்மையைப் பாராட்டியிருப்பார்கள்.

அரசியல் ஞானியும் பேரறிஞரும் இந்தியாவின் மகாதேசாதிபதியாகவும் விளங்கிய ராஜாஜி அவர்களை, சென்னை கீழ்ப் பாக்கத்திலுள்ள அவருடைய இல்லத்தில் 1958ம் ஆண்டில் சந்தித்து உரையாடக் கிடைத்த சந்தர்ப்பத்தில், "உங்க யாழ்ப்பாணத்தவங்க நல்ல அறிவாளிகள் தான்; இருப்பினும் இங்கிருந்து போய் உங்க நாட்டை சொர்க்க புரியாக மாற்ற உழைச்சாங்களே, அவங்களை ஏன் ஹரிஜனங்க மாதிரி நடத்தணும்?" என்றொரு வினாவை எழுப்பினார்.

இத்தகைய எண்ணம் ராஜாஜி அவர்களிடம் மட்டுமல்ல, பெரும்பாலான இந்தியத் தலைவர்களிடம்-திரு.பொன்னம்பலம் அவர்களுடைய செய்கையால் தான் வேரூன்றியது.

ஏற்கனவே இத்தொடரில் தந்தை செல்வா அவர்களின் கருத்துக்களை வெளியிட்டிருந்தேன். இப்பொழுதாவது கனடாவிலிருந்து கடிதம் எழுதியுள்ள திரு.ஜி.எஸ்.செல்லத்துரை அவர்கள் எனது கருத்தை ஏற்றுக் கொண்டிருப்பார் என நம்புகிறேன்.

இதே கருத்தினை முரசு 418லேயே தெரிவித்திருப்பதாகக் கூறியிருந்தேன். சிவாஜி கணேசன் அவர்கள் பற்றிய கட்டுரையை அவ்விதழில் பிரசுரிக்க வேண்டியிருந்தமையினால் அது இடம் பெற முடியாமற் போய்விட்டது. தயவு செய்து மன்னியுங்கள்.

தமிழரசுக் கட்சி தொடங்கப்பட்ட போது அதன் பாதை ரோஜா மலர்ப் பாதையாக இருக்கவில்லை. கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுடான பாதையாகவே இருந்தது. தலைவர்களின் தியாக சிந்தையும் விடா முயற்சியும் மிகக் குறுகிய தொகைத் தொண்டர்களின் சீரிய உழைப்பினால் ஆமை வேகத்தில் சென்று ஆலவிருட்சமாக வளர ஆண்டுகள் பல சென்றது. திரு.பொன்னம்பலம் அவர்களுக்கு ஏற்கனவே இருந்த செல்வாக்கும் ஏனைய பல சிறப்புகளும் அவருக்கென ஒரு பெரும் கூட்டத்தை உருவாக்கியிருந்தது. தர்க்க ரீதியாக- சட்ட நுணுக்கம் தெரிந்திருந்தமையினால்-மேடைகளில் அவர் தரும் விளக்கங்கள் மக்களைக் கவர்ந்தன. இதனை ஆதாரமாக வைத்துக் கொண்டு, தமிழரசுக் கட்சியை மேலே எழவொட்டாமல் முளையிலேயே கிள்ளி விட முயற்சித்த வண்ணமே இருந்தார்.

இருப்பினும் திருகோணமலை வரை பரவியிருந்த பொன்னம்பலம் அவர்களின் செல்வாக்கு அதற்கு மேல் ஒரு சாண் கூட நகர முடியாமற் போய்விட்டது.

தந்தை செல்வாவின் தீர்க்க தரிசனக் கண்களுக்கு இளைஞர் இராசதுரையின் தோற்றம் நம்பிக்கை ஊட்டியது. சுதந்திரன் பத்திரிகையின் துணை ஆசிரியர்



பதவி வகித்த அவரை யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே நடைபெற்ற தமிழரசுக் கட்சி பிரசாரக் கூட்டங்களுக்கு அழைத்து உரையாற்ற ஏற்பாடு செய்தார். இராசதுரை அவர்களின் ஆற்றொழுக்குப் போன்ற தமிழ் பேச்சுக்களைக் கேட்ட மக்கள் மெய்மறந்து இரசித்தனர். மிகக் குறுகிய காலத்துக்குள் 'இராசதுரை பேசுகிறார்' என்றால் யாழ் குடாநாட்டின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் மக்கள்-பெரும்பாலும் இளைஞர்கள் சைக்கிள்களிலே கூடச் செல்வார்கள். இதன் பயனாக அவருக்கு 'சொல்லின் செல்வர் செல்லையா இராசதுரை' என்ற சிறப்புப் பெயர் சூட்டப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் பாராளுமன்றத்துக்கான இரண்டாவது பொதுத் தேர்தலுக்கு அடிகோலப்பட்டது.

இத்தனைக்கும் மத்தியில் தமிழரசுக் கட்சியை தமிழ்பேசும் மக்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் விரிவுபடுத்த வேண்டிய நிலை உருவானது. மட்டக்களப்பு மாநிலத்தில் இப்பணியினை நிறைவேற்றத் தகுதியான ஒரேயொருவர் திரு.செல்லையா இராச துரை அவர்களே' என்ற ஏகோபித்த அபிப்பிராயம் தலைவர்கள் மத்தியில் எழுந்தது.

மட்டக்களப்பைச் சேர்ந்த நியாய துரந்தரர் உலகசேகரம் (டாக்டர் இ.எம்.வி நாகநாதன் அவர்களின் மைத்துனர்) திரு.இ.எல்.தம்பிமுத்து (பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொலை செய்யப்பட்ட திரு.சாம் தம்பிமுத்து அவர்களின் தந்தை) மற்றும் சில பிரமுகர்களையும் தந்தை செல்வா, திரு.வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன் போன்றவர்கள் அணுகி தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி பற்றி உரையாடினர். மேற்குறிப்பிட்டுள்ள ஒரு சிலரைத் தவிர தமிழரசுக் கட்சிக்கு ஆதரவு தர எவரும் முன்வரவில்லை.

யாழ்ப்பாணத்தவர்கள்மீது மட்டக்களப்பாருக்கு இயல்பாகவே ஒரு வெறுப்பு இருந்தது. இதற்குப் பலகாரணங்கள் இருந்தன. அவற்றில் ஒரு சிலவற்றையாவது இங்கு குறிப்பிடுவது தவறல்ல என்றே கருதுகிறேன்.

அரச அலுவலகங்களில் உயர் பதவி வகிக்கும் பலர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களே. மட்டக்களப்பாருக்கு 'காட்டுத் துண்டும் மாட்டுக் கண்டும் இருக்கும் போது, படிப்பு எதற்கு' என்ற மனப்பான்மையே இருந்து வந்தமையினால் கல்வி கற்றலை ஒரு பொருட்டாக அவர்கள் கருதவில்லை என்ற கருத்தைப் பல உண்மைகளை கட்டுரையின் முற்பகுதிகளில் தெரிவித்திருந்தேன். இதுதவிர வியாபாரம், வர்த்தகம் ஆகிய துறைகளிலும் அவர்களுக்கு நாட்டம் இருந்ததில்லை.

இதன்பயனாக, அரச அலு வலகங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் கணிசமான தொகை யாழ்ப்பாணத் தமிழர்களே ஆக்கிரமித்திருந்தனர். அடுத்து இந்தியாவிலிருந்து வந்து கடமைகளை நடத்தியவர்களையும் காத்தான்குடி முஸ்லிம்களையும் குறிப்பிடலாம்.

தொழில் ரீதியாகவும் வியாபார ரீதியாகவும் மட்டக்களப்பில் குடியேறிய யாழ்ப்பாணத்தவர் பெரும்பாலும் மட்டக்களப்பு மண்ணோடு மாற்றாந்தாய் மனப்பான்மையோடுதான் வாழத்தலைப்பட்டனர்.

(வளரும்)

# வாரம் ஒரு வார்த்தை!

### தென்கச்சி - கோ. சுவாமிநாதன்

## 28. ஞாபகசக்தி

நேற்று வரைக்கும் நம்ம கூடவே இருந்திருப்பான். இன்னைக்கு அவனுக்கு திடீர்ன்னு பணம்-பதவி-புகழ்இது மூணுலே ஏதாவது ஒண்ணு கிடைச்சிருக்கும்.

நாளைக்கு அவன் முன்னாடி போயி நில்லுங்க! "யார் நீங்க! உங்களை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே!" ன்னு சொல்லுவான். பொதுவா பலபேர்கிட்டே இருக்கிற இயல்பு இது.

ஞாபக மறதியையும் பெரிய மனுஷனுக்கு ஒரு அடையாளமா சொல்றது வழக்கமாப் போச்சு!

சில பேர்கிட்டே அது இயல்பாவே இருக்கும். அதை நாம குறையா சொல்றதும் தப்பு. அபாரமான ஞாபக சக்தியுள்ள அறிஞர்களும் உண்டு. கவிஞர்களும் உண்டு.

கவிஞர் பைரன் இருந்தாருல்லே! எவ்வளவோ கவிதைகள் எழுதினார். அதுலே எதை வேணும்னாலும், எந்த சமயத்துலே கேட்டாலும் ஒரு சின்ன தவறு கூட இல்லாமே ஒப்பிச்சுடுவாராம்.

ஆனா... வால்டர் ஸ்காட்-ங்கற கவிஞர் அதற்கு நேர்விரோதம். ஒரு சமயம், பைரன் எழுதின கவிதைன்னு நினைச்சிக்கிட்டு அவரோட சொந்த கவிதையையே ரொம்ப புகழ்ந்து பாராட்டி பேசிக்கிட்டிருந்தாராம். அந்த அளவுக்கு ஞாபக மறதி!

அமெரிக்க ஜனாதிபதியா இருந்தாரே தியோடர் ரூஸ்வெல்ட். அவருக்கு ஞாபக சக்தி ரொம்பவும் அதிகம். பலபேரை சந்திக்கணும்-பேசணும்ன்னு ஆர்வம் உடையவர் அவர். அவரு யாரை சந்திச்சாலும் சரி.. அவரோட பாக்கவாக்கம் அடையாளம் இதையெல்லாம் நல்லா கவனிச்சி மனசுலே பதிய வச்சுக்குவாராம். இது அரசியல்லே அவருக்கு ரொம்ப உதவியா இருந்திருக்கு. ரெண்டாவது தடவை அவரு யாரையாவது சந்திக்கிறப்போ... ரொம்ப வேண்டியப்பட்டவரைக் கூப்பிடறது மாதிரி பேர் சொல்லி கூப்பிடுவாராம். கூப்பிடப்பட்டவங்களுக்கு உச்சி குளிர்ந்து போயிடும்.



ஒரு சமயம் ஜப்பானிய பாங்க் அதிபர் ஒருத்தரைப் பார்த்திருக்கார். 15 வருஷத்துக்கு முன்னாடி அவங்க பேசிக்கிட்டிருந்த விஷயத்தை தொடர்ந்து பேசினாராம் ரூஸ்வெல்ட். அதிபர் அசந்து போயிட்டாராம்.

அவருக்கு எப்படி அந்த ஞாபக சக்தி வந்தது? அவரு மனசை ஒரு நிலைப்படுத்தறதுக்கு நல்லா பழகியிருந்தார். ஒரு தடவை பிரேஸிலுக்குப் போயிருந்தார். ஒரு மரத்தடியிலே உக்காந்து இப்சன் எழுதின 'ரோம் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி'ங்கற நூலை படிச்சிக்கிட்டிருந்தார். அதுலேயே லயிச்சிப் போயிட்டார். கொஞ்சநேரத்துலே மழை பெய்ய ஆரம்பிச்சுட்டுது. அதுகூட தெரியாமே இவரு சொட்டச் சொட்ட நனைச்சிக்கிடே படிச்சிக்கிட்டிருந்தாராம். மனசை அந்த அளவுக்கு ஒரு முகப்படுத்தக் கூடியவர் அவர். அதுதான் அவரது ஞாபக சக்திக்குக் காரணம்.

சர் பிரான்சிஸ் பேகன் எப்படி தெரியுமா? தன்னுடைய பிரபலமான புஸ் தகங்கள்லே ஒண்ணை ஞாபகத்துலே இருந்து சொல்லியே எழுத வச்சாராம்.

நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் இருந்தாரே! அவருக்கு மறதி அதிகம்! கர்லைல் ராபின்ஸன்-என்கிறவர் அவரு கிட்டே அந்தரங் காரியதரிசியா ஏழு வருஷ காலம் வேலை பார்த்தார். எப்பவும் சார்லி சாப்ளின் கூடவே இருந்தவர் அவர். அப்படி இருந்தும் அவரோட முழுப்பெயரும் கடைசியிலேயே சார்லி சாப்ளினுக்கு ஞாபகம் இல்லையாம்.

எது எப்படி இருந்தாலும் நம்மைப் பொறுத்தவரைக்கும் நாம ஞாபக சக்தியை வளர்த்துக்கறதுதான் நல்லது. மனசை ஒரு முகப்படுத்தப் பாகிக்கறதுதான் அதுக்கு சிறந்த வழி.

(வார்த்தைகள் தொடரும்)

ஸ்போர்ட்ஸ்

# கோப்பையைக் கோட்டை விடுவதில் சாதனை

இலங்கையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்து முடிந்த முத்தரப்பு கிரிக்கெட் தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இந்தியா கோப்பையை இலங்கையிடம் பறிகொடுத்துள்ளது.

இலங்கை, இந்தியா, நியூஸிலாந்து அணிகள் பங்குபற்றிய இந்த முத்தரப்புத் தொடரில் 9 லீக் போட்டிகள் நடந்தன. இதில் இலங்கை அணி நியூஸிலாந்துடனான 3 போட்டிகளிலும் இந்தியாவுடனான ஒரு போட்டியிலும் வென்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இந்திய அணி இலங்கையுடனான 2 போட்டிகளிலும் நியூஸிலாந்துடனான ஒரு போட்டியிலும் வென்று இறுதிப் போட்டியில் இலங்கையுடன் விளையாடத் தகுதிபெற்றது.

இந்தியாவுடனான போட்டிகள் இரண்டில் மட்டுமே வெற்றி பெற்ற நியூஸிலாந்து இறுதிப்போட்டிக்குத் தெரிவாகவில்லை.

இறுதிப் போட்டியில் இந்தியாவை 121 ஓட்டங்களால் தோற்கடித்து கோப்பையைச் சுவீகரித்தது இலங்கை.

இந்தப் போட்டியுடன் இறுதிப்போட்டி வரை வந்து இந்தியா 8 தடவைகள் கோப்பையைக் கோட்டை விட்டுள்ளது. இந்தியாவின் கைக்கு எட்டி, வாய்க்கு எட்டாமல் போன கோப்பைகள் பற்றிய விவரம் வருமாறு:

| போட்டி நடந்த நாள் | தொடரில் பங்கேற்ற அணிகள் | இறுதிப் போட்டி | முடிவு |
|---|---|---|---|
| ஏப்ரல் 04, 1999 (பெப்ஸி கோப்பை) | இந்தியா, பாகிஸ்தான், இலங்கை (இந்தியாவில் நடந்தது) | இந்தியா-பாகிஸ்தான் | பாகிஸ்தான் சாம்பியன் |
| ஏப்ரல் 16, 1994 (கொக்கோ கோலா கோப்பை) | இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து (ஷார்ஜாவில் நடந்தது) | இந்தியா-பாகிஸ்தான் | பாகிஸ்தான் சாம்பியன் |
| செப்டம்பர் 08, 1999 (கொக்கோ கோலா கோப்பை) | இந்தியா, ஸிம்பாப்வே, மே.இ.தீவுகள் (சிங்கப்பூரில் நடந்தது) | இந்தியா-மே.இ.தீவுகள் | மே.இ.தீவுகள் சாம்பியன் |
| ஒக்டோபர் 03, 1999 (எல்.ஜி.கோப்பை) | இந்தியா, தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே, கென்யா (கென்யாவில் நடந்தது) | இந்தியா-தென்னாபிரிக்கா | தென்னாபிரிக்கா சாம்பியன் |
| ஜனவரி 30, 2000 (கார்ல்டன்-யுனைட்டட் கோப்பை) | இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா (அவுஸ்திரேலியாவில் நடந்தது) | இந்தியா-அவுஸ்திரேலியா | அவுஸ்திரேலியா சாம்பியன் |
| நவம்பர், 2000 (ஐ.சி.சி.மினி உலகக் கோப்பை) | டெஸ்ட் அந்தஸ்து பெற்ற நாடுகள் அனைத்தும் (கென்யாவில் நடந்தது) | இந்தியா-நியூஸிலாந்து | நியூஸிலாந்து சாம்பியன் |
| ஜூலை 07, 2001 (கொக்கோ கோலா கோப்பை) | இந்தியா, ஸிம்பாப்வே, மே.இ.தீவுகள் (ஸிம்பாப்வேயில் நடந்தது) | இந்தியா-மே.இ.தீவுகள் | மே.இ.தீவுகள் சாம்பியன் |
| ஆகஸ்ட் 05, 2001 (கொக்கோ கோலா கோப்பை) | இந்தியா, இலங்கை, நியூஸிலாந்து (இலங்கையில் நடந்தது) | இந்தியா-இலங்கை | இலங்கை சாம்பியன் |

கடைசியாக இந்திய அணி 1999ம் ஆண்டு நியூஸிலாந்துக்கெதிராக பெப்ஸி கோப்பையை வென்றது. அதன் பின் இறுதிப் போட்டிவரை வந்து கோப்பையை வெற்றி கொள்ளாமல் 'சாதனை' செய்து வருகிறது.

## கில்கிறைஸ்ட் தலைமை தாங்குகிறார்

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் 'ஆஷஷ்' கோப்பைக்கான டெஸ்ட் தொடரின் 3வது டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலம் 5 டெஸ்டுகள் கொண்ட தொடரில் 3-0 என்ற கணக்கில் தொடரை வென்று 'ஆஷஷ் கோப்பையை மறுபடி தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இது அவுஸ்திரேலிய அணிக்குக் கிடைத்த தொடர்ச்சியான 7வது 'ஆஷஷ்' கோப்பை வெற்றியாகும். இதன் மூலம் ஏற்கனவே இங்கிலாந்து தொடர்ச்சியாக 7 ஆஷஷ் தொடர்களை வென்று படைத்த சாதனையைச் சமப்படுத்தியுள்ளது அவுஸ்திரேலியா.

அவுஸ்திரேலிய அணியின் உதவிக் கப்டனும் விக்கெட் கீப்பருமான அடம் கில்கிறைஸ்ட் இங்கிலாந்துக்கெதிரான 4வது டெஸ்ட் போட்டியில் விளையாடும் அவுஸ்திரேலிய அணிக்குத் தலைமை தாங்குகிறார்.

ட்ரெஸ்ட் பிரிட்ஜில் நடந்த 3வது டெஸ்ட்டில் காயமடைந்த அவுஸ்திரேலிய கப்டன் ஸ்டீவ் வோவிற்குப் பதிலாகவே கில்கிறைஸ்ட் தலைமைப்பொறுப்பை ஏற்கிறார்.

இதற்கு முன் கடந்த வருடம் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்திருந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் போட்டியொன்றுக்கு கில்கிறைஸ்ட் தலைமைத் தாங்கி அணிக்கு வெற்றி பெற்றுக்கொடுத்துள்ளார்.

வரும் 16ம் திகதி ஹெட்டிங்லியில் தொடங்கவுள்ள 4வது டெஸ்ட்டிற்கு கில்கிறைஸ்ட் கப்டனாகவும் றிக்கி பொண்டிங் உதவி கப்டனாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அடுத்த உலகக் கோப்பை

அடுத்த உலகக்கோப்பைக் கிரிக்கெட் போட்டி எங்கு நடக்கவுள்ளது என்று கேட்டால், உடனே தென்னாபிரிக்காவில் என்று பதில் கூறிவிடுவீர்கள்.

2003ல் நடக்கும் உலகக்கோப்பைப் போட்டி தென்னாபிரிக்காவில் நடக்கிறது. இதற்கு அடுத்து நடைபெறும் 2007 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி எங்கு நடக்கவுள்ளது என்று தெரியுமா? மேற்கிந்தியத் தீவுகளில்.

# பாவை அவள் பாதங்கள்



தனியே அமர்ந்திருந்த ராகவன் கண்களில் அந்தச் சிறு குருவி விழுந்தது.

கழுத்தை வெடுக் வெடுக்கெனத் திருப்பிப் பார்த்தது. பின் தத்தித் தத்தி நடந்தது. குனிந்து எதையோ பொறுக்கியது.

பிறகு தத்தியது.

சத்தமின்றிக் கால்களை எடுத்து வைத்து அசைவுறும் அந்தக் குருவி அவனைத் திரும்பி ஒரு முறை பார்க்கச் செய்தது. அவளும் கள்ளி இப்படித்தான், சத்தமில்லாமலே பின்னால் வந்து இருந்து விடுவாள்.

எதேச்சையாகத் திரும்பிக் கண்டதில் ஆச்சரியமடைந்து பார்த்தால்-

தான் எப்போதோ வந்து இதிலேயேதானே நெடுநேரமாக இருக்கிறேன் என்பது போன்ற பாவனையில் தலைகுனிந்து இருப்பாள்.

இப்படித்தான்!

கொலுசுகள் சத்தமிடாமலும் வந்து கொல்லுவாள். ஆளே வராமல் எங்கெங்கோ கேட்கும் கொலுசுச் சத்தங்களிலும் அவளா என்று தேடவைத்துக் கொல்லுவாள்.

இதய வயலுக்குள் பாத்தி கட்டி வைத்திருந்த காதல்வித்துக்குள் அவள் நினைவு நீராய் விழுந்து நனைக்க.. முளைத்த செடி இலைகளை விரித்து ஆடியது.

'வாய் விட்டு அரற்றும் சிலம்புகளை அணிந்த காலினாள்' என்று மாதவி நடையை இளங்கோ எழுதுவதைப் போல இவள்... அரற்றும் கொலுசுகளையும், அவ்வப்போது வாய்பொத்தி அமைதியாக வரும் கொலுசுகளையும் கொண்டு நடப்பவள்.

காற் கொலுசுகளின் ஒலி அவள் காதலைப் பேசும் என்பது கண்ணதாசன் அனுபவம்.

பேசாத இவள் கொலுசும் காதலையே அள்ளிக் கொட்டும்.

'நாதமிசைத்து வரும் பாதமணிக் கொலுசு' என்பதெல்லாம் சரிதான். அவற்றின் மௌனமும் பெரிய இசைதான்!

## இலக்கிய நயம்

கொலுசுகளின் அழுத்தத்திற்கே சிவந்துவிடும் பாதங்கள் அவளுக்கு.

எத்தனை எத்தனை விதமாய்ச் சொல்லிப் பார்த்திருக்கிறார்கள் பாதங்களின் மென்மையை! என்னவளின் பாத மென்மையை எந்தக் கொம்பனும் சொல்லவில்லை.

நீர்க் குமிழிகளைக் காட்டிலும் மென்மையான சிறிய பாதங்களாம் சீதைக்கு. கம்பன் சொல்கிறான்.

'பஞ்சு மெல் அடிப் பாவை'யாம்!

அந்தப் பஞ்சு போன்ற மென் பாதங்கள் நடப்பதற்காகக் காட்டில் பஞ்சுபோன்ற தன் வெள்ளை ஒளியை வான் நிலா பரப்பிவிடுகிறதாம்! அந்தப் பஞ்சு ஒளியில் சீதையின் பிஞ்சுப் பாதங்கள் நடந்து போனதாம்!

அடடா! இவள் பாவி, இந்த வெறுந் தரையில் நடந்து வரப் போகிறாளே!

பாவம், அந்த நிலவுக்கே அவள் பாதகங்கள்தான் ஒளி தர வேண்டும்.

ஆனாலும் அவற்றை ஒளித்தே வைத்துக் கொள்வாள் சுயநலக்காரி!

தரையைக் கூட்டும் பாவாடை.

அதற்குள் வைத்தீஸ்வரன் பார்த்த அந்த வெண்முயல்கள் பதுங்கிப் பதுங்கி வரும்.

பாத மலர்!

வெயில் எரிக்கும் வெற்றுத் தரையில் நடந்து வரும் மலர்ப் பாதங்கள்!

மலர்கள் எங்காவது நடக்குமா? நடந்து நடந்து தன் ஒளியைத் தரையெங்கும் பரவ விடுமா?

ஊஹூம்!

நடக்காமல் நகராமல் செடியிலேயே நின்று அழகு காட்டும் மலர்கள்!

பாதங்களால் பழிக்கப்படும் மலர்கள்!

தண்டும் முள்ளும் தாங்கும் மலர்கள் பாவம் !

மலர்ச் சுமையைத் தாங்கும் இரு மலர்கள்-அவள் பாதங்கள்.

அடடா, உனது பாதம் இலவம் பஞ்சு!

நடக்கும் போது துடிக்கும் எனது நெஞ்சு!

பாவாடை சற்றே விலகுகிற போதெல்லாம் ஒளி வீசியபடி நடந்துவரப் போகும் அந்தப் பாதங்களை எதிர்நோக்கி, கண்ணுக்கெட்டிய தூரம் பார்த்தான் ராகவன்.

தூரத்தே அடிவானம் சிவந்திருந்தது.

உயரே வெண்பஞ்சாக மிதந்த மேகங்கள் அடிவானத்துக்கு இறங்கி மண்ணைத் தொடுவது போலிருக்கும் அந்த இடத்தில் சிவந்திருந்தன.

அடடா! மண் தொட்டுச் சிவப்பவைதானே அவள் பாதங்களும்!

காற்றே!

அவள் வரும் வழியில் உள்ள இலைகளையும் சருகுகளையும் விலக்கி வை.

தருவது முழடில்யன்

எங்கிருந்தாவது இலவம் பஞ்சுகளைக் கொண்டுவந்து தூவு.

அல்லது அந்தப் பஞ்சு மேகங்களை மண்ணில் பரப்பிவிட முடியாதா?

ஊ ஹூம்.. எதைப் பரப்பியென்ன? எல்லாமே என்னவளின் பாதங்களை உறுத்தவே செய்யும்.

அனிச்ச மலராயினும் சரி, அன்னப்பறவை இறகாயினும் சரி, எல்லாமே நெருஞ்சி முள் தைத்தது போல் துன்புறுத்தக் கூடிய அளவுக்கு என் காதலியின் காலடிகள் அவ்வளவு மென்மையானவை.

**அனிச்சமும் அன்னத்தின் தூவியு மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்.**

(குறள்: 1120)

# சிந்தியா பதில்கள்

**★ சிந்தியா! என் கேள்விகளுக்கு ஏன் நீங்கள் பதில் அளிப்பதில்லை? நான் உங்கள் பத்திரிகையின் வாசகனாவதை விரும்பவில்லையா நீங்கள்?**

டி.ஏ.ஜீவன், கொழும்பு-13.

நான் சண்டை போடாத எல்லோரையும் விரும்புகிறேன் என்று அர்த்தமில்லை. அதுபோல, பதில் தராத எல்லோரையும் நான் விரும்பவில்லை என்றும் அர்த்தமில்லை.

◈◈

**★ 'ஈழத்தில் போர் ஓய்ந்து தேன்முல்லை பூப்பூத்து நீ சூடத் தரவேண்டும்' என்றொரு பாடலிலும் வருகிறது. தேன்முல்லை பூப்பதெப்போது?**

எஸ்.டி.நிஷா, களுபோவில.



யாரோ செடியை நடுவார்கள். வேறொருத்தர் நீர் வார்ப்பார். இன்னுமொருவர் உரமிடுவார். வேறும் ஒருவர் சுற்றிவர வேலியிட்டுப் பராமரிப்பார். நாமெல்லோரும் 'எப்படா பூப்பூக்கும்' என்று வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தால், இன்னொருவர் வந்து செடியைப் பிய்த்தெறிந்துவிட்டு போவார்.

◈◈

**★ முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியைப் பாராட்டுகிறார்கள். நான் ரோஜாவுக்குக் கார் கொடுத்தால்..?**

வி.ஜனகன், மட்டக்களப்பு.

செல்வமணி விடமாட்டார்!

◈◈

**★ 'சீறும் பாம்பை நம்பு, சிரிக்கும் பெண்ணை நம்பாதே' என்று சொல்வது பற்றி..?**

இனியவள், வத்தளை.



தமிழ் நாட்டில் ஆண்கள் ஓட்டும் 'ஓட்டோ'க்களின் பின்னால் இந்த வரிகளைப் பெரும்பாலும் பார்த்திருக்கிறேன். இப்போது பெண்களும் 'ஓட்டோ'க்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றில், 'கண்ணி வெடியை நம்பு. கண்ணடிக்கும் ஆணை நம்பாதே' என்று யாரும் எழுதி வைத்திருக்கவில்லை என்பது அவர்களின் பெருந்தன்மை.

◈◈

**★ தங்களைத் தாங்களே புகழ்ந்து தள்ளுபவர்களைப் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? நீங்கள் எப்படி?**

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

அவர்களைப்போல, என்னை நானே புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்காது. இந்த நல்ல குணத்திற்காகப் பலரும் என்னைப் பாராட்டுவதுண்டு, எனக்குத் தற்புகழ்ச்சி பிடிக்காது என்பதால் அதையும் நான் வெளியே சொல்லிக் கொள்வதில்லை. இந்தத் தன்னடக்கத்திற்காக நீங்களும் என்னைப் புகழப் போகிறீர்கள் என்று தெரியும். அதையெல்லாம் நான் பெரிது படுத்துவதில்லை. என் சுபாவம் அப்படி!

◈◈

**★ ரீமா சென்- ரியா சென் இருவரும் சகோதரிகளா?**

சி.மனோரதி, பாலையடிவட்டை.

சங்கர் மகாதேவனும் நித்யஸ்ரீ மகாதேவனும் சகோதரர்களா? ராஜீவ் மேனன், சுரேஷ்மேனன், உன்னி மேனன் மூவரும் சகோதரர்களா? ஆர்.பி.சௌத்ரியின் மகளா ராதிகா சௌத்ரி? 'வெற்றிக் கொடி கட்டு' பாடிய ஸ்ரீராமும் அனுராதா ஸ்ரீராமும் உறவினர்களா? நடிகர் ஜெயராமுக்கு உறவா காயத்ரி ஜெயராம்? பார்வதி விஜய்யும் சங்கீத விஜய்யும் உறவுக்காரர்களா? எல்லாவற்றுக்கும் பதில் 'இல்லை'

◈◈

**★ சிறுபான்மையினக் கட்சிகள் சில சர்வசன வாக்கெடுப்பைத் தீவிரமாக எதிர்க்கின்றனவே?**

மா.புனிதராஜன், கொழும்பு-12.

அவர்களுக்குத்தான் அவர்களது வேதனை புரியும். "அரசியல் யாப்பை மாற்று; அதிகாரங்களைப் பகிர்ந் தளி" என்று உரத்துக் கேட்டுக் கொண்டே இருப்பதற்கான சூழல் இருந்தால்தான் அவர்களால் அரசியல் செய்ய முடியும். அரசியல் யாப்பை மாற்றி அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது என்று மெய்மெய்யாக வந்துவிட்டால்... அடிவயிற்றிலிருந்துதான் அலறல் வரும்.

◈◈

**★ இந்தியாவில் புதிதாக யாரோ பத்மானந்தா சுவாமி என்பவர் எய்ட்ஸ், கான்சருக்கு எல்லாம் புதிய மருந்து கொடுத்து அருள்புரிகிறாராமே?**

ஏ.பகீரதன், பூந்தோட்டம்.

எய்ட்ஸுக்கும் மருந்து கண்டுபிடித்து விடக்கூடும். மூட நம்பிக்கைக்கு ஏது மருந்து?

◈◈



**★ இரண்டெழுத்தாருக்குப் பிடிக்கும் என்பதற்காக கூட்டணியினர் ஐ.தே.வுடன் கூடிக் குலாவி ஒப்பந்தமெல்லாம் கையெழுத்திட்டு வருகிறார்கள். இதுவே பிறகொரு நாள் இவர்களைத் தீர்த்துக் கட்டுவதற்கும் போதுமான காரணமாக இருக்கப் போகிறது என்பதை ஏன் இவர்கள் உணரவில்லை?**

கே.அன்னலிங்கம், யாழ்ப்பாணம்.



வெளியாகும் புத்தகங்களுக்கு அவ்வப்போது எழுதிய விமர்சனங்களை எல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாகப் போட்டால் அந்தப் புத்தகத்துக்கும் ஒரு விமர்சனம் எழுதப்படுமல்லவா... அதைப் போல... இதிலிருந்தெல்லாம் தப்பிக்க வழியே இல்லை. வேறு என்ன செய்வார்கள் பாவம்! அரசோடு இணைந்து நின்று இப்போதே 'போவதை' விட எதிர்க் கட்சியோடு நின்றால் கொஞ்சம் தள்ளிப் போடலாம், அவ்வளவுதான்!

◈◈



**★ இறுதிப் போட்டி எப்படி சிந்தியா?**

அ.அப்துல் ரவூப், மூதூர்-01.

அணி ஒற்றுமையும், விளையாடும் போட்டியில் வெற்றி பெறுவதைத் தவிர வேறு நோக்கங்கள் எதுவும் குறுக்கிடாத விளையாட்டு அர்ப்பணமும் எப்போதும் வெற்றிகளைத் தந்து கொண்டிருக்கும். இலங்கை அணியிடம் இது மாறிவிடாதிருக்க வேண்டும்.

அது ஒரு புற மிருக்க, வெற்றிக் கிண்ணங்களைச் சுவீகரிப்பதற்கான வித்தைகளைச் சொல்லித் தரும் வட்மோர், கிண்ணங்களை வெற்றி கொண்டபின் நாகரீகமாகப் பேசும் வித்தையையும் சொல்லித் தரக் கூடாதா?

◈◈

**★ விஜய், பிரசாந்த், அஜித் மூவரில் ஆணழகர் யார்?**

கவிதா, அக்கரைப்பற்று-07.

அஜித் நடிப்பில் அழகர். விதவிதமான கதாபாத்திரங்களையும் கதைகளையும் தெரிவு செய்து கஷ்டப்பட்டு நடிப்பதன் மூலம் ரசிகர்கள் நெஞ்சில் இடம்பிடித்துக் கொள்கிறார். விஜய்க்கு நகைச்சுவையும் குறும்பும் மிகப் பெரிய அழகு. எப்போதும் அவர் சலிக்க மாட்டார், ரசிக்கலாம். பிரசாந்த் ஆணழகர். அதனால்தான் வேறு எது இல்லாதபோதும் அவர் தாக்குப்பிடிக்கிறார்.

◈◈

**★ என் அபிமானப் பாடகி ஹரிணியின் முகவரியைத் தருவீர்களா?**

என்.ஹரிணி, நாவலப்பிட்டிய.

விரைவில் முகவரி மாறப்போகிறார் ஹரிணி. அண்மையில் தேவா குழுவினருடன் இலங்கை வந்து சென்ற புதிய இளம் பின்னணிப் பாடகர் 'திப்பு' வைக் கல்யாணம் செய்துகொள்ள இருக்கிறார். முகவரியை அதன்பிறகு தருகிறேன்.

# மன்னாதி மன்னன் 70

அச்சுதபுரத்து அரசன் அச்சுதவர்மனிடம் விடை பெற்றுக் கொண்டு மதுராபுரி நோக்கிப் புறப்பட ஆயத்தமானார் விக்கிரமாதித்தன். விடை பெறுவதற்காக அரசனை அவருடைய அரண்மனையில் கண்டு தான் நாகபுரம் சென்றபோது நாகேந்திரனுடைய மகள் நாகவல்லியைத் திருமணம் செய்து கொண்டதாகவும் கூறினார்.

அச்சுதபுரத்து இளவரசி அச்சுதவல்லியையும், அவளுடைய மூன்று சகோதரிகளையும் அழைத்துக் கொண்டு கடற்கரைக்கு வந்தபோது அனந்தன் இவர்களுக்காக பெரிய தோணி வடிலில் காத்திருந்தான். அதில் அவர்கள் ஆறு பேரும் ஏறி அமர்ந்ததும் கனவேகத்தில் சென்ற அனந்தன், மதுராபுரி கடற்கரையில் அவர்களைக் கொண்டு வந்து இறக்கிவிட்டான். அங்கிருந்து உடனடியாக வேதாளத்தின் உதவியுடன் விக்கிரமாதித்தனுக்காக கொடுக்கப்பட்டிருந்த மாளிகையைச் சென்றடைந்தனர்.

இவர்களைக் கண்டதும் இரத்தினமாலை, மரப்பாலையாகவிருந்த முத்து நகையை எழுப்பிவிட்டாள். பின்னர் இரத்தினமாலை சமையலறைக்குச் சென்று அனைவருக்கும் இரவு உணவு சமைக்க ஆரம்பித்தாள்.

அப்பொழுதுதான் பகல் நேரம் முடிவடைந்து இருள் பரவுவதற்காக அறிகுறிகள் தென்பட்டன. விக்கிரமாதித்தனுடன் வந்திருந்த நாகவல்லி இரத்தின மாலையின் அருவருப்பான தோற்றத்தினைக் கண்டு வெறுப்படைந்தாள். அவள் எந்தக் காலத்திலேயுமே கண்டிராத அவலட்சணமான உருவத்தில் ஒரு பெண் தன் கணவன் வீட்டில் நடமாடுவதைக் கண்டு, எதற்காக நாம் இங்கு வந்தோம்' என்று தன்னைத்தானே நொந்துக் கொண்டாள்.

கிறாய்" நீ பார்த்த அந்தப் பெண்தான் உங்கள் எல்லோரையும் விட பேரழகி என்பதை நீ அறியமாட்டாய். அவளை இப் போதே இங்கு அழைக்கிறேன். நீயே தீர் மானித்துக் கொள்" என்று கூறிவிட்டு அடுக்களையின் உள்ளே திரும்பி "இரத்தினமாலை!" என்று அழைத்தார்.

அவள் அழகான உருவில் வந்து தோற்றமளித்தாள். அந்த பேரழகியைக் கண்ட நாகவல்லி திகைத்துப்போய் நின்றாள். நாகவல்லியை ஆசுவாசப்படுத்திவிட்டு, விக்கிரமாதித்தன் இரத்தினமாலையின் கதையைக் கூறினார்.

பகலில் கோர உருவிலும் இரவில் பேரழகான யுவதியாகவும் இரத்தினமாலை மாற்றம் பெறுவதற்கான உண்மையான காரணத்தை அறிந்து நாகவல்லி இரத்தின மாலையின் கால்களில் விழுந்து நமஸ்கரித்து "உண்மை அறியாமல் தவறு செய்த என்னை மன்னித்து விடுங்கள் அக்கா?" என்று கூறினாள்.

நாகவல்லியை குனிந்து அவள் தோள் தொட்டு எழுப்பி வாஞ்சையுடன் தழுவிக் கொண்டாள் இரத்தினமாலை.

அனைவரும் உள்ளே சென்று அறுசுவை உணவை உண்டு களித்தனர்.

அரண்மனையில் மன்னன் மகேந்திரன் தன்னுடைய மந்திரியை அழைத்து, "இரத்தின கற்களை கொண்டுவருவதாக அறுபது நாள் தவணை பெற்றுச் சென்ற தளபதி ஆதித்தன் இதுவரை வரவில்லை இன்றுடன் 60 நாட்கள் முடிவடைகின்றன.

இன்றிரவுக்குள் ஆதித்தன் இரத்தின மாலையுடன் வந்து சேராவிட்டால் நாளை அவனுக்கு இந்த நாட்டுக்குள் பிரவேசிக்கக் கூடாது என்று அறிவித்து விட்டு அவனுடைய அரண்மனையில் நான் போய் இருந்து

அடுத்த நாள் பொழுது புலர்ந்ததும் தளபதி ஆதித்தன் நாடு திரும்பி விட்டான் என்ற தகவல் தான் மன்னரின் காதில் விழுந்தது. தீயை மிதித்தவர் போலானார்; மந்திரியை உடனே தன்னிடம் வருமாறு அழைத்தார். இருவரும் அரண்மனைக்குச் சென்று படபடப்புடன் காத்திருந்தனர். தன்னுடைய ஆசை வெறும் பகற் கனவாகப் போய் விட்டதே என்று மன்னர் கவலையிலாழ்ந்தார்.

உரிய நேரத்தில் ஆதித்தனாகிய விக்கிரமாதித்தன் மன்னரை வந்து கண்டார்; கொண்டு வந்திருந்த இரத்தினக்கற்களையும் ஒரு கம்பளத்தில் கொட்டிப்பரப்பினார். இதனைப்பார்த்து மன்னனும் மந்திரியும் வியப்படைவது போல் பாசாங்கு காட்டினரே தவிர உண்மையில் மனத்துள் பொறாமைத்தீயால் பொசுங்கினர்.

இருவரும் ஆதித்தனைப் பாராட்டினர். மன்னர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, எத்தனையோ இடையூறுகளையும் எதிர்கொண்டு இரத்தினக் கற்களைத் திரட்டிக் கொண்டு வந்தமைக்காகப் பாராட்டினர்.

விக்கிரமாதித்தன் மாலையில் தன் இருப்பிடம் திரும்பும்போது அவருடன் வழக்கமாக அவர் மாளிகை வரை செல்லும் கார்க் கோடகனும் புறப்பட்டனர்.

அவர்கள் இருவரையும் அழைத்துச் சென்ற விக்கிரமாதித்தன், தான் சென்ற இடங்களிலிருந்து கொண்டு வந்திருந்த உணவுப் பண்டங்களைக் கொடுத்து உபசரித்து வழியனுப்பி வைத்தார். அவர்கள் இருவருடைய கவனமும் தின்பண்டங்களில் லயிக்கவில்லை. மாளிகையின் உட்புறத்திலுள்ள நடமாட்டங்களில்தான் அவர்கள் கவனம் இருந்தது.

எப்படியோ அவர்களுடைய கண்களில், ஏற்கனவே இருந்த பேரழகிகளுள் மேலும்

அறுசுவையுடன் உணவினைத் தயாரித்த இரத்தினமாலை விக்கிரமாதித் தனையும் ஏனைய பெண்களையும் அமர வைத்து இலை போட்டு உணவு பரிமாறினாள். இத்தகைய அருவருப்பான முகத்தையுடைய ஒரு பெண்ணினுடைய கைகளினால் சமைக்கப் பட்ட உணவை எமது மன்னர் எப்படித்தான்



சாப்பிடுகிறாரோ என்று பலவாறு யோசிக்கலானாள் நாகவல்லி.

பரிமாறப்பட்ட உணவை எல்லோரும் சுவைத்து உண்ணத் தலைப்பட்டனர். ஆனால் நாகவல்லி உணவை உண்ணாமல் வேறுபுறம் தனது பார்வையைத் திருப்பிக் கொண்டு கோபத்துடன் அமர்ந்திருந்தாள்.

விக்கிரமாதித்தன் நாகவல்லியின் அருகில் சென்று "நீ எதற்காக உணவை உட்கொள்ளாமல் வெறுப்படைந்து போயிருக்கிறாய்? உன் பெற்றாரை விட்டுவந்து விட்டது துக்கமாக இருக்கிறதா?" என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த நாகவல்லி "படுமோசமான முகமுடையவளை எவ்வாறு நீங்கள் உங்கள் மனைவியாக ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். இத்தகைய கோர உருவமுடைய ஒருத்தியின் கையால் சமைத்த உணவை என்னால் எவ்வாறு உண்ண முடியும்? அவளைப் பார்த்தாலே குமட்டுகிறது" என்று வாந்தி எடுக்கத் தொடங்கினாள்.

நாகவல்லியின் புலம்பலைக் கேட்ட விக்கிரமாதித்தன், "இதற்காகத்தானா கலங்கு

கொள்ளுவேன்" என்று மன்னன் கோபத்துடன் சொன்னான். மன்னனுக்கு ஆறுதல் கூறிய மந்திரி "மன்னரே! அவசரப்பட வேண்டாம் நாளைவரை பொறுத்துப்பார்ப்போம். நாளை அவன் வராவிட்டால் பார்த்துக் கொள்ளுவோம்" என்று கூறி அரசனை அமைதிப்படுத்தினான்.

அந்தப்புரம் சென்று படுக்கையில் வீழ்ந்த மன்னன் மகேந்திரனுக்கு அன்று தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான்.

தளபதி ஆதித்தன் இதோடு தொலைந்து விட்டான். இனி அவன் வரவே மாட்டான் ஆகவே ஆதித்தனுடைய மனைவியர் இருவரையும் நாளை முதல் நானே சுகித்திருக்கப் போகிறேன்' என்று ஆறுதலுற்றான்,

தளபதி நாடுதிரும்பவில்லை என்று கருதிய மன்னன் மகேந்திரன், அடுத்தநாள் தான் பெருமகிழ்ச்சி அடையப் போவதை எண்ணி கனவு கண்டு, சரியான உறக்கமின்றி தவித்தான்.

## இராஜகுமாரன்

ஐந்து அழகிகள் சேர்ந்திருப்பதைக்கண்டு விட்டனர். இந்த அதிசயத்தை அன்றிரவே அரண்மனைக்குச் சென்று அரசனிடமும் மந்திரியிடமும் கூறிவிட்டனர்.

மந்திரியைத் தன்னிடம்அழைத்த மன்னர் மகேந்திரன், தளபதிக்கு முடிவு கட்டிவிடலாம் என்று அவருக்குப் பொறுப்பான பணிகளைக் கொடுத்தோம். ஆனால் அவன் ஒவ்வொரு தடவையும் பேரழகிகளை அழைத்துக் கொண்டுவந்து சேர்த்து விடுகிறானே.. என்ன செய்வது?" என்று புலம்பினார்.

"தளபதியை உயிருடன் திரும்பாமல் செய்வதற்கு ஒரேயொரு வழிதான் இருக்கிறது; என்று மன்னருடைய காதில் இரகசியமாக ஏதோ சொன்னார். அதைக் கேட்ட மன்னரின் முகத்தில் மலர்ச்சி தென்பட்டது.

*(மன்னன் வருவான்...)*

# காதில பூ கந்தசாமி

கீழுள்ள சத்தியக் கடதாசியில் கண்ணை மூடிக் கொண்டு கையெழுத்திட்ட பின்னர்தான் நீங்கள் மேற்கொண்டு வாசிக்க அனுமதி பெற்றவர்களாவீர்கள். அதனை வெட்டி, அல்லது போட்டோ பிரதி செய்து 'காதில பூ கந்தசாமி' என்ற தலைப்பில் தினமுரசுக்கு அனுப்புவோர் அபிமான வாசகர் போட்டியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுவீர்கள். விபரம் கீழே.

## சத்தியக் கடதாசி:

நோட்டீஸ் பலகையிலுள்ள காதில பூ கந்தசாமியின் சத்திய வாக்கியத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு, எனக்குச் சுயமாகச் சிந்திக்கும் உரிமை இல்லையென ஏற்றுக்கொண்டு, அவர் கூறுகின்ற அத்தனை பொய்களையும் எள்ளளவு சந்தேகமுமின்றி நம்புவேன், அதைத் தவிர வேறொன்றையும் நம்பமாட்டேன், இப்படி நம்புவதன் விளைவுகளுக்கு நானே பொறுப்பாளியென சுய நினைவுடன் இத்தால் நான் உறுதியளிக்கிறேன்.

திகதி:................ பெயர்:.................... ஒப்பம்:...................



**நோட்டீஸ் பலகை**

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை

*-காதில பூ கந்தசாமி*

**அபிமான வாசகர் போட்டியில் ஏழாவது: தமிழ் அரசியல்வாதிகளில் புளுகர் மன்னரென்று முடிசூடக்கூடிய புளுகரொருவரையும் அவர் கூறிய அதி பெரும் புளுகையும் எழுதுக. முடிவுத் திகதி ஆகஸ்ட் 31.**

பாம்பின் கால் பாம்பறியும் பாருங்கோ. இதென்னடா பாம்புக்கும் காலிருக்கோவெண்டு கேப்பியள். கந்தசாமியிண்ட கண்ணுக்குப் பாம்பின்ர கால் என்ன பேயின்ர காலும் தெரியுங்கண்டியளோ. பாம்பின்ர காலப் பாக்க வேணுமெண்டால் பாம்புக்குக் கீழ குனிஞ்சு பாருங்கோ, சரியாக் கடைசி எழுத்தில 'பு'வில நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு உக்குனூண்டிக் கால். அதுதான் கண்டியளோ பாம்பின்ர கால். அதுசரி, நான் சொல்ல வந்த கால் வேற கால். அதாவது கண்டியளோ, எந்தக் கில்லாடி என்ன குத்துவெட்டுச் செய்வானெண்டு எனக்குத் தெரியும். ஏனெண்டால் கண்டியளோ, நான் செய்ய நினைக்கிறதத்தானே அவனும் செய்யப்போறான். இப்ப உதாரணத்துக்குச் சொல்லுறதெண்டால் யு.பி. மகேசன டீவியில பேச விட்டால் என்ன பேசுவாரெண்டு எனக்குத் தெரியும். அவர் கட்டாயம் தமிழ்க் குடிமகனின்ர உரிமைப் பிரச்சனையத்தான் கேப்பாரெண்டதில எந்த டவுட்டுமில்லை. ஒரு தமிழ்க் குடிமகனுக்கு யாழ்ப்பாணத்துக்குப் பிளேனில போக உரிமை இல்லையா? ஒரு தமிழ்க் குடிமகன் ஒரு பத்துப்பேரத் தன்னோட அதே பிளேனில கூட்டிக் கொண்டு போக உரிமை இல்லையா? ஒரு பத்துப் பேற்ர கையில பத்து பாக்குகளக் குடுத்துவிட உரிமை இல்லையா? அந்தப் பத்து பாக்குக்குள்ளயும் ஒரு பத்துப் பதினைஞ்சு லட்சம் பெறுமதியான மணிக்கூடுகள ஏத்தி அனுப்ப உரிமையில்லையா? இதெல்லாம் தமிழற்ர உரிமைப் பிரச்சனை சம்பந்தமான நியாயமான கேள்விகள் கண்டியளோ. ஆனால் நம்மாள் இவ்வளத்தையும் நீட்டி முளங்கக் கூடாதெண்டதுக்காக ஷோட் அன்ட் சுவீட்டா தன்னோட, யாழ்ப்பாணத்துக்கு ஆக்களக் கூட்டிக்கொண்டு போக பிளேனில விடுகினமில்லையெண்டு மட்டும் சொல்லிட்டு விட்டிட்டார். ஆனால் எனக்குத்தான் தெரியும் பின்னால இருக்கிற விஷயம்.

அதுதான் போகட்டும், இன்னும் எத்தினையோ விசயமிருக்குது சொல்லிறதுக்கு. நான் ஒரு விசரன் மாதிரி விசரற்ர கதையளக் கதைச்சு விசர்த்தனமா வீணாக்கிறன் நேரத்தை. செய்தியள் வாசிக்கிறன். கேளுங்கோ.

பூலான் தேவியைக் கொலைசெய்து யாரென்று கொலைசெய்தவர்கள்தான் சொல்லவேண்டுமென்றும் அதுவரை இக் கொலையைக் கண்டிக்க முடியதென்றும் கண்டன அறிக்கை விடுத்துள்ள தமிழ் வியாபாரக் கூத்தணி அதில் கூத்தணி உறுப்பினர்கள் பலர் கொலை செய்யப்பட்டுள்ள போதிலும் தாம் ஒருபோதும் கொலையாளிகளைக் கண்டிக்கவில்லையென்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

அவசரமாக அனுப்பப்பட்ட தந்திகள் காலதாமதமாகிக் கிடைப்பதாகத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டுக்குப் பதிலளித்த தபால் தந்தி அமைச்சர் அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிட்டமையாலேயே இச் சேவைகள் ஆறுதலாக நடைபெறுவதாக விளக்கமளித்துள்ளார். அதுமட்டுமன்றி தங்கள் சுயநல அரசியலுக்காக எதிர்க்கட்சிகள் அவசரகாலச் சட்டத்தை நீங்க வைத்தமையால் வைத்திய சாலைகளில் அவசர சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளதாயும் அவசரப் புகையிரதங்கள் பஸ் சேவை கள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாயும், கட்டடங்களில் அவசர அபாய மணிகள் அகற்றப் பட்டுள்ளதாயும் தெரிவித்த அமைச்சர் இவை யாவும் திரும்பவும் அமுல்படுத்தப்பட்டு நாட்டில் சுமுக நிலை தோன்றி சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் மீண்டும் அவசர காலச் சட்டத்தை அமுல்ப்படுத்தும் ஜனநாயக உரிமையை மக்கள் வலியுறுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

விமான நிலையத்தைப் பாதுகாக்கவென பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளெல்லாம் செய்து பயணிகளைப் படாத பாடுபடுத்திப் பயணமனுப்ப வருபவர்களைப் பாதி வழியிலேயே திருப்பியனுப்பிவிட்டும்கூட எப்படிப் பயங்கரவாதிகளை மட்டும் எந்தவித செக்கிங்குமில்லாமல் நேராக விமானங்களுக்குப் பொடிநடையில போய் வெடி வைச்சுத் தகர்த்துவிட்டுப் போக விட்டீர்கள் என்று ஸ்ரீமான் பொதுஜனம் கேட்ட கேள்விக்குப் பதில் தயாரித்துக் கொண்டிருக்கும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அடுத்த பட்ஜெட்டுக்கு முன்னர் இதற்கான பதிலைத் தயாரித்து முடித்துவிட முடியுமென நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொம்பியூட்டர்களில் பரவிவரும் புதுவித வைரஸ் நோயைக் கட்டுப்படுத்துவதுபற்றி சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிவுறுத்தலில், இந்த வைரஸ் ஈமெயில் மூலமாகவே தொத்துவதால் கம்பியூட்டர்களை ஈக்கள் நிறைந்த இடங்களில் வைத்திருக்க வேண்டாமெனவும், ஈ மொய்க்காவண்ணம் கொசு வலைகளைப் பாவிப்பது பாதுகாப்பான வழியெனவும் அறிவுறுத்தியுள்ளது. அத்துடன் வைரஸ் தொற்றலுக்குள்ளான கொம்யூட்டரில் தூக்கக் குணமும் சோர்வும் தென்படுமெனவும் உடல் சூடாயிருக்குமெனவும் வின்ட் ஸ்கிறீன் வாட்டமடைந்து காணப்படுமெனவும், அடிக்கடி கடைசியாகக் கொடுத்த புளொப்பி டிஸ்கினைத் திரும்பத் திரும்பக் கேட்டபடி இருக்குமெனவும், புதிதாக எந்த டிஸ்க்கைத் தீத்தினாலும் உடனடியாக வாந்தியெடுக்குமெனவும் இத்தகைய அறிகுறிகள் தென்பட்டால் வைரஸ் தொற்றியுள்ளதென சந்தேகித்து கம்யூட்டரை உடனடியாக மற்றைய கம்யூட்டர்களிடமிருந்து தனிமைப்படுத்தி தனி அறையில் வைக்கும் படியும், காலதாமதமின்றி உடனடியாக வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லும்படியும் தெரிவித்துள்ளது.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**



பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் பின்னிப்பேசுகின்றன.
கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.[illegible]
436331


# துள்ளல்

'மௌலின் ரோக்' என்ற இசைப்பாடல்கள் நிறைந்த ஹொலிவூட் படம் சில காலத்திற்கு முன் வெளியாகியது. பாடல்களுக்காகவே இப்படம் வெற்றிகரமாக ஓடி வசூலில் சக்கைபோடு போட்டது. இப்படத்தில் இடம்பெற்ற 'லேடி மார்மலேட்...' என்று தொடங்கும் பாடல் இப்போதும் இசைப்பிரியர்களால் விரும்பிக் கேட்கப்படுகிறது.

இந்தப் பாடலை அண்மையில் கிறிஸ்டினா அக்கியூலேரா என்ற பிரபல கலக்கல் பாடகி தனது மேடை நிகழ்ச்சி ஒன்றில் துள்ளல் நடனத்துடன் பாடி ஆடினார்.

இளம் பொப்பிசைப் பாடகியான கிறிஸ்டினாவின் இசை நிகழ்ச்சியொன்றால் இளம் இரசிகர்களின் கூட்டம் கூடி விடுகிறது. காரணம் அவரது இனிய குரல்வளம், நடன அசைவுகள் மட்டுமன்றி அவரது கவர்ச்சிகரமான தோற்றமுந்தான். படத்தைப் பார்த்தாலே தெரிகிறது என்கிறீர்களா? அதுவும் சரிதான்.




# வேகம்




அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தில் உள்ள மெல்போர்ன் நகரை அண்டிய 'சான்டி பொயின்ட்' கடலில் பாய் விரித்துச் செல்லும் படகுப் போட்டி வருடந்தோறும் நடைபெறுகிறது.

சில வருடங்களுக்கு முன் நடந்த இப்போட்டியில் 'யெல்லோ பேஜஸ்' என்ற விளம்பர நிறுவனம் சார்பில் போட்டியிட்ட டிரிஃபொய்லர் என்ற படகு 86.21 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடிச் சாதனை படைத்துள்ளது.

இதன் பாய் 12 மீட்டர் உயரமுடையது. அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த லிண்ட்சே என்பவர் வடிவமைத்த இப்படகை வேகமாக ஓட்டிச் சாதனை படைத்தவர்கள் சைமன் மெக்கியான்-ரிம் டட்டோ. இவர்களும் அவுஸ்திரேலியர்களே. ■




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
3236[illegible]


# ஆனந்தம்



அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் துருவக் கரடி ஒன்று நீந்துவதை ஆனந்தமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் பார்வையாளர்கள்.

துருவப் பிரதேசத்தில் பனிமலைகளுக்கு மத்தியில் அதிக குளிரில் வாழ்ந்து வந்த இந்தக் கரடி சூட்டைத் தணிப்பதற்காக ஒரு கட்டி ஐஸை அப்படியே சாப்பிடுகிறது.

பிலடெல்பியா நகரில் ஜூன், ஜூலை மாதங்களில் அதிகபட்சமான வெப்பம் இருக்கும். அந்நாட்களில் 'குளிரூட்டிக் கொள்ளுங்கள்' என்ற அறிவித்தலை வானிலை நிலையம் அறிவிக்கும்.

இந்த அறிவித்தல் கரடியின் காதிலும் விழுந்து விட்டது போல் தெரிகிறது. ■

## 1வது பிறந்தநாள் வாழ்த்து 12.08.2001



**செல்வி மதுமிகா முரளிதரன்**

GERMAN ESSEN இல் வசிக்கும் முரளிதரன்-சுதர்ஷினி தம்பதிகளின் செல்வப் புதல்வி மதுமிகா தனது முதலாவது பிறந்தநாளை 12.08.01 அன்று தனதில்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா-அம்மா, அப்பம்மா, அம்மம்மா, கண்ணன் சித்தப்பா, கோபிசித்தப்பா-சித்தி, [illegible] சித்தப்பா, [illegible] பெரியம்மா-பெரியப்பா, [illegible] பெரியம்மா-பெரியப்பா, [illegible] மாமா-மாமி, [illegible] மாமி, [illegible] மாமா, [illegible] பெரியம்மா-பெரியப்பா, [illegible] அன்ரி-அங்கிள் [illegible] மாமா, [illegible] அன்ரி-அங்கிள், [illegible] மாமி மற்றும் [illegible] மச்சான், [illegible] மச்சான், [illegible] மச்சான், [illegible] மச்சான், குட்டித்தம்பி [illegible] மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மதுமிகா பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழகவென ஆசீர்வதித்து வாழ்த்துகிறார்கள்.

தகவல்: [illegible]

# வாய்

பெருவாயர்களை (வாயாடிகளை) கிண்டலடிப்பதற்காக 'வாயென்றால் வங்காள விரிகுடா மாதிரி' என்று கூறுவார்கள்.

இந்தப் பெருவாயர் (வாயாடி அல்ல) அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாநில உவில்ட்டரைச் சேர்ந்தவர். பெயர்-ஜிம் புரோஸ்.

இவர் தனது வாயினுள் மொத்தம் 151 குளிர்பான உறிஞ்சிகளை (ஸ்ட்ரோ) புகுத்தி உலக சாதனை புரிந்துள்ளார்.

1998 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி நடைபெற்ற கின்னஸ் சாதனையாளர்களின் தொலைக்காட்சி ஒளிப்பரப்பின் போது இரசிகர்கள் பலர் முன்னிலையில் மேடையொன்றில் வைத்துச் செய்து காட்டினார் புரோஸ்.

'வாவ்' என்று வாய் பிளக்க வைக்கும் இந்தச் சாதனை இன்னமும் எவராலும் முறியடிக்கப்படவில்லை.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து



கற்கோவளம் கூடத்தனை வைச் சேர்ந்த விஜயகுமார்-ஜெயக்குமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் ஜனாத்தனன் தனது முதலாவது பிறந்தநாளை சிலாபத்தில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

**செல்வன் ஜனாத்தனன் 11.08.2001**

இவரை அன்பு அப்பா London, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, ஐயா, தம்பி கோபி, மூத்த மாமா (Swiss), சின்னமாமா (London), Doha மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், அன்ரமார், பாட்டிமார், தாத்தாமார், அப்பையா குடும்பம் (India), அப்பையா குடும்பம் (Germany), ஐயா (Swiss), அக்காமார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

தகவல்: விஜயகுமார் (அப்பா) London.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவயில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஆக.12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.